Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

அன்பான

**வேண்டுகோள்!**

31-12-1970-ம் திகதியுடன் இனமாக பொருட்களை கொடுக்கும் திட்டம் முற்றுப் பெறுவதால் இத் திகதிக்கு முன்னதாக மில்க்வைற் லேபல்களை கொடுத்து இனம் பொருட்களை பெற்றுக் கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
யாழ்ப்பாணம்.

வாரமலர்

மலர் 12 | கார்த்திகை 6 | ரமழான் 21 | ( 21—11—70 ) | சனிக்கிழமை | இதழ் 282

# 5 லட்சம் சட்ட விரோதமான கூப்பன்கள் இருக்கின்றன!

## அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் வர்த்தக அமைச்சர் தகவல்

கோட்டை, வெள்ளி

நாடுபூராவும் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான சட்ட விரோத பங்கீட்டு அரிசிப் புத்தகங்கள் புழக்கத்தில் இருக்கின்றனவாம். இத்தகவலை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

தற்காலிக வாசகால பர்மிட்டில் தங்கியிருப்பவர்களும், நாட்டுக்கு விரோதமானவர்களும் இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குற்றஞ்சாட்டினர்.

புதிய கூப்பன் புத்தகங்களை வழங்கும்போது இவ்விதம் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை நுணுக்கமாக அவதானிக்குமாறு அமைச்சர் அரசாங்க அதிபர்களிடம் கேட்டுககொண்டார்.

சட்டவிரோத கூப்பன்புத்தகங்களா நாட்டுக்குப் பலத்த நஷ்டம் ஏற்படுவதாகக்கூறிய அமைச்சர், இவைஎன்னவிதத்தில் வழங்கப்பட்டன என்பதைக் கண்டறியுமாறும் அரசாங்கஅதிபர்களைக் கேட்டுக்கொண்டார்.

வர்த்தக அமைச்சர் திரு இலங்கரத்தின மேலும் தெரிவித்ததாவது:-

விலைக்கட்டுப்பாடு பலப்படுத்தப்பட்டு திருத்தப்படுகிறது. அரசாங்கம் எவ்வளவு நடவடிக்கைகளை எடுத்தாலும், பொதுமக்களின் ஆதரவின்றி எதுவுமே செய்யமுடியாது. எனவே பொதுமக்கள் குழுக்களை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பகுதிகளிலும் நியமிக்கவிருக்கிறோம். இதனை அரசாங்க அதிபர்கள் உடனடியாக அமுல் நடத்தவேண்டும்!

கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றங்களிலும் நிறுவப்படவிருக்கிறது மாகாண ரீதியில் 36 கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்கள் நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## கி. வா. ஜகந்நாதன் நாளை வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

தமிழறிஞர் திரு. கி. வா. ஜகந்நாதன் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்: நாளைக்காலை விமானமூலம் இங்கு வந்துசேரும் கி. வா.ஜ. நீர்வேலிக் கந்தசாமி கோவிலடியிலுள்ள திரு. எஸ். ராஜேந்திரக் குருக்களின் இல்லத்தில் தங்கியிருப்பார்.

இருதினங்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அறிஞர் கி. வா. ஜ. திரு தினங்களிலும் நீர்வேலியிலும் காரைநகரிலும் சொற்பொழிவாற்ற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற திரு செ. தனபாலசிங்கனின் 'கீதை அமுதம்' நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பு வந்த கி. வா. ஜ. பல இடங்களிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார்.

## ஹாலிம் ஐசாக்மீது ஒழுங்கு நடவடிக்கை?

கொழும்பு, வெள்ளி

கல்வி அமைச்சரின் மதிப்பைக்குறைக்க எத்தனித்ததாக ஹாலிம் ஐசாக் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே ஒரு பகுதியினர் நெருக்கத் தொடங்கியுள்ளனர்

ஹாலிம் ஐசாக், சென்ற தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராகப்போட்டியிட்டவர் கட்சியின் உபதலைவர்களில் ஒருவருமாவர் சமீபத்தில், கல்வி அமைச்சர் கலந்துகொண்டதேநிர் விருந்துவைபவம் ஒன்றில் கல்விஅமைச்சர் பேசிதாக ஹாலிம் ஐசாக் ஓர் அறிக்கை வெளியிட்டு கல்வி அமைச்சர் தெரிவித்ததாக குறிப்பிட்ட கருத்தைக் கண்டித்திருந்தார் ஹாலிம் ஐசாக்கின் அறிக்கையை அந்த தேநீர் விருந்தில் கலந்துகொண்ட சிலர் மறுத்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 'நேசன்' என்ற பத்திரிகை ஹாலிம் ஐசாக்கின் தாக்குதல் ஐக்கிய முன்னணி அமைச்சர்களை தனியாக்கி தாக்குவதென்றதொரு சதி நடவடிக்கையின் ஓர் அம்சமேயாகும் என்று குறிப்பிட்டுள்ளது அரசாங்கத்தின் சோஷலிச கொள்கைகளை நேரடியாகத் தாக்குவதை விட இதுவே சிறந்த வழி என இவர்கள் கருதுவதாகவும் இப்பத்திரிகை கூறுகிறது

தேநீர் விருந்தில் கலந்துகொண்ட லங்கா சமசமாஜக் கட்சியின் மத்தியகுழு அங்கத்தவரும், காலிமாநகரசபை உறுப்பினருமான மன்சூர் மரைக்கார் எழுதிய கடிதம் ஒன்றையும் இப்பத்திரிகை வெளியிட்டுள்ளது அக்கடிதத்தில் ஹாலிம் ஐசாக் முன்னாள் அமைச்சர் எம் ஏச் முகம்மதின் மைத்துனர் என்றும்குறிப்பிட்டுள்ளார் (சி பி ஏ)

பாடசாலை வளவுக்குள் சென்று

## வாலிபர் கோஷ்டி மாணவரைத் தாக்கியதாம்

அம்பன், வெள்ளி

தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயிலும் சில மாணவர்களை பாடசாலை வளவுக்குள் புகுந்து பருத்தித்துறையிலுள்ள வாலிபர் கோஷ்டியொன்று தாக்கியதாகவும் இதையடுத்து தாக்கப்பட்ட மாணவர்களும் ஆசிரியர் ஒருவரும் பருத்தித்துறைப்பொலிசில் புகார்செய்துவிட்டு திரும்பி வருகையில் அதேகோஷ்டியினர் திரும்பவும் மேற்படி புகார்செய்த மாணவர்களைத் தாக்கியதாகவும் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இங்கு நடைபெற்ற சம்பவத்தின்பின்னர் சைக்கிளிலும் பஸ்ஸிலும் மேற்படி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை சம்பந்தப்பட்ட கோஷ்டியினர் பயமுறுத்தி வருவதாகவும், இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரிதும் அச்சமுற்றிருப்பதாகவும் தெரிகிறது.

## இன்று

இன்று, நல்லூர் நாவலர் நினைவுமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையாரால் நாவலர் குருபூசை நடாத்தப்படுகின்றது.

இவ்விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் தொடக்கவுரை, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் சிறப்புரை; திருவாளர்கள் செ. கதிரேசர்பிள்ளை, குமாரசாமிப்புலவர் ஆகியோரின் புராணபடனமும், இந்துமகளிர் கல்லூரி மாணவிகள், மத்திய கல்லூரி மாணவர்கள் ஆகியோரின் திருமுறை ஓதுதல் ஆகியநிகழ்ச்சிகளும் இடம்பெறும். குருபூசையைத் தொடர்ந்து நல்லூர் சுவாமிநாதர் மடத்தில் மகேசுரபூசை நடைபெறும்.

## கி. பாகிஸ்தான் வெள்ளம்: அரைவாசி மக்கள் பலி?

லண்டன். நவ. 20

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட சூறுவளியினால் இதுவரை அந்நாட்டு மக்களில் அரைப்பங்கினர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பி. பி. ஸி. செய்தி நிருபர் சூறுவளியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இத்தகவலை வெளியிட்டார். இறந்தோர் தொகை 6 லட்சத்துக்கும் 10 லட்சத்துக்குமிடைப்பட்டதாக இருக்கலாம் என்று அவர் கூறுகிறார்.

உத்தியோகபூர்வமான தகவலின்படி 1 லட்சத்து 50 ஆயிரம் பேர்மட்டுமே மாண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உலக நாடுகள் பலவும் நிவாரண உதவிகளை அளித்து வருகின்றபோதிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் உணவின்றி கஷ்டம் அனுபவிப்பதாக அந்த நிருபர் கூறுகிறார். சேற்று நீரை அவர்கள் அருந்துவதாகவும் அவர் தெரிவித்தார். உலக நாடுகள் வழங்கும் உதவிகள் போதாமலிருப்பதாகவும் அவர் சொன்னார்.

ஜோர்டான், லிபியா, லெபனான், சிரியா ஆகிய நாடுகள் உதவிகள் வழங்க முன்வந்துள்ளன. பாரதம் [illegible] 5 [illegible] ஸ்ரேலின் பவுண்டாக அதிகரித்துள்ளது.

## வடக்கில் மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தில் உள்ள கல்லூரிகளின் உயர்வகுப்பு மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம், இம்மாதம் 24-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. தமிழ்மாணவர் பாரபட்சமாக நடத்தப்படுவதை ஆட்சேபித்து, இந்த ஊர்வலம் நடைபெறவிருப்பதாக துண்டுப் பிரசுரங்கள்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது,

நூற்றுக்கணக்கான உயர்வகுப்பு மாணவர்கள் நேற்று பெரியகடைப் பகுதிகளிலும், மற்றும் இடங்களிலும் ஊர்வலமாகச் சென்று தமது இயக்கத்திற்கு ஆதரவு திரட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச் செல்வமே மேலான சீதனம்

'கனீர்' என்ற வெண்கலக் குரல், சுருதி சுத்தம், லய சுத்தம், சபைக்கான தோற்றம் இத்தகுதிகளுடன் ஒரு புதிய இசை நட்சத்திரம் யாழ்ப்பாணத்திலே உதித்துள்ளது. நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற செல்வி புஷ்பகாந்தி இராஜையாவின் அரங்கேற்றத்தில், இசை மேதைகளும், ரஸிகர்களும், அவரது கலையைப் பாராட்டி ஆசி கூறினார்கள்.

விடாது மழைபெய்தது. வெளியில் செல்லவே மனமில்லை. என்றாலும் ஏராளமான ரஸிகர்கள், மண்டபத்தில் கூடி, இரவு 10 மணி வரையிலும் இருந்து கேட்டனர். ஈழத்துச் சிறந்த இசைக்கலைஞர்களில் பெரும்பாலோரும் அங்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இசை அரங்கேற்றம் வைப்பது, புதுக்கலைஞருக்கு ஊக்கமும் உற்சாகமுமளிப்பதற்கே. பாடியபல உருப்படிகளும் இனிமையாகவும் பெருமை கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. கைதட்டி பாராட்டவேண்டுமென்று மனதில் தோன்றினும், தைரியத்துடனும் தாராள மனதுடனும் அவ்விதம் செய்ய ரஸிகர்கள் தயங்குவதேனோ? பாடுவதென்பது இலேசா? மேடையில் ஏறி பாடிப்பார்த்தாலல்லவா அதன் கஷ்டம் தெரியும். இதற்குக் கைமாருக, சற்றே கரகோஷம்செய்யப்படாதா? மேற்கு நாடுகளில் பாட்டுக்குப் பாட்டு பலத்த கரகோஷம் கிடைக்கும். இந்த நிகழ்ச்சியில் பன்முறையும் கரகோஷப் பாராட்டுகளை அக்கலைச் செல்வி மட்டுமன்றி பக்க வாத்தியக்காரரும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

0 0 0

இந்தியாவுக்குச் சென்று நான்கு வருடங்கள் இசை பயிலவும், இந்த அரங்கேற்றத்துக்கும் பல்லாயிரம் ரூபாய் செலவாகியிருக்கும் தனக்காக சீதனம் தேவையில்லை என்றும், கலைப்பயிற்சிக்கு அப்பணத்தைச் செலவு செய்யுமாறும் எப்படியும் உயரிய கலைப் பயிற்சி பெறவேண்டுமென்றும், செல்வி புஷ்பகாந்தி மிக உறுதியாக இருந்து, வித்துவான் பட்டம் மட்டுமன்றி இசை ஆசிரியர் டிப்ளமாவும் பெற்றுப் புகழுடன் திரும்பியுள்ளது பெரிய காரியம். குருவருள் பெற்ற இந்த இளம் கலைச் செல்விக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறதென்பது உறுதி.

இனி சோஷலிஸ அரசியலில சீதன முறைக்கு அதிக இடமிராது சொத்துக்களை அதிகம் சேர்த்தாலோ, வங்கியில் பணம் வைத்தாலோ தாங்க முடியாத வரி செலுத்தவேண்டியிருக்கும். இப்போதே 'லெவி' என்று சொத்து வரி போட்டிருப்பதால், அதிக வீடுகள் கட்

**ஐயாறன் எழுதுகிறார்**

டவோ, தோட்டம் வாங்கவோ விரும்புவதில்லை. இருப்பதை விற்று பணவைக் குறைந்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆகவே சீதனக் கொடுமைகள் வெகுவாகக் குறையக் கூடும். இனி கலைச் செல்வம்தான் பெண்களின் மேலான சீதனமாக இருக்குமல்லவா?

0 0 0

நம் இலங்கைக்கு கலைஞர் யாரும் வர விரும்பினுல், அவர்களுக்கு விஸா அளிக்குமுன் ஒரு நிபந்தனை போடுகிருர்கள். அதாவது இலங்கையில் அவர்கள் பொதுமேடையில் பாடவோ அல்லது வேறு கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவோ கூடாதென்பதுதான் அந்த நிபந்தனை. உதாரணமாக எம். எஸ், இங்கு வர விரும்புவதாக வைத்துக்கொள்வோம். இலங்கையிலே அவர் பொதுமக்கள் மத்தியில் பாடக்கூடாதென்ற நிபந்தனை போட்டால் எப்படி இருக்கும்?

யாரோ சில கள்ளத்தனம் செய்ததாகக் கூறி, எல்லா கலைஞர்களுக்கும் இந்தத் தடைபோடுவது, அக்கலைஞர்களை அல்ல ஈழத்துப் பொதுமக்களை, சிறப்பாகத் தமிழர்களைத் தண்டிப்பதாகும். தலைசிறந்த கலைஞர்கள் இங்கு வரும்போது, டிக்கெட் வைக்காமல் இலவசமாகப்பாட அவர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும். அப்படி அளிக்காவிடில் அது ஈழத்துக்குத்தான் இழுக்கு.

முசிரி சுப்பிரமணியய்யரின் பிரதம சிஷ்யரும், செல்வி புஷ்பகாந்தியின் குருவுமான சங்கீத சாஸ்திர ரத்னகர டி. கே. கோவிந்தராவ் அவர்கள் மலாயாவில் இசை யாத்திரை செய்துவிட்டு இங்கு வந்தபோது அவரது பாஸ்போட்டிலே, இங்கு பொதுமேடையில் பாடப்படாதென்று நிபந்தனை எழுதிவிட்டார்களாம், அதனுல் அவரது சங்கீதத்தை ஈழத்துப் பொதுமக்கள் கேட்க முடியவில்லை. ஒருசிலருக்கு மட்டும் ஒரு வீட்டில் அந்தப் பாக்கியம் கிடைத்ததாம். ஓர் இசையன்பர் மிகப் பிரமாதம் என்றுபாராட்டினுர்.

கள்ளத்தனங்களைத் தடுக்க வேண்டியதுதான். ஆனுல் இவ்வித இசைமேதைகள் வரும்போது அரசாங்க ஏஜண்டின் விசேஷ அனுமதிபெற்று இலவசக் கச்சேரிக்கு ஒழுங்கு செய்யவாவது இடமிருக்க வேண்டும் நமது எம், பி. மார்களோ அல்லது கலாசார சபையிலுள்ள தமிழ் அன்பர்களோ இவ் விஷயத்தில் கவனம் காட்டி இக்குறையை கூடிய சீக்கிரத்தில் நீக்க ஆவன செய்தால் தமிழ் சமூகத்தவரின் நன்றிக்கு அவர்கள் பாத்திரமாவார்கள். அப்படிச் செய்ய எந்தப் புண்ணியவான் முன்வரப் போகிருரோ?

0 0 0

கல்லிசை பூணக்கலையொலி
யோவாக்
கழுமலமுதுபதிதன்னில்
நல்லிசையாளன் புல்லிசை
கேளா
நற்றமிழ்ஞானசம்பந்தன்
பல்லிசை பகுவாய்ப்படுதலை
யேந்தி
மேவிய பந்தனைநல்லூர்
சொல்லியபாடல் பத்தும்
வல்லவர் மேல
தொல்வினை சூழகிலாவே

— திருஞானசம்பந்தர்

## அரசியல் அரங்கு

# வெளிநாட்டு சோஷலிஸ சித்தாந்தம் தேவையா?

**எஸ். எம். ஜி.**

எந்த நாட்டிலிருந்தாவது சோஷலிஸ சித்தாந்தத்தை நம்நாட்டுக்கு இறக்குமதி செய்யத் தேவையில்லை என்றும் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா வகுத்துத்தந்த சோஷலிஸப் பாதை போதுமானதென்றும் அந்த வழியில் சென்ருல் நாடு சுபீட்சமடையும் என்றும் பிரதமர் திருமதி பண்டாரநாயகா ஆட்சிமன்றத்தில் வரவு — செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தில் ஒருகட்டத்தில் பேசுகையில் விளக்கியிருந்தார்.

வெள்ளைக்காரர் இங்கிருந்து போகும்போது நமக்கு வழிவகுத்துத் தந்துவிட்டுப் போன அரசியல் அமைப்பின் விளைவை நாடு சுதந்திரமடைந்த கடந்த இருபத்திரெண்டு ஆண்டுகளாக அனுபவித்துவருகிருேம். கல்வியிலும் மற்றும் துறைகளிலும் வெளிநாடுகளைப் பின்பற்றியதன் பயனையும் அனுபவித்துவருகிருேம். நமது தேவைகளை நிறைவேற்றக் கூடிய நமது நாட்டின் சூழ்நிலை, பண்பாடு ஆகியவைகளுக்கேற்ற முறையில் நமது நாட்டின் அரசியல் அமைப்பும் சட்டதிட்டங்களும் இருக்கவேண்டும்.

சோஷலிஸம்பற்றி நமது நாட்டில் பேசாதவர்களே இல்லை. சோஸலிஸத்துக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் வியாக்கியானம் கொடுக்கின்றனர். இன்று ஆட்சி பீடத்திலுள்ள கூட்டணிக்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கிடையில் கூட சோஷலிசம்பற்றி வேறுபட்டகருத்து இல்லையென்று சொல்லமுடியாது.

இதேபோல் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் கொள்கைகள் பற்றியும் பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர். திரு பண்டாரநாயகா சிறந்தசிந்தனையாளர். மனிதனின் சிந்தனை ஒரேமாதிரியிருப்பதில்லை. காலநேரத்தையொட்டி அதுமாற்றமடையும் திரு பண்டாரநாயகா தனது கொள்கைகள் என்று திட்டவட்டமாக எழுதி வைத்ததாகத் தெரியவில்லை. இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைதான் பொருத்தம் என்று ஒரு சமயத்தில் கட்டுரையே எழுதியவர் திரு. பண்டாரநாயகா. பின்னர் சமஷ்டி அமைப்பு இலங்கைக்கு ஏற்றதல்ல என்று கூறியிருக்கிருர் இன்று அவர் உயிருடனிருந்திருந்தால் என்ன சொல்வாரோ தெரியாது. எனவே அவரது கொள்கைகள் என்று எதையும் திட்டவட்டமாகச் சொல்லிவிடமுடியுமா என்பது சந்தேகமே.

அரசியலில்வெற்றியீட்டுவதற்காகவும் அந்தந்த நேரத்திலுள்ள சூழ்நிலைக்கேற்பவும் அரசியல்வாதியென்ற முறையில் திரு. பண்டாரநாயகா சிலகொள்கைகளைக் கடைப்பிடித்திருக்கலாம். உதாரணமாக இருபத்தி நான்குமணி நேரத்தில் சிங்களத்தை இந்நாட்டின் உத்தியோகமொழியாக்குவேன்' என்று அறிவித்துப் பிரசாரம் செய்து 1956-ம் ஆண்டில் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சிபீடத்திலமர்ந்ததும், தேர்தல் சமயத்தில் வாக்குறுதியளித்தபடிதமிழுக்கும் உரிய இடமளித்து சிங்களத்தைஉத்தியோகமொழியாக்குவதற்கா... மசோதா வைத்தயாரித்தார். கே. எம். பி. ராஜரத்தின, எப், ஆர். ஜயசூரியா போன்ற தீவிரவாதிகளின் உண்ணாவிரதம் போன்ற நிர்ப்பந்தம் காரணமாக "தமிழுக்கு உரிய இடம்" என்பதைவிடுத்து 'சிங்களம்மட்டும்' மசோதாவைக்கொண்டுவந்தார். இதனுல் 'சிங்களம்மட்டும்தான்' பண்டாரநாயகாவின்கொள்கையென்று சொல்ல முடியுமா? பின்னர் 1958-ம் ஆண்டில் நியாயமான தமிழ் மொழி உபயோகத்துக்கென தமிழ் மொழி (விசேஷ) சட்டத்தைக் கொண்டுவந்தார். அந்தச் சட்டத்தை அமுல்நடத்துவதற்கானவிதிகளை அவர் கொண்டுவருவதற்கு முன் உயிர்பறிக்கப்பட்டுவிட்டது. 1956-ம் ஆண்டில் சிங்களம்மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சிங்களம் தெரியாத அரசாங்க ஊழியர் பற்றி அவர் தமது கொள்கையை விளக்கியிருந்தார், அது பின்பற்றப்பட்டதா?

1957-ம் ஆண்டில் தமிழ் [illegible] செய்து கொண்ட உடன்படிக்கையில் பிரதேச சபைகள் அமைப்பதற்கு ஒப்புக்கொண்டார். பின்னர் அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புக் காரணமாக உடன்படிக்கையையே கிழித்தெறிந்தார்.

எனவே திரு. பண்டாரநாயகாவின் கொள்கைகள் என்று எதையும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. என்றாலும் இந்த நாட்டு மக்கள் அனைவரும் இந்த நாட்டின் சுதந்திரத்தை அனுபவிக்க உரிமையுள்ளவர்கள் என்பதையும் வாழ்க்கையில் வசதி குறைந்தவர்களுக்கும் வசதி நிறைந்தவர்களுக்குமிடையிலுள்ள ஏற்றத் தாழ்வு நீங்கவேண்டுமென்பதையும் அவர் தமது கொள்கையாகக் கொண்டிருந்தார் என்பதையும் ஜனநாயகத்தில் அவர் அதிக நம்பிக்கைகொண்டிருந்தாரென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். இதே சமயம் அரசியல் மற்றும் காரணங்களுக்காக பழிவாங்கும் மனப்பான்மை அவரிடம் இருந்ததில்லையென்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். ஆசியாவின் சுவிட்ஸர் லாந்தாக இலங்கை விளங்கவேண்டுமென்பது அவரது அவாவாக இருந்தது.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா கூறியிருப்பதுபோல் சோஷலிஸ சித்தாந்தம் எதையும் இங்கு இறக்குமதி செய்யவேண்டியது அவசியமில்லைத்தான். ஆனுலும் வெளிநாடுகளின் அனுபவங்களை அறிந்து நமது நாட்டின் கடந்தகால அனுபவங்களை உணர்ந்தும் வெளிநாடுகளிலிருந்து நமக்குத் தேவையான நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்வது தவறல்ல.

உலக நாடுகள் பலவற்றிலும் சிறுபான்மையினர் பிரச்னை இருக்கத்தான் செய்கிறது. சோஷலிஸ அமைப்பைக்கொண்ட செக்கோஸ்லவாக்கியாவிலும் சிறுபான்மையினர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக சமீபத்தில் அங்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது. இதே சமயம் கனடாவில் சமஷ்டி அமைப்பிருந்தும் சிறுபான்மையினர் பிரச்னை தீரவில்லை. பிரஞ்சுமொழி பேசுவோர் தனியாட்சி கோரி கிளர்ச்சி செய்கின்றனர். சோஷலிஸ நாடுகள் பலவற்றிலும் சிறுபான்மையினர் பிரச்னை இல்லை. இதனுல்தான் ஆட்சிமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசிய உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம், வேறு எத்தனையோ அலுவல்களுக்கெல்லாம் வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்து ஆலோசனை பெறுவது போன்று சிறுபான்மையினர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு சோஷலிச நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்து ஆலோசனை பெறும்படி கேட்டுக்கொண்டார்போலும்.

எந்த நிபுணர்களின் ஆலோசனையாலும் சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும் இந்த நாட்டில் வாழ்பவர்கள், வாழவேண்டியவர்கள். அவர்களுக்கிடையில்விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் பெருந்தன்மையும் இல்லாமல் யார்தான் ஆலோசனை கூறி என்னபயன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் குரு பூசை நினைவுக் கட்டுரை

# வீர சுதந்திரத்துக்கு வித்திட்ட நாவலர்



"என்று தணியும் இந்தத் தமிழ்மொழித்தாகம் என்று மடியும் ஆங்கில அடிமையின் மோகம்" என்று மக்கள் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

இந்த நாட்டு மக்கள் தன் சொந்த நாட்டையே விற்று, தாய்மொழியைப் புறக்கணித்து, பிறந்த மதத்தையே உதறித்தள்ளிக் கொண்டிருந்தனர். அக்காலத்தில்தான் நமது தேசியத் திருமகன் தோன்றினர் என்பதைப் பலர் இன்னும் அறியாதிருக்கலாம். தோன்றியவர் வேறு யாருமல்ல நமது தேசியச் செம்மலான நாவலர் பெருமான்தான்.

## தன்மானத்தந்தை

தாய்மொழி வேரறுக்கப்பட்டு ஆங்கிலத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுவந்த காலத்தில் தமிழ்மொழி விருத்திக்கு வழிவகைகள் கண்டவர் நாவலர் பெருமான். அவர் ஆங்கிலமொழியையும் நன்குகக்கற்றிருந்தார். ஆயினும் தாய்மொழியில் பற்று மேலோங்கி நின்றது. ஆங்கிலமொழி உலகமொழி என்பதை ஆட்சேபிக்கவில்லை.

அரசனை நம்பிப் புருஷனை இழந்த கதையாக அரசஉத்தியோகங்களை நாடிச்சென்றனர் பலர். நாவலர் பெருமான் தாய்மொழி, தமிழ்மொழி வளர்ச்சியில் மிகவும் கவனம் செலுத்தினர். தேசியமொழிகளை அழித்து, ஆங்கிலமொழியை உத்தியோகமொழியை நிலைநாட்ட எத்தனித்தவர்களிடம்தான் தன்னந்தனியாக எதிர்ப்புக்காட்டித் தன்மானத்தை முன்னிறுத்தித் தேசியப்பற்றை முதன்முதலாக இந்நாட்டில் ஏற்படுத்தப்பாடுபட்டார்.

## வேரறுத்த விஷமிகள்

மேலைநாடுகளிலிருந்து ஈழநாடு வந்து "உங்களுக்கு நன்மைசெய்கிறோம்" என்று நம்மக்களிடையே உத்தியோக உருசியை உண்டுபண்ணிவிட்டு நாட்டுப்பற்று மொழிப்பற்று முதலியவற்றை வேரறுத்துவிட்டார்கள். தன் நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று இந்நாட்டுத் தமிழர்களிடம் அஸ்தமித்துவிட்டதென்றே சொல்லவேண்டும். தேசிய இனத்தவரிடையே மதத்தையும் மொழியையும்புகுத்தினர் மேல்நாட்டினர். இவர்களின் திட்டமிட்ட செயலை முறியடிக்க வேலை செய்தவர்தான் நாவலர் பெருமான்.

மக்கள் இந்நாட்டின் வீர வேந்தர்களையும் அவர்கள் செய்த பணிகளையும் மறந்தனர். தம் பூர்வீகநிலையைத் தெரிந்திலர். ஆங்கிலக்கல்லூரிகள் தலைகாட்டத் தொடங்கின. இக்கல்லூரிகளினின்றும் தோன்றிய இளைஞர்கள்சுதேசஉடலும், மேல்நாட்டுப்பற்றும், ஆங்கில உள்ளமும் படைத்தவராக வெளியேறினர். மேல்நாட்டிலிருந்து வந்த எந்த ஒரு கருத்தையும் ஆராய்வின்றி வரவேற்றனர். மேல்நாட்டின் மீது மோகம் ஏற ஏறத் தாய்நாட்டுப் பற்றுச் சீர்குலைந்தது. அரசமொழி மீது மோகம் ஏறஏறத் தாய்மொழி மீது மக்களுக்கு வெறுப்புஏற்பட்டது. இதை உற்றுணர்ந்துதாய்மொழியை தழைத்திடச் செய்யச் சங்கற்பம் பூண்டார் நாவலர்பெருமான்.

## தமிழர்களைத் தட்டியெழுப்பிய தலைமகன்

யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களுக்குப்பின் இந்த நாட்டிலே தமிழ்மொழியையும் சைவசமயத்தையும்வளர்க்க முற்பட்ட முதற்தமிழ்மகன் யார்? தலைகுனிந்துகையேந்தி நின்ற மக்களை உற்சாகமூட்டித் தட்டியெழுப்பித் "தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொருகுணமுண்டு. அமிழ்தம் அவனது மொழியாகும், அன்பே (சிவமே) அவனது வழி (மார்க்கம்)யாகும்" என்பதற்கிணங்கத்தொண்டாற்றியவர் வேறு யாருமல்லர் தேசியவீரர் நாவலரே.

அன்று அவர் தன்னந்தனியே சாதித்த காரியங்களை இன்று எத்தனையோ சபைகள், சங்கங்கள் கூடச் சாதிக்க முடியாதிருக்கின்றது. இந்த நாட்டிலே தமிழுக்குத் தொண்டாற்றியவர் பலர் இருக்கலாம். ஆனால் நாவலரவர்களே முதன்முதலாக இந்த நாட்டில் "தன் கடன்தமிழ்ப்பணிபுரிவதே" என்று தொண்டாற்றியவர் என்பதை மறுக்க முடியாது.

## பலவித பணிகள் ஆற்றிய ஒரே மகன்

மக்களுக்குச் சேவை செய்ய முற்படும் ஒருவர் மறைந்து நின்று, ஒதுங்கி நின்று வேறொரு போர்வையின்கீழ் தொண்டைச்செய்ய முடியாது. நாட்டு மக்களுடன் ஊடாடி நன்மை தீமைகளில் பங்குபற்றிச் சுகதுக்கங்களில் கலந்து தன்நலம், தற்பெருமை, தன்வாழ்வு, தன்தொழில் ஆகியவைகளை உதறித்தள்ளி 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று முன்வருபவர்கள்தான் சமூகத் தொண்டில் தேசத் தொண்டில் சிறந்த வெற்றி காணமுடியும். ஈழநாட்டிலே தமிழன் தமிழனைத் தன்மானமுடன் தனது மக்களிடையே தொண்டாற்றாது பிறிதொரு மதத்தில் புகுந்து அந்தப் போர்வையைப் போர்த்துக்கொண்டு அந்த மதமுத்திரையுடன் தொண்டாற்றியவர் பலர் இருக்கலாம்; தன்மொழி தாய்மொழியைச் சரியாகக் கற்காமல் வேற்றுமொழிகளில் வல்லுனராகி, வாய்ச்சொல்லில் வீரராகிவந்து தொண்டாற்றுபவர் பலர் இருக்கலாம் தான் பிறந்த இந்த நாட்டையே விட்டோடிச் சென்று வேறு நாடுகளிலிருந்து தொண்டாற்றுபவர் பலர் இருக்கலாம். ஆனால் தான் பிறந்த மதத்திலேயே மொழியிலேயே நாட்டிலேயே இருந்துகொண்டு பல துறைகளில் தொண்டாற்றிய ஒரே மகன் அந்தக் காலத்தில் நாவலரவர்கள்தான்.

## பல தொண்டுகளில் ஒரு சில

தேசீயப் பாடசாலைகள் நிறுவுவது, பத்திரிகைகள் நடத்துவது, அரிய பல தமிழ் நூல்களை அச்சிட்டும் பரிசோதித்தும் ஆக்கியும் வெளியிடுவது, கிறிஸ்தவ பைபிள் போன்ற பெருநூல்களை மொழிபெயர்ப்பது. அச்சகம் நிறுவுவது, வசனநடையில் மறுமலர்ச்சி காண்பது, பிரசங்கம் புரிவது முதலான பல தொண்டுகளைத் திறம்படச் செய்தார் நாவலர். சைவாலயங்கள் சீர்பெற நடைபெற வேண்டுமென்று விரும்பினர். திருக்கேதீஸ்வரம் முதலிய சிவஸ்தலங்களைப் புனருத்தாரணம் செய்ய [illegible] ஞர். தமிழ்மொழிக்கல்வியை அன்று இலவசமாக நாவலர் போதித்துவந்தார்.

## அரசாங்க நிர்வாகத்தை அம்பலப்படுத்தியவர்

அரசாங்க ஊழல்களை அம்பலப்படுத்தி அக்கால அரசாங்க (வெள்ளைக்கார) அதிபர் துவைனம் துரையின் நிர்வாகத்துக்கு எதிராக, குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு லண்டன்மாநகர் வரை மனுச்செய்து வெற்றி கண்டவர் நாவலர். அக்காலத்தில் அடிமையாகவிருந்த நாட்டிலே ஆளும் வர்க்கத்திற்கு எதிராக ஒரு இயக்கம் நடத்தி வெற்றிகாண நெஞ்சுரமும் மனவலிமையும் கொண்டிருந்தார் நாவலர்.

## சமூகத்தொண்டும் அரசியலும்

கரையூரில் பேதிநோய் கண்டபோது தானே நேரில் சென்று இவர் ஆற்றிய சமூகப்பணி வியக்கத்தக்கது. ஒருதரம் ஒருவீடு தீப்பிடித்து எரிந்தது அப்போது நாவலர். வித்தியாசாலையில் முக்கியமான அலுவலில் ஈடுபட்டிருந்தார். 'தீ' 'தீ' என்ற சத்தம் கேட்டதும், பாய்ந்து சென்று தண்ணீர் சுமந்து கொட்டிக் கூரையை பிரித்துத் தீயை அணைத்தார்.

நல்ல பயனைக் காணவிரும்பும் ஒருவிவசாயி மேடையை நன்கு பண்படுத்திச் சிறந்த விதையைப் பொறுக்கியெடுத்து வித்திடுவதுபோன்று நமது நாவலரும் தேடியெடுத்த வித்துத்தான் சேர் பொன் இராமநாதனவர்கள். நாவலர் அரசியலில் ஈடுபட்டு இராமநாதனுக்காக மேடை மேடையாகப் பிரசாரம் செய்து வெற்றி கண்டவர். இராமநாதன் சட்டசபைக்குச் சென்றதனலன்றோ சுதந்திர உணர்ச்சி ஏற்பட முடிந்தது. இலங்கை சுதந்திரமடைய அத்திவாரமிடப்பட்டவர் இராமநாதன். நாவலர் தேர்ந்து எடுத்த 'வித்து' நாட்டையே விடுதலை இயக்கத்தில் ஈடுபடச் செய்தது, ஆகவே சுதந்திரவேட்கைக்கு வித்திட்டவர் நாவலர் என்பது வெள்ளிடைமலை.

## அரசினர் கௌரவிக்க வேண்டும்

இப்படியெல்லாம் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து உழைத்துமறைந்த மகானை நாமெல்லாரும் போற்றுவது மட்டுமல்ல, நமது அரசாங்கமும் போற்றிக் கௌரவிக்கச் செய்ய வேண்டும். தேசியவீரர்கள் வரிசையில் சேர்த்துக்கொள்ளவும், தபால் முத்திரையில்

(14- பக்கம் பார்க்க)

— வெ. சு. நடராசா —

> 'ஒரு நாட்டின் தேசிய வளர்ச்சிக்கு வித்திட்டு, வித்திட்ட பயிரை வளர்த்து பயன் காட்டுகின்ற தேசியத் தலைவர்களைக் கௌரவிப்பது அந்நாட்டினர் கடமை. சிலையமைத்துத் தேசிய விடுதலை வீரர் வரிசையில் சேர்ப்பது, தபால் தலை வெளியிட்டு கௌரவிப்பதெல்லாம் நமது கடமை. இந்தக் கடமையை உணர்ந்தால் நாவலர் பெருமானை கௌரவிக்க நிச்சயம் தபால் முத்திரை யொன்றை நாம் வெளியிட முயற்சிப்போம். "

## பொன்னுன குருவே வாழி!

— சு. கனகசபாபதி —

இராகம்: சண்முகப்ரியா தாளம்: ஆதி

பல்லவி

பண்கொள் பாவாற் பாடுவோமே— நாவலர்
கண்ணுல சைவம் தமிழ் காசினியில் வளர—பண்

அநுபல்லவி

நல்லையம் பதிஉதித்து ஞானந்தனைப் பதித்த
நல்ல ஐந்தாம்குரவர் நானிலநாவலரை—பண்

சரணம்

நாவலர் பாடசாலை நாவலர் பாலபாடம்
நல்ல தமிழ்நூல்கள் நானிலம் போற்றியேற்ற
சொன்மழை பொழிந்தெங்கும் கொற்றமிழ்
வரைந்தனை
பொன்னுனகுருவே நீ பூமியில் வாழிவாழி—பண்

## வேண்டும் குருபூசை

—"சேந்தன்"—

சைவமா மாழியில் வேதமோ டாகமத்
தண்ணீரை மொண்டு பின்னும்
தணலனைய மேனியன் சங்கரன் மீதிலே
தமிழ் சொன்ன குரவர் பாவும்
தெய்வதப் புராணங்கள் மெய்கண்ட சாத்திரம்
தேடியே முகந்து மின்னித்
தென்னகந்தன்னிலு மீழத்து மெங்கணும்
சென்றுமே பொழிந்த ஐயர்
உய்வரிய ஊமையர் குருடராய் நின்றவர்க்
குயர்சைவ வாழ்வு தந்த
உத்தமப் புலவரை நித்தம் நினைந்திட
ஓங்குசிலை எடுத்த பின்னர்
மெய்யன்பி னுற்றிரு நல்லூ ரெடுத்திடும்
விளங்குகுரு பூசை போற்றி
மேன்மேலுஞ் சைவநெறி எய்துக என்றுநாம்
வேண்டுதல் மேல தன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தரமற்றதைத் தடை செய்ய யார்தான் எதிர்ப்பார்கள்?"

## தமிழக எழுத்தாளர் கி. வா. ஜ. கருத்து

தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு வருகைதந்துள்ள கலைமகள் ஆசிரியரும், சிறந்த எழுத்தாளரும், பேச்சாளரும் கவிஞருமான திருகி.வா. ஜகந்நாதன் அவர்களை 'ஈழநாடு' பத்திரிகையின் சார்பில் பேட்டி கண்டபோது அவர் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

கேள்வி: தி. மு. க. அரசாங்கம் வந்தபிறகு தமிழகத்தில் கலை, இலக்கியங்களின் வளர்ச்சி பற்றிச் சொல்லமுடியுமா?

பதில்: தி. மு. க.வின் நோக்கம் பெரும்பாலும் அரசியல்தான். திமுக சார்புள்ள எழுத்தாளர்கள் மற்றப்பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்துள்ளார்கள். பொதுவாக திமுகவின் கொள்கை தமிழுக்கு ஆதிக்கம் தேடவேண்டும் என்பதுதான்; ஆனால் அதனோடு அரசியலையும் இணைக்கிருர்கள். அது சிலருக்குப் பிடிப்பதில்லை. இப்போது தமிழ்நாட்டில் இலக்கியத் துறையில் அரசியல்வாதிகளும் சினிமாக்காரர்களும் புகுந்து பத்திரிகைகளில் இடம் பிடித்திருக்கிருர்கள். பத்திரிகைக்காரர்களும் அவர்களது படைப்பை வெளியிட்டால் விற்பனை கூடுதலாகும் என்று எண்ணுகிருர்கள். இதன் பயனாக நல்ல எழுத்தாளர்களின் எழுத்துக்கு இடம் கிடைப்பதில்லை. இது சம்பந்தமாக கலைமகளில் ஒரு கட்டுரை வரிசையைத் தொடங்கியிருக்கிறேம். தமிழ் எழுத்துலகம் என்ற தலைப்பில் இந்த வரிசையில் இதுவரையில் ஐந்துகட்டுரைகள் வெளியாகியுள்ளன. அகிலன், பார்த்தசாரதி, சுகி, தி. ஜ. ர., வாசவன் என்பவர்கள் எழுதியுள்ளார்கள். பத்திரிகை உலகத்திலும் புத்தக வெளியீட்டு உலகத்திலும் எந்தச் சார்புமில்லாத எழுத்தாளர்களுக்குப் போதிய இடம் கிடைக்கவில்லை என்பதையே இக்கட்டுரையாளர் அடிப்படைக் கருத்தாக வைத்து எழுதியிருக்கிருர்கள். ஆங்கிலத்தில் 'கோஸ்ட் றைட்ரேர்ஸ்' என்று சொல்லுவதுபோல ஓர் எழுத்தாளனைப் பிடித்து எழுதச்செய்து தம் பெயரைப் போட்டுக்கொள்ளும் அவலநிலை அங்கே உள்ளது. இதனுல் எழுத்தாளர்களுக்கு சொல்லும் தரமும் தங்கள்எழுத்துக்களை வளர்த்துக்கொள்வதற்குரிய வாய்ப்பும் இல்லாமல் போகின்றன. எல்லாப் பத்திரிகைகளுமே துண்டுத் துணுக்குகளை மிகுதியாக வெளியிட்டு வருகின்றன. ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்து அதிலுள்ள ஒரு பிரதியை எடுத்து அனுப்பிவிட்டு 'இது ஆதாரம்' என்று குறித்துப் பத்திரிகையை நிரப்புகின்ற 'தகவல் எழுத்தாளர்கள்' புற்றீசல்போலக் கிளம்பி விட்டார்கள். இத்தகைய வகையினுல் நல்ல எழுத்தாளன் தான் படைத்த படைப்புக்குப் பத்திரிகைகளிலும் இடம் காணமுடியாது. புத்தகமாகப் போட்டாலும்விற்பனைசெய்ய முடிவதில்லை. இதுதான் அங்குள்ள நிலைமை.

### தமிழக சஞ்சிகைகள்

கே: தமிழகத்திலிருந்து வரும் தரமற்ற சஞ்சிகைகளைத் தடை செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ வேண்டும் என்ற கோஷம் ஈழத்து இலக்கியகாரர் மத்தியில் எழுப்பப்பட்டு வருகிறதே. அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: தரமற்றதைத் தடை செய்வதற்கு யார்தான் எதிர்ப்புச் சொல்வார்கள். கவர்ச்சியும் ஆபாசமும் கூடாதுதான். ஆனுல் பொதுமக்களே விரும்பி வாங்குகிருர்களே! இதற்கு யார் என்ன செய்யமுடியும். விரும்பினுல் இத்தகைய தரமற்ற பத்திரிகைகளைப் பொதுமக்கள் வாங்காமல் விட்டுமே! முற்றுகத் தடைசெய்யும்முயற்சி நெல் விளையும் வயலை அழித்து விட்டு வைக்கோலைப் பாதுகாப்பதுபோன்றது.

### ஈழமும் கலைமகளும்

கேள்வி- நீங்கள் ஆசிரியராகவுள்ள 'கலைமகள்', "மஞ்சரி' ஆகிய பத்திரிகைகளுக்கு ஈழத்திலிருந்து எழுதுகிருர்களா? எழுதினுல் நீங்கள் பிரசுரிப்பீர்களா?

பதில்- ஈழத்து எழுத்தாளர்கள் தமது படைப்புகளை இந்தியப் பத்திரிகைகளில் போடுவதில்லை என்று நினைக்கிருர்கள், சொல்லுகிருர்கள். கலைமகளில் நெடுங்காலமாக ஈழத்து எழுத்தாளர்கள் எழுதுகிருர்கள். உதாரணமாக நவம்பர்(இம்மாத) கலைமகளில் அருள் செல்வநாயகத்தின் கதையும் முருகையனின் கட்டுரையும் வெளியாகியுள்ளன. ஈழத்திலிருந்து எழுத்தாளர்கள் எமக்குக் கதை, கட்டுரைகளை அனுப்புவதில்லை. கவிதைகளே மிகுதியாக வருகின்றன. கவிதைகளைப் பொதுமக்கள் ரசித்துப் படிப்பதில்லை. மற்றப் பத்திரிகைகள் கவிதைகளைக் குறைவாகவே வெளியிடுகின்றன, நாங்கள் ஒரிதழுக்கு ஒன்றுக வெளியிட்டு வருகிறேம். மாதப் பத்திரிகையில் எவ்வளவுபேருக்கு இடம்கொடுக்கமுடியும்? கதைகள் தரமானவையாக இருந்தால் நிச்சயமாக வெளியிடுவோம். பத்திரிகையாசிரியர்களுக்குள் இலங்கையோடு நெருங்கிய தொடர்புடையவன் நான். ஆகவே இலங்கைத் தமிழருடைய உணர்வையும் எழுத்தாளர்களுடைய ஆர்வத்தையும் ஒருவாறு புரிந்துகொண்டிருக்கிறேன். முடியுமானுல் ஒவ்வோரிதழிலும் ஓர் இலங்கை எழுத்தாளர் கதையாவது போடவேண்டும் என்பது என் அவா. ஆனுல் இங்கிருந்து கதைகள் அனுப்புவாரில்லை. தரமான கதைகளை அனுப்பி நாங்கள் [illegible] மலிருந்தால் பிழை சொல்லலாம். இலங்கையிலிருந்து நல்ல கதைகள் மிகுதியாக வந்தால் எங்கள் பத்திரிகையில் போடுவதோடு மற்றப் பத்திரிகை ஆசிரியர்கள், நண்பர்களையும் அணுகி அவர்கள் பத்திரிகையில் வெளியிடும்படி சொல்லும் வாய்ப்பு எனக்குண்டு. இந்த வாய்ப்புக்கிடைக்கவேண்டுமானுல் இலங்கை எழுத்தாளர்கள்இந்தியப்பத்திரிகைகளுக்கு மிகுதியாக எழுதி வரவேண்டும். ஒன்றையும் அனுப்பாமல் இலங்கை எழுத்தாளர்களின் எழுத்து இந்தியப் பத்திரிகைகளில் வரவில்லை என்று குறைகூறுவது நியாயமாகாது. நல்ல எழுத்தாளர்களின்எழுத்தை இரு கரங்களையும் விரித்து வருக என்று வரவேற்கின்றேன்.



கேள்வி - உங்களது பத்திரிகைகளில் பிரசுரமாகும் கதைகள் 'இப்படித்தான் இருக்கவேண்டும்'என்று ஒரு கட்டுப்பாடு உண்டா? அல்லது சமூக, வர்க்கப் பிரச்னைகளைச் சித்தரிக்கும் சிறுகதைகளையும் பிரசுரிப்பீர்களா?

பதில் - தாராளமாக. எங்கள் பத்திரிகையில்முதலாளிகளுக்குஎதிராகஎத்தனையோ கதைகள் வந்துள்ளன. வர்க்கப் பிரச்னைகளைக்கூறும் கதைகளை நாம் பிரசுரிக்கவில்லையென்பதை நிரூபியுங்கள் பார்க்கலாம்?

கேள்வி- ஒரு நல்ல கதை எவ்வாருக அமையமுடியும் என்று சுருக்கமாகச்சொல்ல முடியுமா?

பதில் - சிறுகதைக்குத் திட்டவட்டமாக இலக்கணம் யார் சொல்லமுடியும்? அல்வா இனிப்பாகத்தான் இருக்கமுடியும்.

கேள்வி- தமிழகத்துச் சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஈழத்தில் விமர்சிக்கப்படுவது போன்று தமிழகத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஏதும் விமர்சிக்கப்படுகின்றனவா?

### ஈழத்து பத்திரிகைகள் கிடைப்பதில்லையே

பதில் - எங்களுடைய பத்திரிகைகள் இங்கு அதிகம் வருவதால் எங்களைப்பற்றி நீங்கள் தெரிந்து [illegible]ன்கிறீர்கள். உங்கள் பத்திரிகை எங்களுக்குக்கிடைப்பதில்லை. இங்கே தினசரி, வாரமலர்களில்தான் பெரும்பாலும் எழுத்தாளர்கள் எழுதுகிருர்கள். அவை செய்தித்தாள்கள் ஆகையால் இந்திய மக்கள் சந்தாச்செலுத்திவாங்கமாட்டார்கள். இதற்கு நான் ஒரு வழி சொன்னேன். சில முக்கியமான எழுத்தாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த வாரமலர்களைமட்டும் இலவசமாக அனுப்பினுல் அவர்கள் இந்தநாட்டு எழுத்தாளர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளத் துணையாக இருக்கும். தமிழ் நாட்டிலேயே ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள் போன்ற பத்திரிகைகள் பெரிய எழுத்தாளர்களுக்கு இலவசமாக வருகின்றன. இந்தக் காரியம் செய்தால் இலங்கை எழுத்தாளர்களைத் தமிழ்நாடு தெரிந்துகொள்ள வாய்ப்பு உண்டாகும். அங்கு பொதுமக்கள் இலங்கைப் பத்திரிகையை வாங்கி வாசிப்பது நடவாத காரியம். ஏனென்ருல் அவர்கள் படிப்பதற்குப் போதிய பத்திரிகைகள் அங்கேயேயுள்ளன. இங்கே அச்சிடும் பத்திரிகைகள் அந்தளவிற்கு இலக்கியம் மாத்திரம்வெளியிடும் பத்திரிகைகளாக இல்லை. ஆகவே இலங்கை எழுத்தாளர்களின் படைப்பைத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் வெளியிட்டால் பொதுமக்கள் அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்வார்கள். அப்படி வெளியிடுவதற்குப் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கும் இலங்கை எழுத்தாளர்களை அறிமுகம்செய்து வைக்க வேண்டும். அதற்கு நான் சொன்னது ஒரு வழியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பின்னர் கி. வா. ஜ. கூறினுர்:

யாழ்ப்பாணத்தில் 'ஞாயிறு' என்றும் 'கலைச் செல்வி' என்றும் அழகான சஞ்சிகைகள் தோன்றியது எனக்குத் தெரியும். இப்போது அவை ஏன் மறைந்தன என்ருல் ஒரு காரணத்தைச் சொல்ல முடியும். எழுத்தாளன் தோற்றுவிக்கும் பத்திரிகை இயங்காது. முதலாளி பணம் கொடுக்க எழுத்தாளன் மூளையைக் கொடுக்கவேண்டும். எழுத்தாளன் முதலாளியை நண்பனுக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

### அடிக்குறிப்புப் பிரச்னை

கே: இறுதியாக ஒன்று கேட்க விரும்புகிறேன். இங்கு நடைபெறும் இலக்கியக் கூட்டங்களிலோ இலக்கியச் சர்ச்சைகளிலோ உங்களைப்பற்றிய ஒரு கருத்தும் அடிபடுவதுண்டு முன்பொரு தடவை நீங்கள் 'ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கு அடிக்குறிப்பு தேவை' என்றீர்களாமே. அது உண்மையா? அது பற்றிய உங்களது இப்போதைய கருத்து என்ன? ஏன் அப்படிச் சொன்னீர்கள்?

கி. வா.: நான் மட்டும் சொல்லவில்லை, அகிலன் கூடக் கேட்டார். 'விதானை யார் என்ருல் என்ன?' என் கேட்டார். அந்தச் சம்பவம் நடைபெற்ற கூட்டத்தில் எழுத்தாளர் செ. கணேசலிங்கன் இருந்தார். ஜெயகாந்தன் இருந்தார். கணேசலிங்கனுடைய கதைகளைப் படித்து விருப்பம் கொண்ட நான் அவற்றை இந்திய மக்களும் புரிந்துகொள்ளவேண்டுமானுல் சில பிரதேச வழக்குச் சொற்களுக்குமட்டும் விளக்கக் குறிப்புப் போட்டால் என்ன? என்று கேட்டேன். உங்களுடைய நன்மைக்காகத்தான் அவ்வாறு சொன்னேன். நான்கூடச் சில கட்டுரைகளுக்கு எல்லோருக்கும் புரியாது என்று கருதும் சொற்களுக்கு அடிக்குறிப்புப் போட்டுவருகிறேன். நான் அவ்வாறு கேட்டபோது ஜெயகாந்தன் திடீரென எழுந்து 'எனக்கு எல்லாம் விளங்குகிறது' என்ருர். அவர் எப்பொழுதும் இப்படித்தான் பேசுவார். ஆனுல் இங்குள்ள இலங்கை எழுத்தாளர்கள் கேட்கின்ற காரணமும் அறிவேன். உங்களுடைய 'கலெக்டர்' 'முன்சிப்' எங்களுக்கு விளங்கும்போது எங்களுடைய விதானையார் உங்களுக்கு விளங்கினுல் என்ன என்று கேட்கிருர்கள். ஏன் விளங்கக்கூடாது? எங்கள் மத்தியில் இலங்கையர்கள் இல்லை அவர்களுடன் பரவலாக கதைத்துப் பழகும் வாய்ப்பு இல்லை. ஆனுல் ஈழத்தில் அநேக இந்தியர்கள் இருக்கிருர்கள். எங்களுடைய 'அம்மாமி'க் கதைகள் எல்லாம் இங்கே விளங்குகின்றன. ஏனென்ருல் இங்கே பல 'அம்மாமி'கள் இருக்கிருர்கள். அதனுல் உங்களுக்கு எல்லாம் புரிகிறது. காரணம் இவ்வளவு தெளிவாக இருக்கும் போது வீணுக இல்லாத கதைகளைக் கட்டி என்மீதும் இதர இந்திய எழுத்தாளர்கள்மீதும் பழிசுமத்துகிருர்கள். என் புகழைக் குறைக்க முயல்கிருர்கள். ஆனுல் அது ஒரு போதும் முடியாத காரியம். யாழ்ப்பாணத்தில் என்னை எதிர்ப்பவர்களைவிட ஆதரிப்பவர்கள் அதிகம். உண்மையில் யாழ்ப்பாணத்து மக்கள் என்மீது அன்பு அதிகம் கொண்டவர்கள்.

## 'தகவல்எழுத்தாளர்கள் பெருகி விட்டார்கள்"

பேட்டி கண்டவர்:

— நெல்லை க. பேரன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# காதல் சின்னம்!

— ச. ம. அச்சுதன் —

விநாயகர் கோயிலை எதிர்த்தாற்போலிருந்த அந்தச் சனசமூக நிலையத்தின் முன்றல் இப்போ திமிலோகப் பட்டுக்கொண்டிருந்தது. வேட்டியை மாறுபாய்ச்சிய கோலத்துடன் சில இளவட்டங்கள் சீற்றம்கொண்டு பரபரத்துக் கொண்டிருந்தனர். வயோதிபர் சிலர் அவர்களை ஆசுவாசப்படுத்திக்கொண்டிருந்தனர். அங்குமிங்குமாகச் சிதறிக் காணப்பட்ட பெண்கள்கூட்ட மத்தியிலும் அவர்களுக்கே உரித்தான குசுகுசுப்புகளுக்கும் குறைவிருக்கவில்லை. சற்று முன் அங்கு ஏதோ பரபரப்பூட்டக்கூடிய சம்பவம் நிகழ்ந்திருக்கவேண்டும்.

'உந்தப் உச்சில் மூலைப் பொடியளுக்கு எப்ப வந்தது இந்தச் சண்டித்தனம்? பொறுமைப்பட்டு திருவிழாவிலை 'லையிற்' வயரை அறுத்து திருவிழாவைக் குழப்பினதும் போதாமல் சண்டித்தனத்துக்குமெல்லே வெளிக்கிட்டினம்!' - என்று கையில் ஒரு பொல்லுடன் அங்குமிங்குமாக நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தான் வாய்க்கால்தரவைவட்டாரத்தின் முதல்தர சண்டியன் என்று பெயர் எடுத்த துரையன். மனைவி மக்கள் என்ற பொறுப்பை உணராமல் மனம்போன போக்கில் திரியும் அவனுக்கு இப்படித் தடியெடுப்பது குஷியான ஒரு பொழுதுபோக்கு.

'எடதம்பி! சும்மா ஏன் இப்ப சத்தம் போடுறாய்? அதுதானே உங்கள் ஆத்திரம்தீர அவங்கடை காரை மறிச்சு அவங்களுக்கும் அடிச்சு அனுப்பிவிட்டியள். பேந்தும் ஏன் சும்மா கூட்டம் கூட்டிறியள்? போங்க. போய் அவரவர் வேலையைப் பாருங்க. சிலநேரம் அவங்கள் பொலிசைக்கொண்டு வந்தாலும் வருவாங்கள்' என்று அந்த வட்டாரத்தின் மதிப்புக்குரிய பெரியவர்களில் ஒருவரும் தமிழ் ஆசிரியருமான ஒருவர் கூறியதைக்கேட்டு இளைஞர்கள் கூட்டம் சிறிது சிறிதாகக் கலைந்தது.

'பிள்ளையாருக்கு திருவிழாச்செய்ய வெளிக்கிட்டு உச்சில்மூலையாருக்கும் வாய்க்கால்தரவையாருக்கும் வெட்டுப்பகை குத்துப்பகை வந்ததுதான் மிச்சம்' — என்றுபொருமினர் ஒரு வயோதிபர்.

சினிமா விளம்பரப் பக்கத்தில் தன்பார்வையை நுனிப்புல் மேயவிட்டவண்ணமாக நின்றுகொண்டிருந்தான் கதிரவேலு. அவன் கண்கள் ஓரிடத்தில் அப்படியே நிலைகுத்தி நின்றன. தமிழ் திரையுலகக் கதாநாயகி ஒருத்தி பின்னலைத் தன்முன்னழகின் ஏற்றஇறக்கங்களை எடுத்துக் காட்டும் வகையில் முன்னுக்கு விட்டுக்கொண்டு அவனைப் பார்த்து ஒரு மந்தகாசமான புன்னகையைச் சிந்திக்கொண்டிருந்தாள். அவள் நின்றிருந்த அந்த ஒயிலும் எடுப்பும் அவனுக்கு அவன்காதலி அஞ்சுகத்தையே நினைவூட்டியது. மன்னிக்கவும், அஞ்சுகத்தின் நினைவாகவே இருந்த அவனுக்கு அந்த நடிகையின் தோற்றமே அவளாக உருவெடுத்து அவனை அலைக்கழித்தது.

இன்று எப்படியும் அவளைச் சந்தித்தேயாகவேண்டும்! ஆறு நாட்கள் லீவில் வந்த அவன், உச்சில்மூலை வட்டாரத்தைச் சேர்ந்த அவன் காதலி அஞ்சுகத்தை சந்திக்கப் பயந்து, பயந்து ஒத்திப்போட்டதால் நான்கு நாட்கள் வீணாகிவிட்டன. நாளை அவன் மீண்டும் கொழும்புக்குப் பயணமாக வேண்டும். இன்று அவன் அவளைச் சந்திக்காவிட்டால் இன்னும் ஒருமாதத்திற்கோ இரு மாதங்களுக்கோ அவளைச் சந்திக்க முடியாது. புதிதாக அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து 'புரபேசன் பீரியட்'டில் இருக்கும் அவனால் நினைத்தபோது லீவும் எடுக்க முடியாது தானே? 'புரபேசன்பீரியட்'டின்மேல் அவனுக்குகோபம் கோபமாக வந்தது.

அவனுக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது என்று அறிந்ததும் அவள் அன்று என்னமாதிரி குதூகலித்தாள்! அவன் கொழும்புக்குப் போனமறுநாளே விநாயகருக்கு பூசைச் செலவுக்குப் பணம்கட்டி அக்கம் பக்கமெல்லாம் மோதகம் கொடுத்ததையும் அவள் அவனுக்குக் கடிதத்தில் எழுதியிருந்தாளே!

வசிட்டர் மூலம் அருந்ததியின் மோதகத்தைப் பெற்ற விநாயகர் மகிழ்ச்சி அடைந்தாரோ என்னவோ, ஆனால் அஞ்சுகத்தின் மோதகத்தால் அவசியம் அவர் மகிழ்ச்சியடைந்திருப்பார். அந்த விநாயகரே இன்று அவனுக்கு 'வில்லனாக' இருக்கிறாரே!! பின்னே இல்லையா? அவரால்தானே — அவருக்கு என்று செய்த திருவிழாவால்தானே - இந்த அடிபிடி எல்லாம் ஏற்பட்டது; ஒன்றுக்குள் ஒன்றாக இருந்த இரு வட்டாரங்கள் ஒன்றையொன்று பகைத்துக் கொண்டன.

சினத்துடன் தலையை நிமிர்த்தி சனசமூக நிலையயன்னலுக்கூடாக தெரிந்த ஆலயத்தைப்பார்த்த அவன் மறுகணமே சினந்தணிந்தவனாக மனதிற்குள் ஏதோ வேண்டிக்கொண்டு மீண்டும் விநாயகருக்கே 'சரண்'டர் ஆனான்.

சிறு வயதிலிருந்தே அந்த விநாயகரிடம் அவனுக்கு அப்படி ஒரு பயம் கலந்த பக்தியும் அந்தப் பக்தியினால் விளைந்த ஒரு நம்பிக்கையும் உண்டு.

தந்தையைச் சிறுவயதிலே இழந்த தான் தாயின் உழைப்பிலே கல்லூரியில் சேர்ந்து படித்ததும், அங்கு அஞ்சுகத்தின் மாமி மகனை முரட்டுமுருகேசனின்எதிர்ப்பையும் சமாளித்து அஞ்சுகத்தின் நெஞ்சில் இடம் பிடித்துக்கொண்டதும், அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைத்ததும், முன்னர் அவர்களின் காதலுக்கு பெரும் எதிர்ப்புக் காட்டிய அஞ்சுகத்தின் பெற்றோர் பின்னர் அவன் உத்தியோகமானதும் அவர்கள் காதல் விவகாரத்திற்கு கண்டதும் காணாததுமாக அனுமதி கொடுத்ததும் - எல்லாம் அந்த விநாயகரின் அருள்தான் என்பதில் அவனுக்கு அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை.

'விநாயகரே இதெல்லாம் செய்த நீ இன்று எப்படியும் அவளைச் சந்திப்பதற்கும் ஒருவழியைக்காட்டு' ...என்று விநாயகர் மீதுபழியைப் போட்ட பின்னரும் கூட அவனுக்கு அங்குசெல்வதை நினைக்கும் போது பயமாகத்தான் இருந்தது. பின்னே இருக்காதா? இருவட்டாரங்களும் சுமுகமான நிலையில் இருந்த போதே அவர்கள் இருவரும் இருட்டியபின் அந்த வடலி அடைப்பு மறைவில் தானே ஒருவர் கண்களிலும் படாமல் சந்தித்து வந்தார்கள். இப்போ இரு வட்டாரங்களும் ஒன்றை ஒன்று பகைத்துக் கொண்டிருக்கும் இந்த நிலைமையில் அங்கு போவது என்பது ஒரு சிக்கலான விஷயந்தானே?

நேற்றுக்கூட சி. ரீ. பீ. கொண்டக்டர் ஒருவரை கடையடியில் வைத்து நையப் புடைத்து விட்டார்களாம். அதன் எதிர் ஒலியாகத்தான் சற்றுமுன் உச்சில் மூலைவட்டாரத்தைச்சேர்ந்த கார்க்காரர் ஒருவரையும் அதில் உல்லாசப்பிரயாணம் செய்துகொண்டு வந்தவரையும் வழிமறித்து சனசமூக நிலைய முன்றலில் வைத்து மொத்தி அனுப்பியிருந்தார்கள். ஒருவேளை இந்தவரிசையில் அடுத்த முறை தனதாக இருக்குமோ என்றுஎண்ணிய போது அவனுக்கு புளியைக் கரைத்தது.

எது எப்படியானாலும் சரி, அஞ்சுகத்தைப் பார்த்து தன் முதல் சம்பளத்தில் அவளுக்கென தான் வாங்கி வந்த அந்த அன்புப் பரிசை அவளிடம் கொடுத்து அதற்கு மாறாக அவளிடமிருந்து ஒரு ..........தையாவது பெற்று வரவேண்டும் என்ற அந்தத் தீவிரத்தில் அவனைக் கப்பியிருந்தபயம் கொஞ்சம்கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருந்தது

பயம் ஆசையைச் சீண்ட, ஆசை திருப்பி பயத்தைக் கடிக்கபோராட்ட உள்ளத்துடன்வீட்டை நோக்கிநடந்தான் கதிரவேலு.

இரவு எட்டு அல்லது எட்டரைதான் இருக்கும். எதிரேவரும் ஆளை ஆள் அறிந்து கொள்ள முடியாத கும்மென்ற முன்னிருட்டு. ஆனால் அந்த இருட்டிலும், வடலி அடைப்புக்குள், ஆளையாள் அறிந்துகொண்டு நீண்ட நாட்கள் பிரிவின் பின் சந்தித்த பரவச நிலையில் தம்மை மறந்து இருந்தார்கள் கதிரவேலுவும் அவனின் அஞ்சுகமும். இருட்டில் ஆளையாள் அறிந்து கொள்ளும் சக்தி அவர்களின் கண்களுக்கு இல்லாவிட்டாலும் அவர்களின் கைகளுக்கு அவசியம் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒருவர் முகத்தை ஒருவர் இப்படி வருடிக்கொள்வானேன்?

பயத்தினால்வியர்த்துப் போயிருந்த அவன் முகத்தை அவள் வருடியபோது கதிரவேலனுக்கு மயில் இறகால் யாரோ நீவி விடுவது போலிருந்தது. ஓ அவள் கரங்கள்தாம் எத்தனை மென்மையானவை!

வெறும் கையால் அவன் முகத்து வியர்வையைத் துடைத்துவிட முடியாது என்று உணர்ந்த அவள் [illegible] தன் பாவாடையால் அழுத்தித் துடைத்துவிட்டாள். அப்போது என்றும் நடைபெறாதது ஒன்று நடந்தது. சடக்கென்று அவளை வளைத்து தன் மார்புடன் இறுக்கிக்கொண்ட அவன் அவள் கன்னத்துடன் தன் கன்னத்தைச் சேர்த்து அழுத்திக்கொண்டான். அவனின் இத்திடீர் செய்கையால் சிறு மின்-அதிர்ச்சியுற்ற அஞ்சுகம் தன்னை நெளித்து ஒருவாறு அவனிடமிருந்து விடுவித்துக்கொண்டாள்.

''பாருங்கோவன் அவரை; இது என்ன அழுகல் பழக்கம்''- என்று அவன் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளியவள், ''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமே? எங்கடை கல்யாண விஷயமாக அம்மா உங்கடை அம்மாவோடை கதைக்கவேணும் எண்டு நல்ல நாள் பாத்திருந்தா. அதுக்கிடையில் இந்த இளவுச் சண்டை வந்திட்டுது''- என்று ஒரு சிணுங்கலுடன் கூறினாள். அவனோ, மூன்று வருடங்களாக வரம்பு கடவாமல் பழகிவந்த தான் இன்று வரம்பு மீறியதை எண்ணி வெட்கியவனாக மௌனமானான். அவன் மௌனமாக இருப்பதைக் கண்டு,

''என்ன நான் அழுகல் பழக்கம் எண்டு சொன்னதிலே கோவமே? நான் சும்மா பகிடிக்குத்தானே சொன்னனான்''- என்று கூறிய அவள், அவன் சற்றும் எதிர்பாராதவகையில் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள். அவனுக்கு ஏனோ, தான் அண்மையில் பார்த்த 'ரோமியோ அன் ஜூலியட்' ஆங்கிலப் படத்தின் கதாநாயகிதான் ஞாபகத்திற்கு வந்தாள். அவன் அவள் கரங்களைப்பற்றிக்கொண்டு கூறினான்- ''எங்கம்மாவுக்கு உன்னிலை நல்ல விருப்பம்.''

அவன் உணர்ச்சிவசப்பட்டிருப்பதை அவன் கரங்கள் இலேசாக நடுங்குவதிலிருந்து கண்டுகொண்டாள் அவள்; இனியும் தாங்கள் தனிமையில் இருப்பது சரியல்ல என்று உணர்ந்த அவள்,

''அம்மா தேடப்போறா; நேரமாச்சு நான் போறன்'' என்று கூறி அவனை விழிப்படையச் செய்தாள். விழிப்படைந்த அவன் இலேசாகச் சிரித்தான்; 'களுக்' என்று அவளும் உடன் சிரித்தாள். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட நிலையில் இருவரும் பிரிய மனமில்லாமல் பிரிந்தனர். பிரியும்போது அவள் அவனை எச்சரித்தாள்-

''கவனமாகப் போங்க, உங்களை அந்தக் காவாலிப் பொடியள் நிக்குங்கள். நேற்று உங்கடை ஆட்கள் வாசியசாலையடியில் காரை மறிச்சு அடித்த ஆத்திரத்திலை திரியுதுகள்.''

''உந்த இருட்டிலை யார் காணப்போறான்கள்; றோட்டைக் கடந்து ஒழுங்கைக்கை போனால் ஒருத்தருக்கும் தெரியாது''- அவன் அவளுக்கு ஓர் ஆறுதலுக்காக அப்படிக் கூறினானேயொழிய அவன் இதயம் என்னவோ 'பக் பக்'என்று அடித்துக் கொண்டேதானிருந்தது.

வடலியடைப்பைவிட்டு வெளியே வந்த கதிரவேலு, றோட்டின் இருபக்கமும் யாரும் வருகிறார்களாஎன்று அந்த இருளில் கண்களால் துளாவிவிட்டு, விடுவிடு என்று நடந்தான். அவன் இதயத்துடன் சேர்ந்து கால்களும் துடித்தன. ஆச்சு, இன்னும் ஒரு சொற்பதூரந்தான். அவன் அந்த ஒழுங்கைக்குள் இறங்கிவிட்டால் அவனை ஒருவரும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது.

ஒழுங்கைக்குச் சற்றுத் தொலைவில் இருந்த மதவடியிலிருந்து திடீரென்று ஒரு டோச்லையிட் ரோட்டில் ஒளியைப் பீச்சிக்கொண்டுவந்து அவன் மீதும் பரப்பியது. அதிர்ச்சியுற்ற கதிரவேலு டோச் லையிட்டின் ஒளிப்பிரவாகத்தால் கூசியகண்களைக் கையால் மறைத்துக்கொண்டான்.

''உங்காற்ரு வாய்க்காற்தரவையான் போறான்!'' என்று ஒரு குரல் ஓங்காரமாக ஒலித்தது. கதிரவேலுவுக்கு திக்கென்றது. அதை அடுத்து பலருடைய காலடி ஓசைகள் திம் திம் என்று கேட்டன. டோச் வெளிச்சம் வெகு அண்மையில் வந்துவிட்டது. யாரோ வேலியில்தடிமுறித்தார்கள்.

கதிரவேலு ஒருதீர்மானத்திற்கு வருவதற்குள் அது நடந்துவிட்டது! யாரோ, அவன் தலையில் ஓங்கி ஏதோ ஒன்றால் அடித்தார்கள். அதைத்தொடர்ந்து பல அடிகள் அவன் உடல் முழுவதும் விழுந்தன முதல் அடியிலே பொறிகலங்கிய அவன்வாயிலிருந்து ஒரு சொல்தானும் வரவில்லை; நினைவிழந்து அப்படியே தரையில் சாய்ந்துவிட்டான்!

அப்போ, யாரோ ஒருவன் ஒருகையில் மண்வெட்டிப் பிடியும் மறுகையில் டோச்சுமாக ஓடிவந்தான். கோபாவேசத்தில் வாய்க்குவந்ததையெல்லாம் பேசிக்கொண்டிருந்த முருகேசன் அந்த மண்வெட்டிப்பிடியைப் பறித்துக்கொண்டு விழுந்து கிடந்த கதிரவேலுவை நோக்கிப் பாய்ந்தான். அதோ! பூண்போட்ட அந்த மண்வெட்டிப்பிடி கதிரவேலுவின் உடலைப்பதம் பார்க்கப் போகிறது.

அப்போது, ''ஐயோ அவரை அடியாதை

(14-ம் பக்கம் பார்க்க)

''என் கால்களுக்குப் பசுந்தளிர்''
என்ற தலைப்பில்
'எங்கள் கிராமம் தொடர் அம்சத்தில்'
'மாவிட்டபுரம்'
பழம் பெரும் எழுத்தாளர்
அ. செ. மு. எழுதுகிறார்
28-11-70 வார மலரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகாம்பரம்

அ. செ. மு.

இறக்கைகளை மறுபடியும் தட்டிவிட்டு கிழக்கு நோக்கிப் பறந்தேன்.. கோபுர தரிசனம் கண்டு பூமியில் இறங்கினேன். பழையநாள் நாதசுர வித்துவான் ஒருவர் வீட்டிலே வீணை, தம்புரா, ஆர்மோனியம் வயலினுக அநேகம் வாத்தியக் கருவிகள் அடுக்கு வரிசையில் காணப்பட்டன. விற்பனைக்காயிருக்குமோ அல்லது சங்கீதப் பள்ளிக்கூடமாயிருக்குமோ? ஆர்மோனியச் சுருதியுடனே பாடிப்பார்க்கவேண்டுமென்று எனக்கு நீண்ட நாட்களாக ஓர் ஆசை. என் குரலில் எத்தனைகட்டை சுருதி பேசுகிறதென்று கணித்து அதனைத் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டுமென்பது என் அவா. எல்லாம் சில காலமாக எழுந்துள்ள திமிரி பாரி நாதசுர வாத்தியக் கிளர்ச்சியுடனே உண்டானதுதான். அதனால் அவ் வீட்டினுள் மெதுவாக எட்டிப் பார்த்தேன். ஒருவாத்தியக்கருவிகூட ஆளில்லாமல் சும்மா இல்லை. ஒவ்வொன்றுக்கும் முன்னால் ஒரு கலைவாணி ஆராக் காதலுடனே இசைக்கருவிகளைத் தழுவிக்கொண்டு அமர்ந்திருந்தாள். ஓகோ நான் எங்கே வந்து விட்டேன். இதென்ன அந்தப் பழைய நாள் நாதஸ்வர வித்துவான் வீடா? அல்லது நான்தான் தெரியாமல் இடம் மாறி வந்துவிட்டேனோ என்று எண்ணி ஒருகணம் திகைத்தேன். ஒருவேளை... ஆம், அப்படியுமிருக்கலாம். அவர் பழைய நாளில் தானே நாதஸ்வரக்காரராக இருந்தார். அவரது பிள்ளைகள் வயலினும் வீணையும் வாசிப்பவர்களாகி இருக்கலாம். ஆனால் அத்தனை பேரும் அவருடைய பிள்ளைகளாக இருக்கமாட்டார்களாதலால் சங்கீதம் கற்று சங்கீத வாத்தியாராகவோ வாத்தியார் அம்மாவாகவோ தொழில் பார்க்கும் அவரது பிள்ளைகள் வீட்டிலே நடத்தும் இசைவகுப்பாக இருக்கக் கூடும்.

அவ்வளவில் அதற்குமேல் முன்னேறுமலேதிரும்பி விட்டேன். சுருதி கணிக்கச்சுருதி கூட்டிப்பாடிப்பார்க்க வேண்டுமென்று உள்ளத்தினுள்ளாக ஓர் ஆசையிருந்தாலும் இந்தச் சர்ப்பனை பெட்டியின் சீற்றமும் கதறலும் இரண்டுக்கும் மேலாக அதன் அந்நிய வடிவமைப்பே காததூரத்திற்கு என்னை விரட்டி விடும். அதுதான் உண்மை.

கோவில் மேற்கு வீதியிலே குடியிருக்கும் இவ்வூர் வாசியான மற்றொரு முதுபெரும் நாதசுரக்காரர் இராசாவீட்டில் நாதசுரம் கற்றுக்கொள்ளும் சிறுவர்களின் கீச்சு மாச்சு கானம் என் கவனத்தை அங்கு திருப்பிற்று. இராசாவின் ஒரு மகளுக்கு சமீபத்திலே கல்யாணமாம். இவ் வூரில் மேளக்காரர் குடியிருப்பில் சரியாக நாற்பதாண்டுகளுக்குமுன் நாதஸ்வரக்காரர் இராசாவீட்டில்தான் முதல்தடவையாக கிராமபோன் பாடியதைக் கேட்டேன். சில நாட்களுக்குமுன் இராசாவீட்டுப் பக்கம் போய்க்கொண்டிருந்த போது 'ஜிக்கி ஜல்லி லக்கி என்று ஒரு சினிமாப்பாட்டைக் கிராமபோன் பாடியது என் காதில் வீழ்ந்தது. அடேயப்பா எவ்வளவு காலம் நாற்பதாண்டுகளுக்கு முன்பு வாங்கிய அந்த கிராமபோனையா இராசா இன்னமும் பத்திரமாக வைத்துக்கொண்டிருக்கிறார்.

இராசாவிற்கு எம். எஸ் பாட்டிலே ஒரு தனிமோகம் எம். எஸ்ஸின் இசைத்தட்டுகள் நிச்சயம் அவரிடமிருக்கும் கிராமபோனில் ஜிக்லி லல்லி பாட்டுவைத்து விளையாடியது வீட்டிலே வளரும் புதிய பரம்பரையாக இருக்கும். ஒருவேளை கல்யாணமாகப்போகும் பெண்ணுக்கூடவிருக்கலாம். அப் பெண்ணுக்கும் கூட எம். எஸ்ஸின் பெயரைத்தான் தகப்பனர் சூட்டியிருக்கிறார். இராசாவின் தாயாரே சுப்புக்குட்டி. பழைய நாளில் பெரும்பாடகி. பெண்ணுக்கு போதிய தமிழ்ப் படிப்புப் படிப்பித்திருக்கிறார். மணமகன் அளவெட்டி ஊர் வாசியும் மற்றொரு பழம் பெரும் நாதசுர வித்துவானுமான விசுவலிங்கத்தின் குமாரராம். (அரசாங்க சேவ)

'இராசாண்ணே, கல்யாணத்தை வலு 'டீங்கா'கச் செய்யவேணும் ஒண்டையும் யோசிக்காதேயும் நானெல்லோ வெண்டு தாறன்' மாவிட்டபுரம் இராசா மேளத்துக்கு வாடிக்கையாக கார்விடும் மயிலம்மான்தான் சொல்கிறார். அதுவும் என்காதில் கேட்கிறது.

ஒரு மகோன்னத வைபவம் என்ற தலைப்பில் இராசாவுக்குப் பொற்கிழி அளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டிய நிகழ்ச்சி 10-2-57 ஈழகேசரி இதழில் ஒரு நிருபர் கட்டுரையாக வெளியாகியிருந்தது. அந்தக் கட்டுரையிலிந்து ஒரு சிறு பகுதியை இங்கு தருகிறேன்.

'ஆடலிலும் பாடலிலும் புகழ்பெற்று 'காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே என்னை கைதூக்கி ஆள் தெய்வமே' என்றபழையபாடலை சென்ற ஞாயிற்றுக்கிழமை நாதஸ்வர குழலோசையில் கேட்க நேர்ந்தது. மாவிட்டபுரம் முருகன் சந்நிதியிலிருந்து காற்றில் மிதந்துவந்த அந்த சங்கீதம் கோவில் வசந்த மண்டபத்துக்கே என்னை இழுத்துச் சென்றுவிட்டது. மாவிட்டபுரம் பழம்பெரும் வித்துவான் இராசாதான் வாசித்துக்கொண்டிருந்தார். பக்தி உள்ளத்தைத் தொடும்படியாக எம். எஸ். பாடியிருக்கும் அத்தனை கனிவும் குழைவும் இராசாவின் குழலோசையில் பெருகிப் பிரவகித்தன. அளவெட்டி தவில் வித்துவான்கள் கணேசுவும் தட்சிணமூர்த்தியும் அன்று தவில்வாசித்தார்கள்.

வேலைத் தூக்கும் பிள்ளையின் சந்நிதியில் பழம்பெரும் வித்துவான் இவ்வாறு கீதாஞ்சலிசெய்ததுகைமேல் பலனளித்ததுபோல கோயில் வசந்தமண்டபத்தில் விழா வைச் சிறப்பிப்பதற்காகக் கூடியிருந்தபெருமக்கள் இராசாவுக்குப் பட்டாடை போர்த்தவும் தங்கப் பதக்கம் வழங்கவும் பொற்கிழி

(10-ம் பக்கம் பார்க்க)

# வெள்ளி மல்லிகை

# பஞ்சாமிர்தம்

## மரண பயமா?

ஒரு நல்ல மனிதனுக்கு இவ்வாழ்விலோ அல்லது அதன்பின் மரணத்திலோ ஒருபோதும் தீமை ஏற்படாது. மரணம் என்பது ஒன்றில் உணர்ச்சிகளும் சொர்ப்பனங்களுமில்லாத ஒருவகை நித்தியமான நித்திரையாயிருக்கவேண்டும் அல்லது முன்னோர் இருக்கும் ஒரு புதிய, சிறந்த உலகத்துக்கு நாம் செய்யும் பயணமாயிருக்கவேண்டும். எதுவாயிருந்தாலும் அது தன்மையே ஒழிய தீமையல்ல.

—ஸோக்கிறட்டீஸ் ஞானியார்.

## அவர் எழுதிய தமிழ்

நான் திருக்குறள் படித்தவன். என்பால் பிடிவாதம், வன்மம், கோபம் முதலிய தீக்குணங்கள் மலிந்து கிடந்தன. வெறும் திருக்குறள் படிப்பு தீக்குணங்களை அறவே களையவில்லை. கமலாம்பிகையின் சேர்க்கை அத் குணங்களைப் படிப்படியாக ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவளல்ல; மனைவாழ்க்கையில் ஈடுபடத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது; திருவள்ளுவர் உள்ளத்தை உணர்தற்கு மனைவாழ்க்கை இன்றியமையாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று யான் பின்னுளில் எழுதிய திருக்குறள் விரிவுரைக்கு இல்வாழ்க்கையின் அனுபவம் பெரும் துணையாய் நின்றது.

—திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்.

## அதிசய ஒற்றுமைகள்

அமெரிக்க மாவீரத் தியாகிகள் ஆபிரகாம் லிங்கன், ஜோன் கென்னடி - இருவரும் நீக்கிரோ உரிமைக்காகப் போராடி சுட்டுக் கொல்லப்பட்டவர்கள். லிங்கன் 1860 இல் ஜனதிபதியானர். கென்னடி 1960 இல் ஜனதிபதியானர். இருவரும் பதவியிலிருந்தபோதே சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இருவரும் கொலை செய்யப்பட்டது ஒரு வெள்ளிக்கிழமையில்- இருவரும் பின்னாலிருந்து சுடப்பட்டார்கள். இருவரும் தமது மனைவியர்கண்முன்னே சுடப்பட்டனர். இருவருக்கும் வாரிசாக வந்தவர்களின் பெயர் ஜோன்சன். இருவருக்குமே பதவிக்காலத்தில் பிறந்த குழந்தை இறந்துவிட்டது, லிங்கனைச் சுட்டுக்கொன்றவன் பூத். கென்னடியை சுட்டவன் பெயர் ஒஸ்வால்ட். இரு கொலைகாரரும் அமெரிக்க தென்ராஜ்யத்தை சேர்ந்தவர்கள். இருவரும் நிறவெறியை ஆதரிப்பவர்கள். இருவரும் விசாரணைக்குமுன்பே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

## வைரக் காதல்

நடிகர் றிச்சேட் பேட்டன் தமது காதல் சின்னமாக ஆசை மனைவி எலிசபெத் டெய்லருக்கு வாங்கிக் கொடுத்த வைரத்தின் விலை எவ்வளவென்று ஒருவருக்கும் தெரியாது. ஆனல் அதை பேட்டனுக்கு விற்றவர் ஓர் ஏல விற்பனையில் ஒரு லட்சத்து ஐம்பதினயிரம் டாலர்களுக்கு வாங்கினராம். அந்த வைரத்தின் மதிப்பு 69.42 கறட். வங்கியின் பாதுகாப்பிலிருந்து வெளியே எடுத்து ஒரு முறை அதை அணிந்துகொள்ள 1500 டாலர்கட்ட வேண்டுமாம்! அவ்வளவு பெரியதொகைக்கு அந்த வைரம் இன்ஷூர் செய்யப்பட்டிருந்தது. 1477-ம் ஆண்டு அவுஸ்திரிய சக்கரவர்த்தி மாக்ஸிமிலியன் தன் காதற்கிளத்திக்கு ஒரு வைரமோதிரம் அன்பளிப்பு செய்த நாள் முதல் தான் வைரம் காதலின் சின்னமாகியது.

## சாப்பிட்டேனு இல்லையா?

பேராசிரியர்கள் ஞாபக மறதிக்குப் பேர்போனவர்கள். ஒரு பேராசிரியர் பல்கலைக்கழகத் தோட்டத்தில் நடந்துபோய்க்கொண்டிருந்தார். மாணவன் ஒருவன் அவரை அணுகி ஒரு கணக்குப் போடும்முறையை விளக்கும்படிகேட்டான். பேராசிரியர் மிகவும் பொறுமையோடு கணக்கை சொல்லிக்கொடுத்துவிட்டு 'நான் எந்த வழியால் போய்க்கொண்டிருந்தேன்' என்று கேட்டார். மாணவன் வழியைக் காட்டினன்.

'ம் அப்ப சரி, நான்சாப்பிட்டுத்தானிருக்கவேண்டும்' என்று முணுமுணுத்தபடி பேராசிரியர் வந்த வழியால் திரும்பி நடையைக்கட்டினர்,

தயாரிப்பு: — வழிப்போக்கன்

# வயலின் மேதை
# ராஜமாணிக்கம்பிள்ளை

வயலின்மேதை கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை சில தினங்களுக்கு முன் மறைந்துவிட்டார். மேல் நாட்டு வாத்தியமான வயலினை தமிழ் நாட்டில் முதல் வாசித்துக் காட்டியவர்கள் வேறு யாரோ என்றாலும், அந்தக் கருவியை லாவகமாகவும் கம்பீரமாகவும் கையாண்டு கர்நாடக இசையுடன் இரண்டறக் கலக்கச் செய்தவர்கள் இருவர். ஒருவர் காலஞ்சென்ற மைசூர் சௌடையா. மற்றவர் கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை.

பிள்ளை அவர்கள் 45 ஆண்டுகளாக வயலின் இசையுலகின் மன்னனுகத் திகழ்ந்தார். அவர் வயலின் பக்க வாத்தியம் வாசிக்கிருர் என்றால் பெரியதொரு கூட்டம் கூடிவிடும். அவர் பக்கவாத்தியம் வாசிக்கும்பொழுது பாடகருக்கு இடைஞ்சல் கொடாமல் பாடகரை உற்சாகப்படுத்தி அவருக்குக் கரகோஷம் வாங்கிக்கொடுத்து பின்பு தன்னுடைய இடத்தில் உச்சஸ்தாயியில் வாசித்து சபையோரிடம் சபாஷ் பெறுவார். திரு. ராஜமாணிக்கம்பிள்ளை முன்பு அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப் பேராசிரியராக இருந்தவர். பாரத மத்திய அரசு அவ[illegible] யும் சென்னை சங்கீத வித்வத்சபை சங்கீத கலாநிதி என்ற பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தன. இவர் திருவிதாங்கூர் மகாராஜாவின் ஆஸ்தான வித்துவானுக இருந்து மகாராஜாவிடம் பல பரிசுகள் பெற்றவர். அவரது வயலின் இசையினுல் கவரப்பட்ட திருவிதாங்கூர் மகாராஜா ஒரு யானையை அவருக்குப் பரிசாக அளித்தார்.

திரு. ராஜமாணிக்கம் பிள்ளையின் வயலின் வாசிப்பு எப்படி அமுதம்போல் அதிமதுரம் சொட்டுமோ அப்படியே அவருடைய குண நலன்களும். அன்பும், பண்பும் நிரம்பியவர் பொருமை கொஞ்சமும் இல்லாதவர் உண்மையும் நேர்மையும் நிரம்பியவர். அவருடைய முகத்தில் எப்படி சங்கீத ஞானம் நிரம்பி வழியுமோ அப்படியே குணங்களும் பண்புகளும் நிரம்பித் தெரியும்.

ஒரு தடவை செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் அவர்களின் கச்சேரிக்கு சௌடையா வயலின் வாசிப்பதென ஏற்பாடாகி இருந்தது. கச்சேரியன்று சௌடையா ஏதோ தாமதத்தினுல் வரப்பிந்திவிட்டது. அப்பொழுது பாடகர் திரு. இராஜமாணிக்கம்பிள்ளையை வயலினை எடுத்துவரும்படி கூறியதும் அவரும் தட்டாது எடுத்துக்கொண்டுவந்து வாசித்தார். சிறிது நேரத்தின்பின் சௌடையா வந்தார். அதைக் கண்ட பிள்ளை அவர்கள் மேடையைவிட்டு இறங்கிச்சென்று ஒரு மாலையைச் சௌடையாவின் கழுத்தில் போட்டு அவரை அழைத்துவந்து மேடையில் இருத்தி வயலின் வாசிக்கச் செய்தார். பிள்ளையவர்களின் கண்ணியத்திற்கு இது எடுத்துக்காட்டு. இன்னெரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிடலாம். பிள்ளையவர்களை ஒருவர் கச்சேரிக்கு ஏற்பாடுசெய்து அச்சாரம் கொடுத்தார்,

ஆனல் எதிர்பாராத தடை காரணமாக பிள்ளை அவர்கள் கச்சேரிக்குப் போக முடியாதுபோய்விட்டது. பின்பு ஒரு வருடங்கழித்து கச்சேரிக்கு ஏற்பாடு செய்தவர்கள் பிள்ளையிடம் ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்யச் சென்ற பொழுது கச்சேரிக்காரர் மறந்திருந்தும் முன்பு தன்னிடம் தந்த அந்த அச்சாரப் பணத்தை பற்றி அவர்களிடம்சொல்லி அப்பணத்தை அவர்களிடம் திரும்பக் கொடுத்தார்.

திரு. ராஜமாணிக்கப்பிள்ளை மறைந்துவிட்டாலும் அவருடைய புகழ் மறையாது. நவீன விஞ்ஞான உலகில் இசைத்தட்டில் அவரது வயலின் ஒலித்துக்கொண்டிருக்கும்.

- இசைப்பிரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சைவ சிந்தாந்தக் கழகத்தின் 'அழகவல்லி!'

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட 'அழகவல்லி' என்னும் நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. இலங்கை சைவசித்தாந்தக் கழகத்தின் சார்பாக திரு. செ. து. தெட்சணாமூர்த்தி இந்த நாடகத்தைத் தயாரித்திருந்தார். கதையின் வசனங்களையும் அவரே அமைத்துப் பழம்பெரும்நடிகர் சிலருடன் இன்று முன்னணியில் நிற்கும் பல நடிகரையும் சேர்த்து இந்தநாடகத்தை மேடையேற்றினர். யாழ்ப்பாண வரலாற்றிலுள்ள 'பூதத்தம்பி' சரித்திரந்தான் 'அழகவல்லி' நாடகம். நடிகையர் பஞ்சத்தினலோ என்னவோ வழமையாகக் கதையில்வரும் 'புது நாயகி' என்னும் பாத்திரம் நீக்கப்பட்டிருந்தது. ஆனல் 'மேரி' என்ற ஒரு புதிய பாத்திரத்தை 'அந்திராசி'யின் மகளாகப் படைத்து 'அட்மிறல்' துரையின் தம்பியாம் 'ஒலாந்தேஸ்' என்ற படைத்தளபதியைக் காதலிக்கவிட்டிருந்தார். மேரியின் நடிப்புத் துடிப்பாக இருந்திருந்தால் அந்தக்காட்சிகள் சோபித்திருக்கும். மேரியின் வசனப்பேச்சில் உயிரில்லை, ஏதோ தமிழ் பேசத் தெரியாதவரின் பேச்சாக அரைகுறைத் தமிழில் முணுமுணுத்து 'ஒலாந்தேஸ்' ஆக நடித்த திரு. சிதம்பரநாதனின் நல்ல நடிப்பையும் ரசிக்கமுடியாமற் செய்துவிட்டார். 'பரியாரி' 'கட்டாடி', சமையற்காரத் 'தவசிப்பிள்ளை' ஆகிய கற்பனைப் பாத்திரங்கள் புகுத்தப்பட்டது மிகவும் பொருத்தமாகவும் ரசிக்கக் கூடியதாகவுமிருந்தது. இந்தப்பாத்திரங்களில்முறையே திரு. மணிவண்ணன், திரு. கமலாகரன், திரு. எஸ். கே. ரி. சர்மா ஆகியோர் தோன்றிக் காட்சிகள் சோடை போகாதபடி காப்பாற்றினர்கள்.

வசனங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்தும், 'அந்திராசி', 'அமுறூல்' துரை, 'மேரி', 'ஒல்லாந்தேஸ்' சம்பந்தப்பட்ட சில வசனங்கள் தேவைக்கு மிஞ்சிய வர்ணனைகளாலும் அடுக்குச் சொற்களாலும் அமைக்கப்பட்டது பழைய 'நாவல்' பாணியில் இருந்தது.

## நடிகர், நடிகையர்:

'பூதத்தம்பி'யாக நடித்த திரு. க. பரராஜசிங்கம் நடிப்பில், பேச்சில், உருவத்தில் எவ்வித குறையுமின்றித் திருப்திகரமாயிருந்தது. சாந்தமும், சற்குணமும், தெய்வபக்தியும் நிறைந்த ஒரு குணசீலராகக் காணப்பட்டார். பாத்திரத்திற்கு ஏற்ற தோற்றம் - வசனத் துடிப்பு - நல்ல முகபாவம் - அமைதியான நடிப்பு - இப்படித்தான் பூதத்தம்பி இருந்திருப்பார் என்று ரசிகர்கள் கற்பனை செய்யும்படி நடித்துக் காண்பித்தார்.

'அழகவல்லி'; இந்தப்பாத்திரம் கதையின் நாயகியாக இருந்தும் பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுக்காதது நாடகத்தின் வெற்றிக்குக் குந்தமாக இருந்தது. சிறோன்மணி - மூர்த்திஏற்ற இப்பாத்திரம் சோபிக்கவேயில்லை. தோற்றமே பொருத்தம்அற்றது. வசனங்கள்ஏற்றத்தாழ்வின்றி உச்சஸ்தாயியில் பேசிக்கொண்டிருந்ததால் நிமிர்ந்துகூட நிற்க முடியாது சோர்ந்து பாத்திரத்தின் தன்மையையே போக்கிவிட்டார். 'முதல் மந்திரி 'அந்திராசி' இந்த 'அழகவல்லி'மேல் ஆசைப் பட்டாரா?' என்று ரசிகர்கள் வாய்விட்டுக் கேட்கக் கூடியதாக இருந்தது. முன் எப்பொழுதும் அனுபவமில்




லாத ஒருவர் பல 'ஏஸ்' நடிகர்களுடன் சேர்ந்து நடிக்கத் துணிந்துமுன்வந்ததைப் பாராட்டலாமேதவிர வேறு எவ்வகையிலும் மெச்சக் கூடியதாக இல்லை. மேலும் நடிக்க விரும்பினல் கதாநாயகி பாத்திரத்தைத் தவிர்த்து ஏதாவது 'சில்லறை' வேடங்களை ஏற்கலாம்.

'அந்திராசி': பழம்பெரும் நடிகர் திரு: இ.பேரம்பலம் அவர்கள் இப்பாத்திரத்தை ஏற்று நடித்தார். அபாரமான முகபாவங்கள் - நறுக்கான பேச்சு - நல்ல சொற்சுத்தம் - ஆனல் அவரின் குள்ளமான கழுத்தும், நடிக்கும்போது அவரையுமறியாது தோள்கள் மேலேஉயருவதும் அவரது தோற்றத்தின் அழகைக் குறைத்துவிடுகிறது. அவருக்குக் கொடுக்கப்பட்ட வசனங்கள் வர்ணனைகள் நிறைந்து மிகவும் நீண்டு இருந்ததாலோ என்னவோ வசனம் ஆரம்பிக்கும்போதே மூச்சைப் பிடித்து, வசனம் முடிவடையும் போதுதான் மூச்சை விட்டு ஆறுகிறர்போல் தெரிகிறது. இந்த இடைவேளையில் பேச ஆரம்பிக்கும்போது எப்படிக் கைகளை வைத்திருந்தாரோ வசன முடிவுவரை அப்படியே வைத்துக்கொண்டார். கால் அசைவுகளும் போதிய கவனம் செலுத்தப் படாது நேரக்கணக்கிட்டு அடிமேல் அடிவைத்து நடப்பதால் இயற்கையாக இல்லாது ஒரு 'யந்திர மனிதனை'ப்போல காட்சியளித்தார். பொதுவாகக் கழுத்துக்குமேல் அவருக்கு இணை அவரேதான்.

'அட்மிறல்'; இப்பாத்திரத்தை ஏற்றவர் பெரும் கலாரசிகர் 'அட்வக்கேற்' திரு. சதா. ஸ்ரீநிவாசன் அவர்கள். பாத்திரத்திற்கு ஏற்ற கெம்பீரமான தோற்றம். அங்கஅசைவுகள் இயற்கையாகவும் அழகாகவும் அமைந்திருந்தன. வசனப் பேச்சும் சுமாராகஇருந்தது, சிலஇடங்களில் தடுமாறிச் சொந்த வசனங்களைக் கையாண்டதும் 'பளிச்' சென்று தெரிந்தது. போதிய ஒத்திகையின்றி நாடகம் மேடையேற்றப் பட்டிருக்கிறது என்பது புலனுகிறது. இருந்தும் அவர்ஏற்ற பாத்திரம் நன்கு ரசிக்கக்கூடியதாயிருந்தது.

'ஒலாந்தேஸ்': திரு. த. சிதம்பரநாதனுக்கு இது மிகவும்பொருத்தமான பாத்

## ஒரு கண்ணோட்டம்

திரம்அனுயாசமான அவரின் நடிப்பிற்கும் சுத்தமான வசனப் பேச்சுக்கும் ஈடு கொடுத்து நடிக்க அவர் காதலி ''மேரி''யாக நடித்த செல்வி கோமதியால் முடியவில்லை. இதனுல் இவரின் திறமைமுழுமையாகப் பிரதிபலிக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. பாட்டும் பாடக் கூடியவர் என்பதை அவர் மேரியுடன் சேர்ந்துபாடிய ஒரு பாட்டே தெரியப்படுத்தியது. சில சந்தர்ப்பங்களில் முகபாவங்கள் சிறிது மிதமாக இருந்தால் முகத்தில் கூடுதலான சுருக்கங்களும் கோணல்களும் தென்பட்டன. நல்ல தயாரிப்பாளர்களின் நாடகங்களில் நடித்தால் நன்கு சோபிக்கக் கூடியவர்- இந்த நாடகத்தில் இவர் நன்கு பயன்படுத்தப்படவில்லை.

''கைலாயவன்னியன்''; திரு. செ. மகேஸ்வரன் அவர்கள் ஒரே ஒரு காட்சியில் தோன்றினலும் தன் பாகத்தைத் திறமையாக நாடக ரசிகர்களையும் ஒரு ஆட்டம் ஆட்டிவைத்துவிட்டார். அவர் தோன்றிய எல்லாக்காட்சிகளையும் ரசிகர்கள் நன்கு ரசித்தார்கள். நல்லதோற்றமும் சுத்தமான தொனியும், முகபாவம் அசைவுகள் யாவும் வெகு கெச்சிதமாகவுமிருந்ததால் அவர் நடிப்பை வெகுவாக ரசிக்கக்கூடியதாயிருந்தது.

''ஞானப்பிரகாசர்'': திரு வி.ரி. ஏ. விஸ்வாவும் இப்பாத்திரத்தை எந்த வகையிலும் சோடைபோகவிடவில்லை, வாத்தியார், பாதிரியாருடன் சேர்ந்து நடித்த காட்சிகளிலும் சிதம்பரம் போகப் புறப்படும் தனிக் காட்சியிலும் மிகப் பாராட்டக்கூடியதாய் அமைந்தது அவர் நடிப்பு.

''பாதிரி'': திரு. சி. சண்முகவடிவேல் அவர்களுக்கு அமைந்த பாதிரிவேடம் மிகவும் கவர்ச்சிகரமாயிருந்தது. அடக்கமானபேச்சும் நடிப்பும், பூதத்தம்பியின் நடித்து ரசிகர்களின் பாராட்டைப்பெற்றர். நல்ல அழகான தோற்றம். உணர்ச்சி மிக்க விறுவிறுப்பான வசனப் பேச்சும் நடிப்பும் அவரை ஒரு நல்ல நடிகர் என்று காட்டியது. மேலும் இரண்டொரு காட்சிகளில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

''சோதிநாதன்'': செல்வன் இராஜஇராஜமோகன் சிறுவனுகஇருந்தும்மேடைக் கூச்சமின்றிநடித்ததுபாராட்டுக்குரியது' அழகவல்லி'யுடன் தோன்றிய காட்சியில் பாட்டுப்பாடமுடியாது கஷ்டப்பட்டு,வசனங்கள் பேசியது கூடக்கேட்கக்கூடியதாக இல்லாதுபோய்விட்டது. பாட்டைப்பாடாமலேநிறுத்தியிருக்கலாம். 'அட்மிறல்' துரையுடன் பேசும்போது வெகு திறமையாக நடித்துக் கெட்டிக்காரப்பையன்என்ற நற்பெயரைத் தட்டிக் கொண்டார். போதிய பயிற்சியளித்தால் நடிப்புத் துறையில் இவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பது தெரிகிறது.

''ஆராய்ச்சி''; திரு. லூக்காஸ் அன்ரன் ஆராய்ச்சியாக நடித்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். அந்திராசியுடன் தோன்றிய காட்சியிலும் அழகவல்லிக்குப் பரிசுப் பொருட்கள் கொண்டு போகும் காட்சியிலும் அடிக்கடி சிரித்துச் சேஷ்டைகள் செய்வது அவர்களை அவமதிப்பதுபோலத் தெரிந்தது. அடக்கமும் பணிவும்அமைய வேண்டிய ஒரு பாத்திரம். தனிமையில் தான் செய்த தவறை உணரும் போது அவர் நடிப்பு உச்சமாக இருந்தது. உரக்கப்பேசும் போதெல்லாம் அவர்தொனி இரைச்சலாக இருந்ததால் சொற்கள் புரியவில்லை. பாத்திரத்திற்கு ஏற்ற நல்ல தோற்றம்.

''வாத்தியார்'': அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யும் 'வாத்தியார்' பாத்திரத்தில் திரு. ரி. எஸ். லோகநாதன் தோன்றி டச்சுக்கார அரசாங்கத்தை ஒரு கலக்குக் கலக்கியது மன்றி விசாரணைக் காட்சியில் எல்லோரும் உட்கார்ந்துபேச இவர்மட்டும் ஒவ்வொரு வசனத்திற்கும் எழுந்து முன்வந்து பேசியபின் ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டது இயற்கையாக அமையவில்லை. ஆசனத்தருகே எழுந்துநின்று பேசிவிட்டு அமர்ந்திருந்தால் இன்னும் அழகாக இருந்திருக்கும். நடிப்பில் இன்னும் மெருகு ஏற்படவேண்டும்.

''சண்முகநாயகம்'': இந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் திரு. த. பாக்கியராசா அவர்கள். பாத்திரத்திற்கு ஏற்ற நல்ல தோற்றம். நடிப்புப் பறவாயில்லை. சொற்களில் சுத்தமில்லை- இருந்தும் 'சோடை போகவில்லை-

பொதுவாகப் பார்க்கும் போது ஆண்பாத்திரங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அனைவரும்தத் தமது பாகங்களை நன்கு நடித்திருந்தார்கள். ஒப்பனை உடைகள் யாவும் நன்ருக அமைந்து ரசிக்கக்கூடியதாயிருந்தது பெண்பாத்திரங்கள்இரண்டுமே சோபிக்காதது நாடகத்தின் தன்மையையேகெடுத்துவிட்டது.

காட்சிகள் ஒன்றும் விசேடமாகத்தயாரிக்கப்படவில்லை.

''டைரக்ஷன்''; திரு. கே. கே. வி. என்று துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப் பட்டிருந்தது. குறிப்பிடக் கூடியவகையில் புதுமையாக எதுவுமில்லை. ஒன்றுமட்டும் எல்லோருக்கும் புதுமையாகத்தோன்றியது. நாடக இடைவேளையின் போது கிடைத்த ஓர் அறிவிப்பு.

(14- பக்கம் பார்க்க)

## சபாஷ்!

சமீபத்தில் 'இரு பறவைகள்' என்ற நாடகத்தை யாழ் நகர மண்டபத்தில் மேடையேற்றிய இளைஞர் ஏ. பூபாலசிங்கத்தை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்!

அந்த நாடகத்தின் கதை வசனத்தை எழுதி, டைரக்ட் செய்து, ஏன் அதில் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ள அவர் இந்நாடகத்தை மேடையேற்றுவதற்கு பல கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறர்!

இந்நாடகத்தின் கதாநாயகன் எஸ். ஏ. ராஜா. கதாநாயகி விலாசினி. இருவரும் சோடைபோகாமல் நடித்தார்கள். காதல்காட்சிகளில் என்னமோ நெருக்கம் காணுது. வில்லன் எஸ். பின் பரவாயில்லை. விலாசினி சோகக் காட்சியில் சோபிக்கவில்லை! புரோக்கர் ஆறுமுகர் நகைச்சுவை ரசிகர்களைச் சிரிக்க வைத்தது! ஜெயப்பிரகாசமும் நன்ருக நடித்தார்.

பாடல்கள் நெஞ்சத்தில் நிற்கின்றன. அண்ணமலை, துரை மனேகரன்-பாடல்களை இயற்றியவர்கள்.

குறைகளும் சில உண்டு! சீன்கள் அடிக்கொரு தடவை இறக்கப்பட்டது- சீன்கள் ஏற்றுவதில் ஏற்பட்ட தாமதம்- குறிப்பிடக் கூடியகுறை.

மொத்தத்தில்- பூபாலசிங்கத்தின் முயற்சி பாராட்டப் பட்டவேண்டியவை.

— காசி

ஜீவா நாவுக்கரசனின்

# நல்லதோர் வீணை!

பிறந்த மண்ணைவிட்டு பிழைப்புக்காக பிற ஊர்களில்-குறிப்பாகத் தென்னிலங்கையில் வந்து வாழும் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெருங்குடிமக்கள், தமது மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப்பேணிப்பாதுகாத்து வளர்க்க வேண்டும் என எண்ணியதன் விளைவாக ஆங்காங்கே தமிழ்க்கழகங்களும் தமிழ் இலக்கிய மன்றங்களும் உருவாகிக் கொண்டுவருகின்றன. இத்தகைய எண்ணத்தின் அடிப்படையில் உருவானதுதான உனுப்பிட்டி (வத்தளை) இளைஞர் தமிழ்மன்றமும்.

தலைநகரான கொழும்பை அடுத்து தமிழர்கள் கூடுதலாக வதியும் பகுதிகளில் உனுப்பிட்டியும் ஒன்று. தமிழ்ச்சிறுர்கள் தமிழில் கல்விகற்கவும் தமிழ்ப்பெற்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் குறைந்த செ
# சிறந்த வீடு கட்ட வழி


இன்று இலங்கையிலே வீட்டுப் பிரச்னை மிக முக்கிய பிரச்னையாகக் கருதப் படுகின்றது. பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் வீடின்றித் தெரு ஓரங்களில் வசிக்கின்ற வருந்தத்தக்க நிலை ஏற்பட்டுள்ளது கொழும்புமாநகரில் மாத்திரம் உள்ள கொட்டில்களையும் சேரிகளையும் ஒழிப்பதற்கு மாத்திரம் 1 1/4 கோடி ரூபாய்வரை தேவை யென்றும் இப்போது நடைமுறையிலுள்ள வீடமைப்புத் திட்டங்கள் யாவும் பூர்த்தியான பின்பும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வீடுகள் தேவை என்றும் கௌரவ வீடமைப்பு அமைச்சர் கூறியிருக்கின்றார்.

யாழ்ப்பாணப் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன் பத்து அல்லது பதினைந்து பரப்புக் காணியில் பெரும் மாளிகை போன்ற வீடுகள் கட்டப்பட்டன. ஆனால் இன்று ஒரு பரப்புக் காணியின் விலையே ஒரு சராசரி வீடு கட்டுவதற்கு போதுமானதாக இருக்கிறது. இந்த நிலையில் பெரும் வளவுகளில் வீடுகள் கட்டப்படுவது குறைந்துள்ளன. அதனால் இன்று ஒரு பரப்புக் காணியிலேயே நவநாகரிக வீடுகள் கட்டப்படவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

வீடு கட்டும் முன்னும்வீடு கட்டிய பின்னும் வீட்டுச் சொந்தக்காரர் மற்றவர்களை வேலைக்கமர்த்தும் முதலாளியாக இருக்கிறார். அவருக்குத் தேவையான வீட்டிற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பது அவருக்குத் தெரியாது, ஆதலால் அவர் கட்டிடக் கலைஞர் ஒருவரிடம் சென்று ஆலோசனை பெறவேண்டும். கட்டிடக் கலைஞரும் சர்வ ஜாக்கிரதையாக அவரது தேவைகளைக் கேட்டறிந்து கட்டிடத்திற்கு எவ்வளவு பணம் தேவை என்று சராசரியாக அறிவிப்பார். ஆனால் யாழ்ப்பாணக்குடாநாட்டிலே இந்த மிக முக்கியமான வேலை நடைபெறுவது மிக அபூர்வம்- படித்த அறிஞர்கள்கூட இப்படியான ஆலோசனை பெற முன்வருவதில்லை.

கட்டிடக் கலைஞன், கட்டிடத்திற்கான வரை படத்தை வரைந்து கட்டுமான முறைகளையும்(Specification) முக்கிய பகுதிகளையும் விபரித்து என்ன என்ன கலவைகள் எந்த எந்த வேலைக்குப் பாவிக்கப் படல் வேண்டும் என்று எழுதிக்கொடுப்பார். அந்த முறையின்படி வீட்டையோ அல்லது கட்டிடத்தையோ கட்டினால் அழகாகவும் உறுதியாகவும் இருக்கும். ஆனால் யாழ்ப்பாணப்பகுதியில் இப்படியான முறையில் வீடுகட்டுவதற்குத் தொடங்கமாட்டார்கள். வீடுகட்டுபவர் முதலில் மேசன்மாரிடமோ அல்லது ஆசாரியிடமோ ஆலோசனை பெற்று வீடுகட்டத் தொடங்குவார்கள். பின்பு கட்டிய கட்டுக்களை இடிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போதுதான் படம்வரை அறிஞரிடமோ அல்லது கட்டிடக்கலைஞரிடமோ சென்று ஆலோசனை பெறுவார். கட்டிடக் கலைஞர்களின் ஆலோசனை கூட மசன்மாரால் சரிவரச் செயல்படுத்தப்படுவதில்லை. இதன் காரணமாகவும் கட்டப்பட்ட சுவர்களை இடித்துக்கட்டுவதாலும் கட்டிடத்தில் வெடிப்புகள் தோன்றுகின்றன.

யாழ்ப்பாணப் பகுதியில், நிலம் அநேகமாக கல்லும், மண்ணும் சேர்ந்த கிறவல் (Graval) நிலமாக இருக்கிறது. சாதாரண வீடுகளுக்கு சுவர்கள் 10 அடி 6 அங்குல உயரத்துக்கு மேல் கட்ட வேண்டிய அவசியமில்லை. ஆதலால் அதிக ஆழமான அத்திவாரம் வேண்டியதில்லை ஆனால் அத்திவாரம் அகலமாக இருக்கவேண்டியது அவசியம். அத்திவாரம் 1 அடி 6 அங்குல ஆழமும், 1 அடி 6 அங்குல அகலமும் இருந்தால் போதுமானது அத்திவாரத்தின் கீழ்மட்டம் நீர்மட்டத்திற்கு (Spiritlevel) மட்டப்படுத்தப் படவேண்டும். அதன்மேல் 6 அங்குலம் அல்லது 9 அங்குல உயரத்திற்கு 1 : 3 : 6 (2 அங்குல) கலவையுள்ள கொங்கிறீற் போடப்படல்வேண்டும். அதன்மேல் 1 : 5 கலவையினால் D. P. C. வரை கண்ட கல்லினால் (Rubble Masonry)



கட்டப்படல் வேண்டும். அதன்மேல் 1 : 2 : 4 (3/4 அங்குல) கலவையினால் 3 அங்குல உயரத்திற்கு D. P. C. போடப்படல் வேண்டும்.


ஆனால் இங்கு இப்படியான முறையில் அத்திவாரம் (Foundation) கட்டப்படுவதில்லை. இங்கு அத்திவாரம் வெட்டியதும் கிடங்கு மட்டம்வரை கல்லையும் மண்ணையும் கொட்டி நீர் ஊற்றி மொங்கான் அடிப்பார்கள் இதை (Rupple Packing) என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

அடிக்கப்பட்ட கல்லின்மேல் 1 : 6 கலவையினால் பத்திரிப்பு D. P. C. வரை கட்டுவார்கள். இது சுவர்ப்பாரமும் கோப்பிச (Roof) பாரமும் அமுக்கும்போது நிலத்தில் சிறிது இறங்குவதால் சுவரில் வெடிப்பு ஏற்படுகிறது. அல்லது மழைநீர் நிலத்தில சென்று அத்திவாரத்திற்கு இட்ட கல் மணல் முதலியவற்றை அரித்து இளக்குவதால் அவை நிலத்துள் இறங்க கட்டிடம் தொங்கிக் கொண்டு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு வெடிப்புகள் ஏற்படுகின்றன. ஆதலால் இப்படியான முறையில் கட்டிட அத்திவாரம் கட்டப்படுவது நிற்பாட்டப்பட வேண்டியது மிகமிக முக்கியம்.

இங்கு கலவை கலக்கப் படும்போது தகுந்த முறையில் கலக்கப் படுவதில்லை. சீமெந்து ஒரு ரசாயனப் பொருள். சீமெந்து, மண், கல் முதலியன சரியானவிகிதத்தில் கலக்கப்பட்டு சரியான அளவு நீர் பாவிக்கப் பட்டால் ஏற்ற ரசாயன மாற்றங்கள் ஏற்படும். நீர் கூடப் பாவிக்கப் பட்டால் கொங்கிறீற் வார்க்கப்பட்ட பின் சிறு துவாரங்கள் (Voids) ஏற்படும் கலவையில் கலக்கப்பட்ட பொருட்களில் ஏதாவது அசுத்தங்கள் கலந்திருப்பின் வெடிப்புஏற்படுவதற்கு இலகுவாக இருக்கும். நீர் வெளியே செல்ல முடியாத துப்புரவான பாத்திரத்தில் கொங்கிறீற்றோ அல்லது கலவையோ எடுக்கப் படவேண்டும். கொங்கிறீற் அல்லது கலவை கலக்கப் பட்டு அல்லது நீர் ஊற்றப் பட்டபின் 25 அல்லது 30 நிமிடங்களுள் முற்றாகப் பாவித்து முடித்துவிடவேண்டும். ஆனால் யாழ்ப்பாணப் பகுதியில் அளவுக்கு அதிக மான நீர் பாவிக்கப்[…] றது. அத்துடன் க[…] மணியளவில் கலக்கப்[…] கலவை 12 மணி[…] தொடர்ந்து பாவி[…] வதை நாம் காணக்[…] தாக இருக்கிறது. […] கிறீற் சாக்கு, அல்ல[…] கத்தில் எடுக்கப்படு[…] நாம் அவதானிக்கமுடி[…] அப்படிச் செய்யும் […] கலவையின்ஸ்திரம் கு[…] விடுகிறது. கம்பிகள்[…] படவேண்டிய திட[…] கொங்கிறீற் வேலை[…] 1 : 2 : 4 (3/4) க[…] யும் நிலக்கா[…] வேலைக்கு 1 : 3 : 5 (1[…] குல) கலவை நன்று. […] வேலைக்கு 1 : 5 க[…] பாவிக்கப்படலாம்.

**க. இ[…]**
(வீட்டுப் படவரைஞாளர்,

யாழ்ப்பாணப்பகு[…] செங்கட்டி எடுக்க மு[…] காரணத்தால் கொ[…] றீற் கட்டிக[…] (Cement Concrete […] சுவர்கள் கட்டப்[…] றன, கட்டிகள் 1:3:6[…] என்ற கலவையில் அ[…] டல் வேண்டும். […] அரியப்பட்டு 10 […] 12 மணித்தியால[…]


பீ எச் சி

நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு
பீ எச் சி 10% தூள்.
சிறந்தது.
பீ எச் சி 6%
துணுக்குகளும்,
பீ எச் சி 20% ம், தண்டு
அரிப்புக்கு உகந்தது.




களைக்கொல்லி
'M-50'

'எம்சிபிஏ' யின் ஓர்
விசேஷ வகுப்பாடான
இக் 'களைக்கொல்லி,'
3-5 வாரம்வரை வளர்ந்தி
ருக்கும் நெற்தானியத்தில்
தெழித்து அகன்ற
இலைக்களைகளையும்,
கோரைப் புல்லையும்
தெரிந்து அழிக்கவல்லது.





சுமித்தியன்

ஓர் பாதுகாப்பான, நிச்சய
கிருமிநாசினி. விசேஷமாக
குமிழ் ஈ கட்டுப்
பாட்டிற்கு உகந்தது.





'எண்ட்ரெக்ஸ்' 20

இன்று அதிகமாகப்
பாவிக்கப்படும், அதி
சிக்கனமான, 'சகல-
நிவாரண' கிருமி
நாசினி. எல்லா
நெற்களை அழிப்பிற்
கும் உகந்தது.




களைக்கொல்லி 'D'

3-5 வாரம் வரையிலான
நெற் தானியத்தில்
தெழித்து அகன்ற இலைக்
களைகளையும், கோரைப்
புல்லையும் தெரிந்தகற்
றும் 2, 4-D விகித 'எஸ்
தர்' வகுப்பாடாகும்.




'அசோட்றின்' 60

ஏனைய கிருமிநாசினி
களால் அழிக்க முடியாத
நெற் பீடைகளை முற்ற
ழிக்க வல்ல, ஓர் வன்
மைமிகு புதிய படிமுறை
சகல-நிவாரண
கிருமிநாசினியாகும்.




லங்மெக் இலங்கை லிமிட்டெட்
செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333
இரசாயன சேவைக்கு மறுசொல் லங்[…]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவில் ...ழி

நீர் பாவிக்கப்படுகி ...அத்துடன் காலை 8 ...ளவில் கலக்கப்பட்ட ...வ 12 மணிவரை ...டர்ந்து பாவிக்கப்படு ... நாம் காணக்கூடிய ... இருக்கிறது. கொங் ... சாக்கு, அல்லது கட ...ல் எடுக்கப்படுவதை ...அவதானிக்கமுடிகிறது. ...டிச் செய்யும் போது ...வயின்ஸ்திரம் குலைந்து ...றது. கம்பிகள்வைக்கப் ...வண்டிய திடமான ...ங்கிறீற் வேலைக்கு ...:4 (3/4) கலவை ... நிலக்காறை ...க்கு 1:3:5 (1 அங் ... கலவை நன்று. கட்டு ...க்கு 1:5 கலவை ...க்கப்படலாம்.

பின் 7 நாட்கள் தொடர்ந்து நீருக்குள் வைக்கப்படல் வேண்டும். அதன் பின் 21 நாட்கள் நிழலில் வைக்கப்பட்டால் நன்று ஆனால் இங்கு ஒரு சில இடங்களைத் தவிர இப்படியான முறையில் கட்டிகள் அரியப்பட்டுப் பராமரிக்கப்படுவதில்லை.

இங்கு முதல்நாள் அரியப்பட்ட கட்டிகள் மறுநாளே சுவரில் வைத்துக்கட்டப் பட்டப்படுவதை நாம் பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் கட்டிகள் பாரந்தாங்கும் சக்தியைப் பெறுவதில்லை.

அதனால் பாரம் ஏற்றியவுடன் வெடிப்பு ஏற்படுவதை நாம் பல இடங்களில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள புதிய வீடுகள் பலவற்றின் யன்னல்களின் செவிப்பகுதியில் இருந்தும் நிலைகளின் மேற்பகுதியிலும் வெடிப்புகள் இருப்பதை

## க. தியாகராஜா

(...டுப் படவரைஞாளர், நில அளவையாளர், மதிப்பீட்டாளர்)

...ழ்ப்பாணப்பகுதியில் ...கட்டி எடுக்க முடியாத ...ணத்தால் கொங்கி ... கட்டிகளால் ...ent Concrete Blocks) ...கள் கட்டப்படுகின் ..., கட்டிகள் 1:3:6(3/4") ...ற கலவையில் அரியப்ப ... வேண்டும். கட்டிகள் ...யப்பட்டு 10 அல்லது ... மணித்தியாலங்களின்

நாம் அவதானிக்லாம் இவ் வெடிப்புகளால் கட்டிடமே நிலைபெயரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். யன்னலின் மேற்பாரமும் கட்டிடச் சுவரின் பாரமும் ஒரே இடத்தில் அழுக்குவதால் இப்படியான வெடிப்புகள் ஏற்படுகின்றன. யன்னல் வைத்துக்கட்டப்படும்போது யன்னல்வரும் இடத்திற்கு மாத்திரமன்றி, யன்னலுக்குக் கீழ் மட்டத்தில் கட்டிடச்சுவர் முழுவதும் 1:3:5(3/4") கலவையில் 6" உயரத்தில் கொங்கிறீற் போடப்பட்டு கட்டிடம்முழுவதும் பாரத்தைச் சமனகச் செலுத்தினல் இத்தகைய வெடிப்புகள் ஏற்படுவது குறைவாக இருக்கும். இது போல கட்டிடச்சுவரின் மேல்மட்டத்தில்தீராந்திக்கு கீழ் (Wall plate) மட்டத்திலும் 6" உயரத்தில் கொங்கிறீற் போடப்பட்டால் நன்று.

யன்னல். நிலை முதலியன அவற்றின்மேல் கட்டப்படும் சுவரின் பாரத்தையோ அன்றிக் கோப்பிசத்தின் (Roof) பாரத்தையோ தாங்குவனவல்ல பாரங்கள் யாவற்றையும் நிலை யன்னல்களுக்கு மேல் போடப்படும் லின்ரர்களே தாங்குகின்றன. லின்ரர்களை நிலத்தில் அரிந்து (Pre cast) பின் அவற்றைப் பொருத்தவேண்டிய இடத்தில் பொருத்தக்கூடாது. லின்ரர்கள்யாவும் அவற்றுக்கான இடங்களிலேயே கொங்கிறீற்றினல் வார்க்கப் படவேண்டும் (Cast in Situ)

இன்று அநேகமான வீடுகளுக்கு அஸ்பெஸ்ரோஸ் (Asbestos) சீற்களால் கூரை போடப்படுகிறது. இவை பார்ப்பதற்கு அழகாக இருப்பதாகவும் இதனுல் கூரை வேலை குறைந்த செலவில்முடிவடைகிறதுஎன்றும் பரவலாக நமது நாட்டில் எண்ணப்படுகிறது. ஆனல் கட்டிடக் கலைஞர்களையும், கட்டிடக் கணக்கியலாளர்களையும் கேட்டால் அவர்கள் நிச்சயமாக ஓட்டுக்கூரைக்கும் (Calicuttile Roof) அஸ்பெஸ்டஸ் கூரைக்கும் பண விஷயத்தில் எதுவிதமான வித்தியாசமுமில்லைஎன்பதை திட்டவட்டமாகக் கூறுவார்கள்.

(12- பக்கம் பார்க்க)

# ஆலயம் வேண்டி நிற்கும் உபய கதிர்காமத்துத் தெய்வம்

## தென் புலோலியில் அற்புதம்

— முருகனடியான் —

நிமிடம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மனிதன் பிறந்துகொண்டிருப்பதாக அறிஞர்கள் கணக்கிட்டுக் கூறுகின்றனர். அவ்வாறு பிறக்கின்ற வேகத்துக்கேற்றபடி உணவு வளர்ச்சியும் அதிகரிக்கவில்லையே என்பது மக்களின் கவலையாக உள்ளது. அதனல் எல்லா அரசாங்கங்களும் உணவுப்பண்டங்களை விரைந்தும் அதிகமாகவும் குறுகியகாலத்திலே (குறைந்த அளவுள்ள நிலத்தில்) கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் வழிகளை அனுதினமும் ஆராய்ந்து வருகின்றன. தமது ஆராய்ச்சி முடிபுகளைச் செய்முறைகளிலும் செய்வித்து, உலகத்தினர்க்கு உணர்த்தி விளைவையும் பெருக்கிக்கொண்டே வருகின்றனர். இவ்வழிகள் நன்கு சித்தி தருதற்காக, நல்வின விதைகளை அவை அதிகம் விளைந்து பயன்தரத்தக்க இடங்களில் பதித்து வளர்த்துப் பயன் பெறுகின்றனர்.

ஒரு வித்தின் தன்மைக்கேற்றபடியும் அது முளைவிட்டு வளரும் நிலத்தின் தன்மைக்கமைவாகவும் நல்ல விளைச்சலை விரைந்து தருதலை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

"காலம் இடம் வாய்த்திடுதல் கண்டு விளைபுரிக
சாலும் முழுமுயற்சி சார்ந்து"

என்பது ஓர் நல்லறிஞரின் திருவாக்கு.

உடல் வளர்ச்சிக்கான இந்நிகழ்ச்சிகள்போலவே உயிர் வளர்ச்சிக்கான - உயிர்கள் பக்குவமடைந்து மேனிலையடைதற்கான - மார்க்கங்களும் வளர்ச்சியடைதல் வேண்டும். உண்டுண்டுறங்குவது கண்டதேயல்லாது ஒருபயன் அடைந்திலேனே" என்பதும் ஒரு பெரியாரின் அனுபவ மொழியாகும்.

நாம் ஏன் பிறந்தோம்? என்னென்ன செய்தோம்? என்னென்ன பயன்கள் கண்டோம்? எமது பிறவியால் நாம் பெற்ற பேறுகள் யாவை என்பவற்றை அறிஞர்கள் சிந்தித்துச் செயற்படத் தவறுவதில்லை.

குருட்டுக்கண் இருளைக் கண்டு அச்சமடைவதில்லை. கண்பார்வையுடையவரே இருளைக்கண்டு அதன் கொடுமைக்கஞ்சி, அவ்விருள் நெறியிலும் வாழ்க்கை நடத்துவதற்கான பற்பல சாதனங்களையும் வெளிச்சங்களையும் துணையாக அமைத்துக் கொண்டு மிகச் சாவதானமாக வாழ்ந்துவருகின்றனர்.

இதேபோல பேரறிஞர்களும் கலிகாலக் கொடுமைகளை உணருகிறார்கள்; சிந்திக்கின்றார்கள் இக்காலத்தின் வலியகொடுமையில் நின்று விடுபடுவதற்காக ஆண்டவனின் அடிகளைப் பற்றிநின்று அல்லும்பகலும் முயலுகின்றனர். மற்றையோரையும் முயலத் தூண்டிவருகின்றனர்.

படிப்பதற்கென்று விருப்புடன்வந்தமாணவர்களுக்கு ஆசிரியர்கள், பரந்த பலகலைகளையெல்லாம் அவரவர் நிலைகளையறிந்து இலகுவில் புரியுமாறு சாத்திர சூத்திரங்களுடன் விரைவாக அவரவரறிவில் நுழைந்து கொள்ளச் செய்துவிடுகின்றனர். அவ்வாசிரியரின் நல்வழிகாட்டிகளால் அம்மாணவர்கள் குறித்த இலக்கை மிகவிரை... ...ர்ச்சிகாண் ... உலகமே அறிந்துள்ளது.

சின்னஞ்சிறு பாலவடிவுடைய முருகனே, தன் தந்தைக்கே உபதேசம் செய்து சிவகுரு நாதன் ஆனவன் அல்லவா? அவனும் ஆசிரியத்தொழில் செய்வதற்குப் பின்னிற்பானு? தன்னையே நம்பித் தன்னை வழிபட்டு வரும் பக்தகோடிகளுக்குக் கலிகால இருளிலே பெருஞான ஒளிபெற வழிகாட்டிகள் பலப்பல அமைத்துக் காட்டிநிற்கின்ருன். இவ்வாருன தெய்வ வழிகாட்டிகளில் சிறந்ததும்,இன்றுவரையில் இறுதியானதும், இந்நூற்ருண்டில் காட்டியருளப்பட்டதான உபயகதிர்காமயந்திர உருவமே.

இந்தச் சக்கர யந்திர ஆலயம் யாழ்ப்பாணப் பகுதியின் ஒரு பிரிவாயுள்ள தென்புலோலியில், பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆலயத்தின் வடமேற் திசையில் ஒரு மைல் குறுக்களவுள்ள தூரத்தில் அமைந்துள்ளது. மந்திகை அரசினர் வைத்தியசாலையின்வடகரையோர

(12- பக்கம் பார்க்க)

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 7. தோட்டத்துறவி!

வரும்ப டிக்கென் றுள்ள ஊர்கள்
வறுமை யுட்கல சிந்தவர்!
விரும்ப லின்றி வெறுத்த லின்றி
வேலை செய்வதே கடன்!

நோய்ப்பு ழுக்கள் பூச்சி புற்கள்
நூறு கோடி யாய்ப் பயிர்
போயு றுஞ்சிக் கொல்லல் கண்டு
புரிவ தென்னென் றுய்ந்தனன்!

இங்கென் கடமை பற்றி லாமல்
இந்தப் பயிரைக் காத்தலே!
பங்கம் அதற்குப் பயிர ழிக்கும்
பான்மை உயிர்கட் கிரங்குதல்!

தின்று வாழல் கடமை யாகச்
சேர்ந்த பூச்சி புழுக்களைக்
கொன்று தீர்த்தல் உயர்பி றப்பு
கொள்ள அவற்றிற் குதவலாம்!

இந்த முடிவு ளேடு மருந்தை
எடுத்துக் கரைத்து விசிறியே
வந்த மூச்சில் வளர்ந்து பயிர்கள்
வளங்கு லுங்க வைத்தனன்!

வரும்ப டியையே அனுபவிக்க
மறுத்த போதும் இளம் பயிர்
தரும்செ ழித்த அழகு கண்டு
தன்னை மறந்து வந்தனன்!

ஆடும் பயிற்றம் கொடிகள் தோறும்
அரும்பி மின்னுங் கொழுந்திலே
ஓடும் வாய்க்கால் நீரின் போக்கில்
ஓசியும் அறுகம் புல்லிலே

வாடைக் காற்றில் இதழ்நெ கிழ்ந்த
மஞ்சல் வெண்டிப் பூவிலே,
காடைக் குருவி தோட்டப் புல்லில்
காக்கும் வண்ண முட்டையில்,

குதிரைப் பல்லின் வரிசை போலக்
கொண்டு பிஞ்சு, நீக்கிரோ
உதடு போல மடல் வீழ்ந்தே
உருளும் வழைப் பொத்தியில்,

கரிமு கத்துப் பிள்ளை யாருங்
களிக்கும் மோத கங்கள் போல்
உருவக் காய்கள் திரண்டு தொங்கும்
உயர்ந்த வள்ளிக் கொடிகளில்,

வழுவ ழுத்த காய்கள் என்னும்
வண்ணங் காய்க்கும் கத்தரி,
மகளிர் கைகள் விரல்க ளாக
வளரும் பிஞ்சு வெண்டியில்,

பொங்கிப் பொலிந்து தண்மை பூத்த
புதுமைக் கோலந் தன்னிலே
தங்கும் இறைவன் கலையு ணர்வைத்
தன்னை மறந்து சுவைக்கின்ருன்!




உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

...ட்றின்' 60

... கிருமிநாசினி ...அழிக்க முடியாத ...டைகளை முற்ற ...வல்ல, ஓர் வன் ... புதிய படிமுறை ...-நிவாரண ...நாசினியாகும்.

களைக்கொல்லி 'P-20'

ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ் வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

'ஸ்டாம்' எப்-34

7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.










...மறுசொல் லங்கெம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் கவி நயம்—10

# பகிர்ந்து கொடு

அன்புள்ள தம்பி தங்கைகளே!

சின்னஞ்சிறு வயதில் நீங்கள் நல்ல பழக்கங்களைப் பழகிக்கொள்ளல்வேண்டும். ஒற்றுமை உயர்வுதரும் என்பதை நீங்கள் மறத்தல் கூடாது. அண்ணன் தம்பி, அக்கா தங்கை எல்லோரும் சண்டை செய்யாமல் ஒற்றுமையாக வாழவேண்டும் ஒற்றுமையின்றிச் சண்டை இட்டால் பிறர் பழிப்பார்கள். ஐந்து சிறிய தடிகள் தனித்தனியாக இருந்தால் அவற்றை எளிதில் முறித்து விடலாம். அவைகளைச் சேர்த்துஒன்ருகக் கட்டினுல் உங்களால் முறிக்கமுடியுமா? முடியவே முடியாது. அதுபோல ஒரு குடும்பத்தில் உள்ள நீங்களும் ஒற்றுமையாக இருந்தால் உங்களை யாரும் ஒன்றுமே செய்ய மாட்டார்கள்.

ஒற்றுமையாக இருப்பதற்கு முதலில் நீங்கள் செய்யவேண்டியது ஒன்று உண்டு. அதுதான் பகிர்ந்து கொடுக்கும் பழக்கம் ஆகும். எந்த நல்ல பொருளும் எனக்குத்தான் வேண்டும் என்று நினைத்தல் கூடாது. நல்ல உணவுப் பண்டங்கள் முழுவதையும் நானே சாப்பிட வேண்டும் என்று எண்ணக் கூடாது. பொங்கலுக்கு வெடிகள் வாங்கினுல் முழுவதையும் நானே சுடவேண்டும் என்று அடம்பிடிக்கக் கூடாது. எதையும் தம்பி தங்கைகளுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அவர்கள் சந்தோஷப்படுவதைக் கண்டு நீயும் மகிழ்ச்சியடையவேண்டும்.

சில பிள்ளைகள் எதையும் மற்றவர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். சிறிய இனிப்பாக இருந்தாலும் கொடுக்க மாட்டார்கள். தம்பி தங்கைகள் கை நீட்டி அழுது மன்ருடினுலும் கொடுக்க மாட்டார்கள். இது ஒரு கெட்ட குணம். ஒற்றுமையைக் கெடுக்கும் குணம். ஈழநாட்டிலே - யாழ்ப்பாணத்திலே உள்ள ஒரு கவிஞர் பகிர்ந்து கொடுக்காத பையன் ஒருவன் பட்டபாட்டைப்பற்றி பாடியுள்ளதைக் கேளுங்கள்.

பாலன் என்ற பெயருடைய பையன் ஒருவன் இருந்தான் அவன் மத்தியானம் வயிறு நிரம்பச் சாப்பிட்டான், விளையாடப்போக ஆயத்தமானுன், அப்போது அவனுடைய பாட்டி கோவிலிலிருந்து திரும்பி வருவதைக் கண்டான். "பாட்டி பாட்டி ஐந்து சதம் காசு தாவேன் ஒரு வடைவாங்கித் தின்னப்போறேன் என்று கேட்டான். பாவம் சின்னப் பையன்தானே; ஆசையோடு கேட்கிருன் கொடுப்போம்' என்று நினைத்துப் பாட்டியும் கொடுத்துவிட்டாள்.

பாலன் என்ற பைய
னுக்குப்
பாட்டி பணம் தந்தாள்
பாலன் கடைக்கோடி
வடை
வாங்கிக் கொண்டு
வந்தான்.

அவன் அதை ஆசையோடு சாப்பிடத் தொடங்கும்போது அவன் தங்கை பார்வதி அங்கே வந்துவிட்டாள் "அண்ணு, அண்ணு எனக்'கும் பாதிவடை தாவேன்" என்று கேட்டாள். கையை நீட்டி மன்ருடினுள். அவன் என்ன செய்தான் என்பதைக் கவிஞர் சொல்கிருர் கேளுங்கள்:

பங்கிடு வோன் போல
தனைப்
பாதியாக்கிக் கொண்டான்
தங்கைக் கொரு பாதி
யென்று
தானே பாதி உண்டான்.

"பார்வதி இதோ பார் இந்த வடையில் பாதியை உனக்குத் தருகிறேன். பாதியை நான் சாப்பிடுகிறேன்" என்ருன் பாலன். அவளும் ஒத்துக்கொண்டாள். அண்ணன் உண்மையாகத்தருவான் என்று நம்பி ஒத்துக்கொண்டாள். போக்கிரிப் பையனுன பாலன் என்ன செய்தான் தெரியுமா?

மற்றப் பங்கை வாங்கு
தற்குத்
தங்கை கரம் நீட்ட
பற்றில்லாத பாலன்
நீட்டிக்
கொடுக்கா தேய்த்துக்
கொண்டான்.

பாவம்! பார்வதி ஏமாந்துவிட்டாள். அண்ணன் அப்படிச் செய்யமாட்டான் என்று எண்ணிய தங்கை ஏமாந்து விட்டாள். பற்ருே பாசமோ இல்லாத பாலன் தங்கையை ஏமாற்றிய சந்தோஷத்தோடு பாதிவடையைச் சாப்பிட ஆயத்தமாஞன்! அவனும் ஏமாந்துவிட்டான். பகிர்ந்து கொடுத்துச் சாப்பிட மனம்வராத பாலன் ஏமாந்துவிட்டான். ஆம். காகமொன்று வந்து வடையைப் பறித்துக்கொண்டு போய்விட்டது.

பையனது வஞ்சனையைப்
பார்த்த தொரு காகம்
கையைக் கீறி வடை
யதனைக்
கௌவிக்கொண்டு போக.

அழுதான். பாலன் அழுததைக்கண்டு பார்வதி சிரித்தாளா? இல்லை. உங்களிற் சிலர் 'வேண்டும் உனக்கு வேண்டும்' என்று சிரித்திருப்பீர்கள். ஆனுல் பார்வதி சிரிக்கவில்லை. துக்கப்பட்டாள். பாலன்கையில் காகம் கீறிய காயத்தைக் கண்டு 'ஐயையோ' என்று அழுதாள். 'போனுல் போகட்டும்' என்றும் தேறுதலும் கூறினுள்.

பாலர்களுக்கு ஏற்ற சிறிய நிகழ்ச்சி ஒன்றை - நடக்கக்கூடிய சம்பவமொன்றை- எளிய நடையில் பாடி மனதில் தங்கக்கூடிய முறையில் பாடி- இருப்பவர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, மகாஜனக் கல்லூரியில் படிப்பிப்பவர். கால் நூற்ருண்டுக்கு மேலாகக் கவிதை பாடிவரும் இவர் நல்ல நாடக எழுத்தாளருமாவர். பாடலை மறுபடியும் பாருங்கள்?

பாலன் என்ற பையனுக்குப்
பாட்டி பணம் தந்தாள்
பாலன் கடைக் கோடி வடை
வாங்கிக் கொண்டு வந்தான்

கொண்டு வந்த வடையினிலே
கொஞ்சம் கிள்ளித் தின்ருன்
கண்ட தங்கை ஓடிவந்து
கையை நீட்டி நின்றாள்

பங்கிடுவோன் போல் அதனைப்
பாதியாக்கிக் கொண்டான்
தங்கைக்கொரு பாதியென்று
தானே பாதி உண்டான்.

மற்றப் பங்கை வாங்குதற்குத்
தங்கை கரம் நீட்டப்
பற்றில்லாத பாலன் நீட்டிக்
கொடுக்கா தேய்த்துக்
கொண்டான்.

பையனது வஞ்சனையைப்
பார்த்த தொரு காகம்
கையைக் கீறி வடையதனை
கௌவிக் கொண்டு போக

கையிற் காயங் கண்டு பாலன்
கண் கலங்க நின்ருன்
ஐயையோவென் றழுத தங்கை
அவனைத் தேற்றி நின்ருள்.

—இரசிகமணி கனக. செந்திநாதன்—

## கொறில்லாக்கள்

கொறில்லாக்கள் அல்லது மனிதக்குரங்குகள் ஆபிரிக்காவிலேயே அதிகம் காணப்படுகின்றன. ஆபிரிக்காவில் யானைகள், எருமைகள் வாழும் காடுகளிலேயே கொறில்லாக்களும் காணப்படுகின்றன. ஆபிரிக்காவில் இருஇன கொறில்லாக்கள் ஜீவிக்கின்றன! ஒருவகை இனம் மேற்கு ஆபிரிக்காவிலும் மற்றது பெல்ஜியன் கொங்கோ காடுகளிலும் காணப்படுகின்றன. இங்கு கொரில்லாக்கள் குறைந்து வருவதால் வனமிருக பாதுகாப்பு நிலையம் (Sanctuary) நிறுவப்பட்டுள்ளது.

கொறில்லாக்கள் அதிகமாக மூப்பது அல்லது நாற்பது சேர்ந்த கூட்டங்களாகவே உலாவுகின்றன. உடம்பு முழுவதும் மயிர்களால் நிறைந்தும் மற்றும் மஞ்சள் நிறப் பற்கள் கொண்டனவாகவும் இவையிருக்கின்றன. கோரைப்பற்கள் இரண்டும் நீண்டிருக்கும். ஒரு ஆண் கொறில்லாவின் உயரம் ஐந்தடி எட்டங்குலத்திலிருந்து ஆறுஅடி வரையாகும். இவற்றின்நிறை நாற்பதுஸ்ரோன்களாகும் இவை நாலுகாலால் வேகமாகச் செல்லும். சில வேளைகளில் மனிதர்களைப்போலஇரண்டு கால்களாலும் நடக்கும். ஒருமுறைக்கு ஒரு குட்டியே ஈனுகின்றன.

கொறில்லாக்கள் பகலிலேயே உலாவுகின்றன. இரவில் அடர்ந்த இலைகள்உள்ள மரங்களில் நித்திரை கொள்கின்றன. இவை சைவஉணவையே உண்கின்றன. பெரும்பாலும் கரும்புத்தண்டுகள், வாழைப்பழங்கள், காட்டுக்கிழங்குகள்முதலியனவற்றையே உண்கின்றன. உற்சாகமுண்டாகியவுடன் இவை தங்கள் மார்பிலும் மரங்களிலும் படபடவென்று கைகளால் அடித்துக்கொள்கின்றன.

கொறில்லாக்களைப் பழக்கியெடுப்பது கடினமான காரியம். வித்தைகளைப் பழக்கினுல் இவை இலேசில்மறந்துவிடுகின்றன.

- றஞ்சன்

## அம்புலியின் வயது

அமெரிக்க விண்வெளி விமானிகள் அம்புலியிருந்து நில உலகுக்குக் கொண்டுவந்த கற்களுக்கு வயது ஏறத்தாழ 350 கோடி ஆண்டுகள் இருக்கும் எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அப்பல்லோ-12 விண்வெளி விமானிகள் சேகரித்துக் கொண்டுவந்த தூசி, பாறைகளைவிட 100 கோடி ஆண்டு அதிகவயது ஆனது என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுல் சூரியமண்டலம் தோன்றிய அதே சமயத்தில்தான் அம்புலியும் தோன்றியிருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்,

# கம்பன் கவிப் புலமை!

—அ. கனகசூரியர்—

ஓர் ஊரில் வேலி என்பவள் வசித்து வந்தாள். அவள் ஒரு மண்சுவர் கட்டுவிக்க எத்தனித்து அதனைக் கட்டி முடிப்பவர்களுக்கு குறுணி நெல் தருவதாக அறிவித்திருந்தாள். அங்கு பலர்வந்து சுவர் கட்டித் திரும்புகையில் ஒரு பிசாசினுல் சுவர் தள்ளப்பட்டு விழுந்து விடுகிறது. அதனுல் சுவர்கட்டி முடித்தவர்களுக்குக் கூலி கிடைக்காமல் போய்விடுகிறது. இப்படி அநேக நாட்களாக நடந்துகொண்டிருக்கையில் ஒருநாள் சோழ அரசனுடன் வாக்குவாதப்பட்டு சோழநாட்டிலிருந்து வேற்றூருக்குச் சென்றுகொண்டிருந்த கம்பர் இங்கு வந்து சேர்ந்தார்.

கம்பர் வேலியிடம் சென்றுதான் சுவர் கட்டி முடிப்பதாகக் கூறினுர். வேலியும் உடன்பட்டாள். சுவர் கட்டும் வேலையில் இறங்கிய கம்பர் அதனை ஒருவாறு கட்டி முடித்தார். பின்பு வேலியிடம் சென்று அதற்கான கூலியைக் கேட்டார். அவள் சுவர் கட்டிய இடத்தை வந்து பார்க்கையில் சுவர் கீழே விழுந்து கிடந்தது. அதனுல் கூலியைக் கொடுக்க மறுத்துவிட்டாள்.

கம்பரும் மறுநாள் மிகவும் கஷ்டப்பட்டு சுவரைக்கட்டி முடித்தபின்பு கூலி வாங்குவதற்காக ஓரடி எடுத்து வைக்கும்பொழுதுசுவர் விழுகின்ற குறிப்பை உணர்ந்து

'மற்கொண்ட
திண்புயத்தான் மாநகர்
விட்டிங்கு வந்தேன்
சொற்கொண்ட பாவின்
சுவையறிவா
ரிங்கில்லையே
விற்கொண்ட பிறை
நுதலாள் வேலி
தரும் கூலி
நெற்கொண்டு போமளவும்
நில்லாய் நெடுஞ்சுவரே.'

என்ற பாடலைப் பாடினுர். இதைக் கேட்ட மாத்திரத்தில் அந்தப் பிசாசு பயந்து விலகிப் போய்விட்டது.

## கனகாம்பரம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கவும் திரண்டு எழுந்தார்கள்,

வெள்ளித்தட்டிலிருந்து பட்டாடையை எடுத்து விரித்தபோது கோவில்குருக்களின் கரங்கள் உணர்ச்சியினுல் நடுங்கின.

'உமது முற்சந்ததியினரைப்போலநீரும்பல்லாண்டு வாழ்ந்து இசைக் கலைக்கும் இந்த ஆதீனத்துக்கும் பெருமை அளிக்கவேண்டும்' என்று வாழ்த்தி துரைசுவாமிக்குருக்கள் இராசாவுக்குப் பொன்னுடை போர்த்தி புஷ்பம் விபூதிப் பிரசாதம் வழங்கி நெற்றியில் திலகமிட்டார். முருகனை வணங்கி எழுந்த இராசாவின் கரங்களில் மாகாண அதிபர் ஸ்ரீகாந்தா நிதிமுடிச்சை வைத்து 'கலைஞர்களை சும்மா புகழ்ந்து பாராட்டினுல் மட்டும்போதாது. அவர்கள் வாழ்க்கை வசதிகள்பெற்று வாழவேண்டும் அப்போதுதான் கலைவளரும். பழைய நாட்களில் இவர்மாதிரி முதுபெரும் வித்துவான்களையும் கலைஞர்களையும் ஆதரிக்க கோவில் ஆதீனங்களிருந்தபடியால்தான் நமது முன்ஞேர் வளர்த்த அருங்கலைகள் இந்தமட்டிலேனும் அழியாமல் பாதுகாக்கப்பட்டன' என்றுகூறி' முருகனருளால் தாங்கள் எல்லா சம்பத்தும் பெற்று நெடுங்காலம் வாழவேண்டும்' என ஆசிமொழிந்தார்.

'கலைகளை வளர்த்துப் பெருமை பெற்றவர்கள் சோழர். அதே சோழபரம்பரை வழிவந்தவர்களால் நிறுவப்பெற்று புகழடைந்த இக்கோவிலும் வித்துவான்களையும் கலைமணிகளையும் இதுமாதிரிக்கௌரவிப்பது சாலப்புடைத்து' என்ருர், வைத்தீஸ்வர வித்தியாலய முன்ஞள் அதிபர் திரு. அம்பிகைபாகன்.

மயிலிட்டி திரு. சுவயம்பிநாதன். திரு. வே. சங்கரப்பிள்ளை (ஆசிரியர்), திரு. ஆர். என். சிவப்பிரகாசம், வித்தியாதரிசி சண்முகநாதன் ஆகியோருடன் மற்றும் பலரும் பாரதி பாடிய பிரகாரம் நிதி மிகுந்தவர் பொற்குவை அளித்தும், நிதி குறைந்தவர் காசுகள் தந்தும் அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளியும் அன்றைய நிகழ்ச்சியை பழம்பெரும் நாதசுரவித்துவானின் வாழ்க்கையிலே ஒரு மகோன்னத வைபவமாக்கிச் சிறப்பித்தார்கள்.

"லைடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லைடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ருேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவகி குல்சும் சயானி

1969-ம் ஆண்டுக்கான நேரு விருதைப் பெற்ற குல்சும் சயானி காந்தி வழியைக் கடைப்பிடித்து அவர் வழி நின்று நாட்டுக்கு அரும்பெரும்சேவை ஆற்றியவர். இவர் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை யாவரும் அறிந்ததே.

இந்திய நாட்டின் இலக்கிய வளர்ச்சிக்கு 36 வருடங்கள் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட திருமதி குல்சும் சயானி வெள்ளிக் கம்பி போன்ற தலைமுடியும் முகத்தில் சாந்தமான புன்னகையுடன் ஒளிவீசும் கண்களும் 70 வயதைத் தாண்டிய பின்னரும் கடமையில் சுறுசுறுப்பை வரவழைத்துக் கொள்ளும் அவரது தோற்றமும் யாவரையும் கவரக்கூடியதாக அமைந்துள்ளது.

தாயார் சிறந்த சமூக சேவகி, தாயின் சமூகசேவை பிள்ளையையும் பற்றிக் கொண்டதில் ஆச்சரியமில்லை. உலகம் போற்றும் உத்தமர் காந்தியோடு பழகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது மகாத்ம காந்தி அவர்கள் போதித்துவந்த நற்போதனைகளை அவர் கடைப்பிடித்து வந்துள்ளார், அவற்றில் அவர் அடிக்கடி கூறுவது "நான் ஒன்றைத் தீர்மானித்து விட்டால் அந்தத் தீர்மானத்திலிருந்து மாறுவதேயில்லை' என்று கூறுவார். இதை காந்தி தமக்குச் சொல்லிக் கொடுத்தார் என்று சொல்லுவார்

— வி. எவ். —

# விநோதமான திருமணம்

இந்தோ சீனாவைச் சேர்ந்த லாவோஸ் பகுதியில் 'க்குவா' என்றவகுப்பினர் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு 12 வயதில் அடியெடுத்து வைத்ததுமே அவளுக்கு தகுந்த கணவனைத் தேட ஆரம்பித்துவிடுவார்களாம். கிடைக்கவில்லைஎன்றால் அவளை ஒரு தெளிந்த நீரோடைக்கு அழைத்துச் சென்று அங்கு தண்ணீரில் தெரியும்அவள் பிரதிபிம்பத்தையே அவளுடைய கணவனாக வைத்து அவளுக்கு திருமணம் செய்து வைத்துவிடுவார்களாம். அந்தப் பெண்ணுக்குத் தகுந்த கணவன் கிடைக்கும்வரை இந்தத் திருமணத்துக்கு மதிப்பு. காரணம் பன்னிரண் வயதிற்குமேல் அங்கு எந்தப் பெண்ணும் கன்னியாக இருக்கக் கூடாது என்பதே.

- தா.மு. கணபதிப்பிள்ளை

சமையல்

# கொக்கோ சொக்லட்

தேவையான பொருட்கள்:

கொக்கோபவுடர் - 2 மேசைக்கரண்டி
பசுப்பால் - 2 போத்தல்
சர்க்கரை அல்லது சீனி - 1 ருத்தல்
நெய் - 1/4 போத்தல்
முந்திரிக்கொட்டை. - சிறிதளவு

செய்யும் முறை:

பால், சர்க்கரை, கொக்கோ பவுடர், நெய் சிறிதளவு ஆகிய வற்றைக்கலந்து அடுப்பிலேற்றிக் கொதிக்க விடவும். கொதிக்கத் தொடங்கியதும் அடுப்பை இலேசாக எரியவிட்டு இறுகிவரும் போது மீதி நெய்யையும் விட்டுக்கிளறி நெய் தடவிய தட்டில் கொட்டிப் பரப்பி முந்திரிக் கொட்டையை சிறு துண்டுகளாக்கி அதன் மேல் தூவவும். பின்னர் ஆறியவுடன் துண்டுகளாக வெட்டி எடுக்கவும்.

— சரோ சங்கர்.

# நல்லதோர் வீணை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ளூர்கள் சமயவழிபாடுகளைச் செய்யவும் வசதியும் வாய்ப்பும் கொண்ட இக் கிராமத்தில் மொழி, கலை, கலாச்சாரத்தை வளர்க்க ஏதுவாக எந்தவொரு இயக்கமும் கடந்த ஆண்டின் முற்பகுதிவரை இருக்கவில்லை. இந்தக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் தமிழ் இளைஞர்களும் பெரியோர்களும் உபயோககரமான வழியில் ஓய்வுநேரத்தைச் செலவிட்டுப் பயன்பெறுவதற்காகவும் கடந்த ஆண்டின் பிற்பகுதியிலிருந்து மொழி, கலை, கலாச்சார அடிப்படையில் ஒரு அமைப்பை உருவாக்கிநடத்திவருகிறார்கள். இந்த அமைப்பின் ஒரு அங்கமாக நூல்நிலையமொன்றை அமைப்பதற்கு இப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சீரியபணிக்குஉதவு முகமாக யாழ். அமெச்சூர் குழுவினராகிய நாம், ஜீவா நாவுக்கரசனின் 'நல்லதோர் வீணை' என்ற சமூக நாடகத்தை இம்மாதம் 27-ம் திகதி நோன்மதி முதல் நாளன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்ற இருக்கின்றோம்.

''பெண்ணிற் பெருந்தக்க
யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப்
பெறின்''

என்கிறாள் மாலதி.

''காதல் இல்லையேல்
சாதல் நன்று''

என்கிறான் ஈசுவரன்.

''அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாழ்''

என்கிறான் ஆனந்தன்

''அறத்திற்கே அன்புசார்
பென்ப அறியார்
மறத்திற்கும்
அஃதே துணை''

என்கிறான்கிருஷ்ணன். இவர்களையெல்லாம் நாடகத்தின் போது சந்திக்கப்போகின்றீர்கள்.

திரைப்பட நடிகர் ஸ்ரீசங்கர், வானொலிமேடைநடிகர்கள் எஸ். விஸ்வரத்தினம், எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்), எம். எஸ். கௌதமன், பாலேந்திரன் சேவியர், செல்வி ஜெயா ஆகியோர் பிரதானபாகங்களில் நடிக்கஇருக்கிறார்கள்.

சிறந்த வானொலி நாடகங்களை எழுதியுள்ளதோடு, பல வெற்றி நாடகங்களையும் மேடையேற்றியுள்ள 'ஜீவா' நாவுக்கரசன் 'நல்லதோர் வீணை' கதை வசனத்தை எழுதியதுடன், அவரே இந் நாடகத்தை நெறிப்படுத்தவும் செய்கின்றார்

—வ. ஆ. தங்கவேலாயுதம்
(தயாரிப்பாளர்)



# குடும்பச் சுடர்

தயாரிப்பு:

மாதர் முன்னேற்றத்திற்காக பல சங்கங்களை ஸ்தாபித்தும், சொற்பொழிவாற்றியும், தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் அருந்தொண்டாற்றிய அவரது சேவை அளப்பரியதாகும்.

நான் கல்லூரிக்குச் சென்று எதையும் கற்கவில்லை, வீட்டிலேயே யாவற்றையும் கற்றேன்' என்று அவரே தம் வாயால் கூறுகிறார். எனவே எம்மில் சில தாய்மார்கள் தாங்கள் கல்லூரிக்குச் சென்று கற்கவில்லை எனக் கவலையுறவேண்டாம். நாங்கள் வாழும் வீட்டையே கலைக்கூடமாக அமைத்துக் கொள்ள முடியும் என்பதற்கு அம்மையார் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

அவருடைய குழந்தைப் பருவம் தொடக்கம் நல்ல சூழலில் வளர்க்கப்பட்டு வந்துள்ளார். அவருடைய

குணம்

இவர் 1940-ல் உருது, ஹிந்தி குஜராத்தி ஆகிய மும்மொழிகளில் பிரசுரமாகும் 'ரஹ்பர்' என்ற பத்திரிகை ஆசிரியராக விளங்கினார். மகாத்மா காந்தியின் கொள்கைகள் அடங்கிய இப்பத்திரிகை 1942ல் இந்திய மக்களிடம் பெரியதொரு ஒருமைப்பாட்டையும் புத்துணர்ச்சியையும் எழுப்பியது. 20 வருடங்கள் திருமதி சயானி இதில் கடமையாற்றினார்.

# இலக்கிய செல்வம்

மண்ணிலே மறைந்துகிடக்கிற பொன், மலையிலேசிதறிகிடக்கிற மாணிக்கம் ஆகிய இவை மட்டுமல்ல செல்வங்கள். இலக்கியத்திலே புதைந்து கிடப்பவையும் செல்வங்களேயாகும்.

## உயர்வாக கருதவேண்டும்

பிறரை உயர்வாகக்கருதிக் கொண்டிருப்பவன், தானும் உயர்ந்துகொண்டே இருக்கிறான். பிறரைத்தாழ்வாகக் கருதிக் கொண்டிருப்பவன், தானும் தாழ்ந்துகொண்டே இருக்கிறான். நினைப்புத்தான் செயலில் காணப்படுகிறது.

# நல்லவர் இரண்டொருவர்

வயிற்றுப் பிழைப்பைக் கருதி எதுவும் செய்ய எண்ணும் தீயவர் பலர் இருப்பினும் ஓர் ஊர் கெட்டுவிடாது. நல்லறிஞர் அவ்வூரில் இரண்டொருவரேனும் இல்லாதிருந்தால் கெட்டுவிடும்.

0 0 0

எண்ணங்களை அறிந்து அவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் அரிது நீ யார் என்பதைக் கண்டு பிடிப்பது மிகவும் அரிது. ஆனால். உனது எண்ணங்களை அறிந்து. நீ யார் என்பதைக்கண்டு பிடிப்பதோ மிகவும் எளிது.

# கணவர் எவ்வளவு சம்பாதிக்கிறார்

பொதுவாக நம் நாட்டில் அநேகமான பெண்களுக்கு தனது கணவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பதே தெரிவதில்லை. மிகவும் முன்னேற்றமடைந்த ஜெர்மனியில்கூட அறுபது வருஷங்களுக்கு முன்னால் இதேநிலைதான் இருந்து வந்தது. ஆனால் அங்கு இப்போது நிலைமாறிவிட்டது. ஜெர்மனியில் உள்ள ஆண்கள் சம்பளம் வாங்கியதும் அந்தச் சம்பளத்தை அப்படியே தமது மனைவியரிடம் கொண்டுவந்து கொடுத்து விடுகிறார்கள். மனைவி கொடுக்கும் பணத்தைக் கணவன் பொக்கெட் செலவுக்காக வாங்கிக் கொள்கிறான். இதனால் அங்கே குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவுகிறது.

அநேக குடும்பங்களில் பிரச்னைகள் எழுவது பணத்தினாலேயாகும். எனவே கணவன்மார்கள் ஜெர்மன் ஆடவர்கள் போன்று தங்கள் மனைவியரிடம் பணத்தைக் கொடுத்தால் குடும்பத்தில் பல பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

# அந்தத் தலையலங்காரம்!

''ஏது. சோவியத் நாட்டில் கூட உங்கள் பெயர் பிரகாசிக்கிறதே'' என்று கேட்டார் 'ஈழநாடு போயா மலர்'ரில் மாதர் பகுதி நடத்தும் செல்வியைப் பார்க்க வந்த ஒரு நங்கை. அவர்எனக்கும் முன்னமே பழக்கமானவர் தான்.

''நல்லவேளை சோவியத் நாடு என்று குறிப்பிட்டீர்களே. மாதர்பகுதி என்று குறிப்பிட்டு எல்லை வகுத்து சண்டைக்கு வராமல்! ராசாங்கமே உங்கள் கட்சியிலிருக்கிறது. வல்லடி வழக்குப் பேசமாட்டீர்களா? அல்லி அரசாட்சியில் மகளிர் அந்தப்புரத்துக்கு ஆண்களின் வாடையே வீசக் கூடாதாம். அதுமாதிரி பிரம்மசாரிகளுக்கு நீங்கள் ஆயிரம் நிபந்தனை விதித்து எங்கள் வனிதாமண்டலத்தினுள் 'எப்படி அத்துமீறி வால்நீட்டலாம்?' என்றெல்லாம் கேட்கக் கூடியவர்கள் தாம்'' என்றேன்.

'சோவியத்நாடு' சஞ்சிகையில் வெளிவந்தஒருசெய்தித் துணுக்கு ஈழநாடு வாரமலர் மாதர்பகுதியில்புத்தம்புதிய தலைப்பிட்டு பெயர்போட்டு வெளி வந்ததைத்தான் அந் நங்கைக்குறிப்பிடுகிறார்என்று தெரிந்து கொண்டேன். பிரம்மசாரிகளுக்குப் பெண்களின் தலையலங்காரம் பற்றிய விசாரம்எதற்கு, பெண்களைப் பற்றிய சிந்தனையே கூட ஏன் என்றுமே கேட்டு குற்றம் சுமத்தி, கல்யாணம் வேண்டாமென்றிருக்கும் என்னைப் போன்றவர்களை

அந்தமான் தீவுக்கு அனுப்ப அங்கு எந்த ஒருபுள்ளிமானையாவது நாமாக வேட்டையாடித்துரத்திப் போய் இடறி விழும்படியாக நாடு கடத்தி வைத்து விடக்கூடிய பொல்லாத வாயாடிப்பெண் அவள் என்பதும் எனக்குத் தெரிந்ததுதான்.

அதனால், 'கொழுவ'லைத் தவிர்த்துக் கொள்வதற்காக ''என்பெயர் அதிலே அச்சுத் தவறுதலாக இடம்பெற்று விட்டது'' என்று முதலிலேயே சொல்லி விட்டேன். உண்மையும் அதுதான். 'ஆதாரம் - சோவியத் நாடு' என்று கடைசியில் இருந்திருக்கவேண்டும். என்ன

— அ. செ. மு. —

குளறுபடி நேர்ந்ததோ ஆதாரம் 'அ. செ. மு.'வாகி 'சோவியத்நாடு' இல்லாமலே போய்விட்டது.

தினசரிப்பத்திரிகை வெளிவரும் அச்சுக் கூடத்திலே இப்படி ஆயிரம் நடக்கும். ஆனால் நமது வாசகர்கள் இவ்விதமாக கண்ணில் எண்ணை ஊற்றிக் கொண்டு விழிப்பாயிருக்கிறார்களே அதுதான் ஆச்சரியம்-மனதுக்குள்ளே ஒரு விதத்தில் அது மகிழ்ச்சியாகவும் தானிருக்கிறது.

பொறுங்கள் இந்த ஆச்சரியம், மகிழ்ச்சி எல்லாம் அற்பவேளைக்குத் தான். ஏனென்று கேட்கிறீர்களா? என் [illegible]ப்பின் முகத்தைஇப்பொழுதுசிறிது ஊன்றிக் கவனித்தேன். அவளுடைய தலை அலங்காரம் 'சோவியத்நாடு' தலையலங்காரக் குறிப்பின் அந்தகத்தரிப்பில் கண்ட அதே பலவித மோஸ்தரில் ஒன்றாக அமைந்திருந்தது!

விதம்விதமாக கூந்தலை முடிவதன் மூலம் ஒருவரது முக அமைப்பையே மாற்றலாம், முகத்தின் சொள்ளைகள் அப்பொழுது அகன்று முகஅமைப்பு எடுப்பான புதியதோற்றம் காட்டும்-என்பதுதான் அந்த அலங்காரக் குறிப்புத்தரும் 'செய்தி'. அலங்கார இரகசியம் என்றாலே போதுமே, அது சோவியத் நாடாயிருந்தாலென்ன, ஈழநாடாயிருந்தாலென்ன எல்லாம் ஒரே நாடும் ஒரே உலகமுமாகிப் போய்விடும் இந்தப் பெண்களுக்கு. யுகயுகாந்திரமானாலும் அவர்களைவிட்டுப் போகாத குணநலனும் அது.

''அதோபாரடா மச்சான் ஒரு மான் கன்று! அவளுடைய பின்னல் சடையும் மின்னல் இடையும் அன்ன நடையும் வெட்டும் 'கட்'டும்...எட்டிநட ... பஸ்வரப் போகுது...'' அவள் யாரோ எவளோ! பிறர் 'உடைமை'யை இச்சிக்கும் இந்தத் திருட்டுக்குணம் அகில உலக பொதுவுடைமை தர்மம் வளர்க்கும் சோவியத்நாடு உட்பட ஆண்களிடத்தேயும் உள்ளவரையில் பெண்ணுலகின் அலங்காரமோகமும் அவர்களை விட்டு ஒரு போதும் அகலாது. இது

இயற்கை நியதியோ அல்லது வேறு என்ன வியாதியோ சனசமுதாயக்கொள்ளையோ! எதுவானாலுமிருக்கட்டுமே, நமக்கேன் சார். அந்த ஆராய்ச்சி எல்லாம்...

நாமள்தான் பீஷ்மாச்சாரிகள் ஆக இருக்கிறோமே! தலைஅலங்காரமாவது நளின சிங்காரமாவது!

சும்மா சொல்லக்கூடாது: அந்த சிங்காரம் மகள் செங்கமலம் இருக்கிறாளே அடஅடஅட என்ன அழகாயிருக்கிறாள் என்கிறீர்! ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை அத்தனை பேரையும் அவள் காலிலே கட்டிஅடிக்கவேணும். அவா வீட்டுத் தோட்டத்திலே குயில் கூவுகிறது, கிளி கொஞ்சுகிறது. தோகை மயில் குதித்தாடுகிறது... ஓய்!

உலகெங்கிலும் இதேகிறக்கம்! இதே மயக்கம்!

இனி, சொல்லு குழந்தாய்! யாருடையதலைஅலங்காரம் எந்த 'நாட்டிலே பிரகாசிக்கிறது?' யார், கண்ட பாவனையிலே கொண்டை முடிந்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் வேண்டி நிற்கும்..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வல்லிபுரம் செல்லும் பிரதான பாதையில் முக்கால் மைல் தூரத்தில்பாதையின் அருகே அமைந்துள்ளது.

உபய கதிர்காமத்து மூலலிங்கமான கல்மலை முளைத்து வளரும்போதே சக்கர வடிவமும் அதனுள்ளமைந்த யந்திர சக்கரமும் பிறஅடையாளங்களும் தானேயமைந்து வளர்ச்சி பெற்றன. எவராலும் வரையப்பட்டது போன்ற தோற்றங்களும் காணப்படவில்லை. வல்லான் வகுத்ததேவாய்க்கால் என்ற வழக்குப்படி முருகப் பெருமானின் முன்னேற்பாடாக அமைந்து இவைகள் வளர்ந்து வந்திருக்கின்றன.

முன்னரே கூறியபடி அதனதற்குரிய காலநேரங்கள் வரும்போது எது எது எப்படி எப்படி எங்கெங்கு அமைய வேண்டுமோ — நடைபெறவேண்டுமோ அது அது அப்படி அப்படி அங்கங்கு அமைந்து நடைபெற்றேயாகும்.

இந்த யந்திரமமைந்த கல்மலை கண்டுபிடிக்கப்பட்ட நாள் 1911-ம்வருடம் வைகாசி விசாக நன்னாளாகும். கண்டறிதற்குரிய பாக்கியத்தைப் பெற்றவர் தென்னிந்தியாவிலே அன்று வசித்த அந்தணப் பெண்மணி ஒருத்தியாவர். அவர் பெயர் லோகாம்பாள் அம்மையார். அவ்வம்மையாருக்கு இதன் இடத்தையும் மேன்மைகளையும் அறியச் செய்தவர் முருகப் பெருமானேயாவர்.

1909-ம் ஆண்டு ஒருநாள் இரவு அவ் வம்மையாரின் கனவிலே முருகப்பெருமான் தோன்றி, பச்சிமப்புலவர்கான நகரத்தின் கிழக்குத் திசையில் ஒரு கூரிய கற்பாறை ஒன்றில் தனது சக்கர யந்திர வடிவம் அமைந்துள்ளதாகக் கூறி, அவற்றின் அமைப்புக்களையும் அயலிலுள்ள அடையாளங்களையும் காட்டி, அதனைக்கண்டுபிடித்து ஆலயம் அமைத்து வழிபாடு புரிந்து, பிறவிப் பிணியறுத்துய்யுமாறு திருவாய் மலர்ந்தருளினர்.

செடிசகொடிகளும் காரை சூரைப்பற்றைகளும் கலந்து படர்ந்த காணியொன்றில் இடம்புரிகளுடன் கூடி வலம்புரிச் சங்கு அமைவதுபோல இந்த யந்திரமமைந்த வெண்கல் மலையும் ஏனைய கற்பாறைகளினிடையே அமைந்து காணப்பட்டது.

கிடைத்த ஆலயங்களே போதும் - அதிகம் - என்று பலர் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். முருகனோ இன்னும் ஆலயங்கள் வேண்டும் என்றுதானே வெளிப்படுத்தி வருகின்றான். இந்தநிலைமையில் சண்முகப்பெருமான் குறித்தமைத்த உபயகதிர்காம ஆலயத்தை அழகான அமைப்பான சிறந்த ஆலயமாக ஆக்கியமைத்து ஏனைய ஆலயங்களுக்கு மேலான முறையில்வைத்து வழிபட்டுய்வது எமது கடமையாகும்.

ஆலய வரலாறுகளைப் பொய் புளுகு புராணக்கதை என்று கூறித்திரிபவர்களுக்குக்கூட இந்நூற்றாண்டில் தோன்றிய இவ்வாலய வரலாற்று விடயங்களில், மற்றவர்களையும் ஏமாற்றித் தாமும் ஏமாற இடமில்லை. இது எம் வாழ்நாளிலேயே கண்டறிந்த தலம். அதனைக் கண்டறிந்தகதைஅப்போதே நாடறியும். அந்த வரலாறுகளை, அவ்வாலயத்தைக் கனவிற் கண்டமைத்தலோகாம்பாள் அம்மையார் 1924-ம் ஆண்டு துண்டுப்பிரசுர மூலம் வெளிப்படுத்தியுள்ளார். (வேண்டுவார் ஆலயப்புனருத்தாரண சபையாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.)

இன்னமும் இவ்வாலய வரலாற்றை அறியாதவர்கள் பலர் உளர். இவ்வாலயத்தை - பெருமையை - உண்மைநிலையை - முன்னறிந்துகொண்ட அன்பர்கள் மற்றவர்களுக்கும் உணர்த்தி அவர்களையும் ஈடுபடச்செய்து பூசனை சிறப்புற நடத்த வழிவகுத்துத் தருவார்களாக.

எங்கள் தெய்வம் - எல்லார்க்கும் தெய்வம் - சிவகுருவான தெய்வம் - கலியுகத் தெய்வம் - வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் தெய்வம் - ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் தெய்வம் - தானே விரும்பி வந்து விருந்தினனாகி நின்றருளும் தெய்வத்துக்கு இந்த ஈழநாட்டார்கள் இதுவரை என்னென்ன பணிவிடைகள் செய்து உபசாரம் செய்திருக்கிறார்கள்.

ஆலயம் வெளிப்பட்டு அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டன. அவ்வாலயப் பெருமானே இன்றும்சின்னஞ்சிறு (வெடிப்புற்ற) ஆலயத்துள்ளே அன்பர் பணிகளை எதிர்பார்த்து நின்றுகொண்டிருக்கின்றான் இனியும் தான் என்றென்றும் நிலைநிற்கவே வந்தவதரித்துள்ளான். அன்பர்கள் ஒவ்வொருவரும் இந்தத்திருவவதாரத்தை ஒருமுறையாவது பார்த்துத் தரிசிக்கவேண்டும். அவ்வாலய அமைப்பின் குறைநிறைகளை உணரவேண்டும். இவ்வாலயப் பணிகளுக்கு உவந்து வந்து உதவவேண்டும். இவை ஈழநாட்டாரனைவருக்கும் சைவமக்கள் அனைவருக்கும் இவ்வாலயப் புனருத்தாரணசபையாரின் மிகப்பணிவானவேண்டுகோள்.

இந்தஉபய கதிர்காமதலம் ஓர் அற்புதமான வங்கியாகும். இதன் வளர்ச்சிக்கு இட்டபொருள் அனைத்துக்கும் அதனை ஆக்கிவைத்தள்ள முருகப் பெருமானே முகாமையாளர். அப்பெருமானே எங்கும் எதிலும் என்றும் நின்று எல்லாம் அறிந்தருள வல்லவர் எனவே அவரது வங்கியில் இடப்படும் பொருள்களை - அவற்றின் பயன்களை - இப்பிறவி மாறி எப்பிறவி சேரினும் அவருக்கு அப்பெருமான் தவறாது அருள வல்லவன்.

நமது இனத்தவரிடம், சுற்றத்தவரிடம், நண்பர்களிடம் அல்லது வங்கிகளில் இடப்படும் பணங்கள் இப்பிறவிக்கே நமக்குப் பயன்படும். பயன்பட முன்னரே இறந்தும்போகலாம். உபய கதிர்காமவங்கியில் உதவிய பணத்தின் பயன்கள் தப்பாமல் எப்பொழுதும் அதையுதவிய உயிர்களுக்குக் கிடைத்துவிடும். இவற்றை நன்கு சிந்தித்து எமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட செல்வத்தின் ஒருபகுதியையாவது இவ்வாலயப் பணிகளில் இட்டு வைப்போமாக. இவ்வாலயப் பணிகளில் ஈடுபட்டுழைக்க விரும்பும் அன்பர்கள், இவ்வாலய புனருத்தாரண சபையார் வெளியிட்டுள்ள இவ்வாலய வரலாறு அமைத்த நூலினை இலவசமாகப் பெற்று காலந்தாழ்த்தாது பங்குகொண்டு உழைப்பது அனைவர்க்கும் நன்மையாகும்.

# யாழ்ப்பாண...

(9-ம் பக்கத் தொடர்ச்சி

இதுவரை வீடுகள் எந்த முறையில் கட்டப்படவேண்டும் என்றும் வெடிப்புகள் ஏற்படாவண்ணம் கட்டுவதற்குச் சிறந்த முறை என்ன என்றும், கலவைகள்பற்றியும் சிறிது வாசித்தீர்கள். இனிமேல் குறைந்த செலவில் எப்படியான வீடுகள் கட்டலாம் என்பதுபற்றிக் கவனிப்போம்.


சாதாரண மக்கள் முதல் செல்வந்தர்வரை எல்லோரும் ஆடம்பரமாக வாழ விரும்பும் இந்நாகரிகயுகத்தில், சகல வசதிகளும் பொருந்திய வீடுகளை அமைக்கவே எல்லோரும் விரும்புவர். வரவேற்பாளர் அறை (Sitting hall) சாப்பாட்டு அறை (Diningoall) காரியாலய அறை (Office room) இரண்டு படுக்கை அறை (Bed room) சமையல் அறை (Kitchen) அத்துடன் குளியலறையும் மலகூடமும் (Bath and latrine முதலியன உள்ள வீடே சாதாரண வீடாக மதிக்கப்படுகிறது. இப்படியான ஒரு வீடு யாழ்ப்பாணப் பாணியில் கட்டப்பட்டால் 20 ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய்வரை தேவைப்படலாம்.

இன்று எமது நாடு உள்ள நிலையில் இப்படியான செலவு குறைவான வீடுகள் கட்டப்பட்டால் நாட்டிற்கும் நன்மை, வீடுகட்டுகின்ற மக்களுக்கும் நன்மை.

ஆகலால் இவ்விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி வீடுகள் கட்டப்படும் பணத்தை வரையறை செய்து இவ்வளவு பணத்திற்குமேல் வீடுகள் கட்டுவதற்குச் செலவழிக்கக் கூடாது என்றும் அரசாங்கத்திடம் உத்தரவு பெற்ற பின்பே வீடுகள் கட்டப்பட வேண்டும் என்றும் ஒழுங்கு முறை அல்லது சட்டம் கொண்டுவந்தால் மக்களும் அரசாங்கமும் பயனடையலாம்.

## ரப்பரில் செய்தித்தாள்

குளிக்கும் அறையில் தண்ணீரை தலையில் ஊற்றிக்கொண்டே, அன்றாடச்செய்தித்தாளைப் படிக்கவேண்டும் குளிப்பதும் செய்தித்தாளைப் படிப்பதும் ஒரே சமயத்தில் நடைபெறவேண்டும். இதுஎவ்வாறு இயலும்? ஆனால் நாகரிகங்களுக்கெல்லாம் இருப்பிடமான பாரிஸ்ம நகரிலே ஒரு செய்தித்தாள் நிறுவனம் இதைச் செயல்படுத்தமுடியும் என்று நிரூபித்துக் காண்பித்தது. அந்த நிறுவனம் பல்லாண்டுகளுக்கு மென்மையான ரப்பர் தாள்களில் செய்தி ஏடுகளை அச்சிட்டு வெளியிட்டு வந்தது ஒரு பெரிய சாதனையல்லவா?





வருடம் ஒரு கோடி நூல்களை பிரசுரிக்கும் ஒக்ஸ்போட் சர்வகலாசாலைப் பதிப்பகத்தின் ஒரு பகுதி இங்கு காணப்படுகிறது. இன்று உலகின் தலைசிறந்த பிரசுராலயமாக கணிக்கப்படும் இப் பதிப்பகம் கிட்டத்தட்ட 500 வருடங்களுக்கு முன்பாக ஒரு சிறிய அச்சகமாக ஆரம்பிக்கப்பட்டது, குறிப்பீடு செய்யும் பெரிய அளவிலான விளக்க விபர நூல்கள் தொடங்கி, கலைக் களஞ்சியங்கள், இலக்கியபாட நூல்கள்; சரித்திர நூல்கள் இப்படியாக ஆயிரக் கணக்கில் பல்வேறு துறைகளையும் சார்ந்த சிறந்த நூல்களை இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைரேகை அனுபவம் — 2

# தொழில் வாய்ப்பை கூறும் சனி மேடு!

மனிதர்களுக்குத் தொழில் மிகவும் அத்தியாவசியமானது என்பது யாவரும் அறிந்ததே. அதன் மூலம் செல்வத்தைத் தேடி வாழ்வை வளமாக்கிக் கொள்ளலாம். மனிதர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையான தொழில்களைச் செய்கின்றார்கள். ஆனால் சிலர் ஒரு தொழிலும் அமையப் பெறாது அல்லலுற்றும், செய்கின்ற தொழிலை விட்டு வேறொரு தொழிலில் ஈடுபட்டும், தொழிலுக்காக இடம் மாறியும், தொழிலை உதறித் தள்ளிவிட்டு அவதிப்பட்டும் வாழ்கின்றார்கள். வேறு சிலர் தாம் செய்த தொழிலில் நட்டமும் இலாபமும் அடைகின்றார்கள். இவையெல்லாம் ஏன் நிகழ்கின்றன வெளித்தோற்றத்தில் பல காரணங்கள் உண்டு ஆயினும் இவையெல்லாம் நடைபெறுவது விதிவசமே. தொழில்களையும், அவற்றின் தன்மைகளையும், ஏற்படும் மாற்றங்களையும் கண்டறியப் பிரதானமாகச் சனி மேட்டையும் சனிமேடு சம்பந்தமான விதிரேகையையும் நன்ருகக் கவனிக்க வேண்டும்.



வாழ்க்கையின் இரகசியங்களைப்பற்றிப் பல வழிகளிலிருந்து நாம் அறியலாம். ஆனால் அதை மாற்றியமைக்க முடியாது. மனித சக்திக்கு மேற்பட்டே நமது வாழ்க்கையில் செயல்கள் நிகழ்கின்றன. முன்னெச்சரிக்கையாய் சில விஷயங்களைச் செய்து கொள்ளவும், பிற பலன்களை அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவும் நாம் கையிலுள்ள மேடுகளையும், ரேகைகளையும், குறிகளையும் பற்றிப்பார்க்கின்ருேம். கையைப் பார்த்துப் பலனறிபவர்கள் ஆண்களுக்கு வலது கரமும் பெண்களுக்கு இடது கரமும் பார்க்க வேண்டும். ஆனால் பலன்களின் தன்மைகள் கையின் ரேகைகளுக்கும் மேடுகளுக்கும் ஏற்றவாறு அமையும்.

படத்தில் தெரிவதுபோல் கையில் ஏழு கிரகமேடுகள் இருக்கின்றன. அவையாவன:-

a குருமேடு
b சனிமேடு
c சூரியமேடு
d புதன்மேடு
e சுக்கிரமேடு
f சந்திரமேடு
g செவ்வாய்மேடு என்பனவாகும். தற்போது சனி மேட்டைக் கவனிப்போம்.

எங்களுடைய கையில் எதற்கெடுத்தாலும் ஒன்றைச் சுட்டிக் காட்டுவதற்கு ஒரு விரல் உண்டு. அதை நாம் சுட்டுவிரல் என்கிருேம். இந்தச் சுட்டுவிரலுக்கு அடுத்ததாகவுள்ள விரலின் அடிப்பாகம் (b-பகுதி) சனிமேடு எனப்படும். இந்த மேட்டின் அமைப்பை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம.

சனிமேடு சிலருடைய கையில் தகுந்தவாறு அமைவதில்லை. இவ்வாறிருப்பது நன்மைக்குரியதாயில்லை. சனி மேடு தகுந்ததாகக் காணப்படாவிடின் ஒருவருடைய வாழ்க்கை நிலைமை நிரந்தரமானதாயிருக்காது. அன்னுருடைய விவகாரங்களும், வேலைகளும் தங்குதடைக்குட்பட்டிருக்கும்.

சனிமேடு நன்கு அமையப் பெற்றிருப்பின் அன்னுர் தனித்திருக்கும் எண்ணமுள்ளவராகவும் எவருடனும் வெறுப்பும் பகையும் கொள்ளாது சாந்தமுடையவராகவும் காணப்படுவார் ஆனல் இலட்சியத்திற்காகப் பிடிவாதத் தன்மை கொண்டு போவதில்லை. கையின்ரேகைகள் மிகவும் அற்புதமான சிருஷ்டியாகும்.

சனிமேட்டில் நீண்ட ரேகையிருப்பது பெருத்த அதிர்ஷ்டத்தையும், அநேக சிறு ரேகைகளிருப்பது துரதிர்ஷ்டத்தையும் குறிக்கும். சனிமேட்டில் கறுப்புப்புள்ளி சிகப்புப் புள்ளி ஆகியவைகள் காணப்படில் வெகு விரைவில் நமக்கு வரவிருப்பது ஆபத்தின் அறிகுறி என்பதை யாம் அறிதல் வேண்டும். சனி மேட்டில் வட்டக்குறி, சதுரக்குறி, முக்கோணம் ஆகியவைகள் காணப்படின் அவற்ருல் வரவிருக்கும் தீங்குகளிலிருந்தும் தப்பி நன்மையைப் பெறுவர் என்பதை அது காட்டும் அவற்றிற்குப் பதிலாக நட்சத்திரக் குறியும் சூலக்குறியும் காணப்பட்டால் அன்னுருக்குத் தீங்கு உண்டாகும்.

## — மு. குணரத்தினம் —

குதர்க்கம் பேசுவார். ஆழ்ந்த சிந்தனையிலிருப்பவர் போல் காட்சியளிப்பார். சில சமயங்களில் உயிரைத் துரும்பாக மதித்துக் காரியத்திலிறங்கி விடுவார். மற்றவர்க்குத் தீங்கு செய்யாத தொழிலில் ஈடுபட விரும்புவார்.

சிலருடைய கையில் சனி மேடு மிதமிஞ்சியிருக்கும். அதனுல் எதிரியைப் பழி பழிவாங்கவேண்டுமென்ற சிந்தனை இவர் மனத்திலிருக்கும். இப்படிப்பட்ட ஒருவர் தீங்கான வழிகளில் ஈடுபட்டுப் பெரும் தொல்லைகளுக்கெல்லாம் ஆளாவார். ஆனல் தெய்வ அனுக்கிரகத்தினுல் தலையோடு போவது தலைப்பாகையோடு தப்பியதுபோலக் காப்பாற்றப்பட்டு விடுவார். இதற்கு ஏனைய கிரகமேடுகளின் அனுகூலமும் வேண்டும்.

பொதுவாக நம்முடைய கையிலுள்ள மேடுகளில் சூலம், முக்கோணம், கறுப்புப் புள்ளி, சதுரம் போன்ற அடையாளங்கள் இருப்பதைக் காணலாம். எல்லா அடையாளங்களும் எல்லோருடைய கைகளிலும் அமைவதில்லை. ஒருவருடைய கையிலுள்ள மேட்டில் பெரும்பாலும் ஓர் அடையாளத்தைத் தான் காணலாம். ஆனல் பிரத்தியேகமான முறையில் இரண்டு அல்லது மூன்று அடையாளங்களையும் காணலாம். இவ்வாருன குறிகள் தோன்றிய சில காலங்களின்பின் மீண்டும் அவை மறைந்து விடுகின்றன. ஆனல் சில குறிகள் மறைவதற்கு நீண்ட காலமெடுப்பதுண்டு. இவ்வாறு குறிகள் தோன்றிப் பின் மறையும்வரையுள்ள இடைக்காலத்தில் நாம் சுகதுக்கங்களை அனுபவிக்கின்ருேம், ஆனல் மேலே கூறியதுபோல சிறுரேகைகளும் குறிகளும் மறைகின்றனவே தவிர பிரதானமான ரேகைகள் மறைவதில்லை. வேலை செய்வதினுல் ரேகைகள் அழிந்தோ அல்லது கெட்டோ

எங்களுடைய கையில் பிரதானமாக ஏழு ரேகைகள் இருக்கின்றன. அவைகளுக்கு இலக்கவரிசையின்படி பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. படத்தில் தெரிவதுபோன்று ரேகைகளின் பெயர்கள் முதலாம் இலக்கம் தொடங்கி ஏழாம் இலக்கம்வரையுள்ளன. அவையாவன:-

1 விதிரேகை
2 புத்திரேகை
3 இருதயரேகை
4 ஐக்கியரேகை
5 சூரியரேகை
6 அதிர்ஷ்டரேகை
7 ஆயுள்ரேகை என்பனவாகும்.

படத்தில் தெரிவது போன்று விதிரேகை (ரேகை இலக்கம்-1ஐப் பார்க்கவும்) செங்குத்தாய் ஆயுள்ரேகைக்குப் பக்கமாய் மணிக்கட்டிலிருந்து சனிமேட்டை நோக்கிச் செல்லும். இவ்வாறு செல்லும்போது புத்திரேகையுடன் நின்ருல்(படத்தைப் பார்க்கவும்) நல்ல பலனைக் கொடுக்காது. இந்தப் பாகத்திற்கு உரிய காலம் அநேகமாக இளம் பராயமாகவே இருக்கும். அவர்கள் தாய்தந்தையரோ அன்றி உறவினரோ யாவராயினும் ஒருவரின் உதவியுடனும் மேற்பார்வையுடனும் வாழ்வார்கள். விதிரேகை புத்திரேகையுடன் நிற்கும் பொழுது அன்னுர் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவனுனல் பாடசாலையிலிருந்து விலகவேண்டி நேரிடும் அநேகமாக அந்த மாணவன் நன்ருகக் கல்வி பயிலவில்லையென்றும், பொழுதை அவமே கழிக்கின்ருரென்றும், தாய் தந்தையரோ

(14-ம் பக்கம் பார்க்க)

நற்சிந்தனை

## எல்லாம் சிவமே!

அப்பனும் அம்மையும் சிவமே
அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே
ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே
தேவாதி தேவரும் சிவமே
இப்புவியெல்லாம் சிவமே
என்னை யாண்டதும் சிவமே.

## நான் யார்?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்ருய்ப் பதியக் கடவது. ஆனல் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

''அவனே — நானே''

—யோகசுவாமிகளின் அருள்வாக்கு

கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனை

# ஆண்டவனை எங்கே தேடுகிறீர்?

முதியவர் ஒருவர் வந்தார். நரைத்த தாடி. கவலை தோய்ந்தமுகம். காவிஉடை. இளமையிலேயே துறவியாக வெளியேறியவர். எங்கெங்கோசுற்றி அலைந்தார். அமைதிஇல்லை. ஆசிரமங்கள் பலவற்றிக் தங்கியிருந்தார். அங்கும் அவர் அமைதியைக் கண்டாரில்லை.

'நான் என் பதினைந்தாவது வயதில் வீட்டைவிட்டு வெளியேறினேன். இப்பொழுது எனக்கு வயது எழுபத்தாறு. ஆண்டவனைத் தேடி அலைகிறேன். இன்னும் அவனுடைய தரிசனம் கிட்டவில்லை. சாவதற்கு முன் அவனைத்தரிசித்தாலன்றிஎனக்கு அமைதியில்லை. ஆனந்தம் இல்லை' என்ருர் அக்கிழவர்.

கிருஷ்ணமூர்த்தி கேட்டார்:- எங்கும் நிறைந்த ஒன்றை நீங்கள் எங்கே தேடுகிறீர்கள்? ஆண்டவர் தரிசனம் ஒருபுறமிருக்கட்டும் நீங்கள் எதற்காகஆண்டவனைத் தேட வேண்டும்?

'ஆம். ஆண்டவன் ஆனந்தமயமானவன். இந்த வாழ்க்கை நிலையாதது. துன்பமானது. அவனே நிலைத்து நிற்பவன். சதானந்தன். ஆகவே அவனைத் தேடுகிறேன்.

நிலையாமை என்னும் துக்க சாகரத்திலிருந்து தப்புவதற்குநிலைத்தஆனந்தம் ஒன்றைத் தேடுகிறீர்கள் இல்லையா?

'ஆம்.'

'இன்று நீங்கள் காண்பது நிலையாமையும் துக்கமும். நீங்கள் காணவிரும்பும் லட்சியமோ நிலையான இன்பம். இல்லையா?'

'ஆம். அதுவும் சரிதான்.'

'உங்கள் அனுபவமோ உங்கள் எதிரே இருக்கிறது. உங்கள் லட்சியமோஎங்கோ கண்ணுக்குத் தோன்ருமலிருக்கிறது. அதாவது அனுபவமோ உண்மை லட்சியமோ, கற்பனை இல்லையா?'

'நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'

'நான் கூறுவது விளங்கவில்லையா?' நீங்கள் உங்கள் அனுபவமான துன்பம் இன்னதென்பதைப் புரிந்து கொள்ள முயலாமல், உங்களுக்குப்புரியாத ஓர் இலட்சியத்தை தேடிக்கொண்டிருக்கிறீர்கள்என்கிறேன்.'

'நீங்கள் கூறுவதை ஆம் என்றுதான் ஒப்புக்கொள்ள வேண்டும்.'

'இதுதான் மனப்போராட்டம். இனம்தெரிந்த அனுபவ நிலைக்கும். இனம்தெரியாத இலட்சிய நிலைக்குமிடையே மனப்போராட்டம் ஒன்று இருப்பது (Wh[illegible]) [illegible]றென்று. அது[illegible] வேண்டுமென்பது (What should be). எது இருக்கிறதோ அதனின்றும்தப்பித்து எப்படி இருக்கவேண்டும் என்ற நிலைக்குத் தாவ நீங்கள் தேடி அலைகிறீர்கள். இல்லையா?'

'அப்படியானல் தேடுவது கூடாது என்கிறீர்களா?'

'உங்கள் மனப்போராட்டத்திற்குள்ளகாரணத்தைப் புரிந்துகொள்ளாமல் வெளியில் எதையோ தேடுவதால் என்ன பயன்? எது இருக்கிறதோ அதை நீங்கள் புரிந்து கொண்ட மறுநிமிஷமே அதனின்றும் நீங்கள் விடுதலை பெறுகிறீர்கள். துக்கத்தின்றும் விடுதலை கிடைக்கும்போது நீங்கள் ஆனந்தம் என்ற ஒன்றைத் தேடிப் போகத்தேவையில்லை. உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுவதே இப்பொழுதுதேவை; இதை விட்டு ஆண்டவனை வேறு எங்கே தேடுகிறீர்கள்?'

சம்பாஷணை முடிந்தது. அமைதி நிலவிற்று. கிழவர் தலையைச் சொறிந்தார்.

தன்னையறிந்தின் பமுற
வெண்ணிலாவே
ஒரு தந்திரம்நீ சொல்ல
வேண்டும் வெண்
ணிலாவே!

[—நன்றி: கிராமராஜ்யம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிள் அனுபவம்

வெளவ்! வெளவ்!
வெளவ்! வெளவ்! வெளவ்!
நல்ல வரவேற்பு!
நாய்கள் வரவேற்பு!

மழையால் நனைந்து வெயிலால் உலர்ந்து குளிரால் கொடுங்கி வந்த எனக்கு வரவேற்று நின்ற நாய்களைப் பார்த்ததும் சூடேறத் தொடங்கிவிட்டது. ஆயினும் அப்பிள் பழங்களை நினைத்து ஆறுதல் கொள்கிறேன். நாய்கள் மீண்டும் குரைக்கின்றன. 'அச்சந் தவிர்' என்று நானே எனக்கு ஆறுதல் சொல்லிக்கொள்ளுகிறேன் - பயந்து பயந்து.

ஆனாலும் கூட்டிவந்த நண்பர் குணநாயகம் வெகு உற்சாகமாகவே நிற்கிறார். உற்சாகமில்லாதுபோனால் கொட்டும் மழையில் நுவரெலியாவிலிருந்து புறப்பட்டிருப்பாரா என்ன?

அப்பிள் பழம் ஒன்று முப்பத்தைந்து நாற்பது சதவீதம் விலைபோன காலங்களில் வாங்கியுண்ண விருப்பம்வந்தது குறைவு. இப்பொழுது ஒருபழம் இரண்டரை மூன்றுரூபாய் விற்கின்றது. ஒருரூபாய்வீதம் இராகலைக்குப்போனால் எவ்வளவும் வாங்கலாம் என்றார் நண்பர் குணநாயகம். 'போய்வருவோமா?' என்றேன் நான். எனக்குத்தான் வேறு வேலையில்லையே. விடுமுறையைக் கழிக்க பிள்ளைகுட்டி சகிதம் நண்பர் வீட்டிலேயே குடியேறிவிட்ட எனக்கு ஊர்சுற்றிப் பார்ப்பதைத் தவிரப் பயனுள்ள வேலை வேறொன்று இருப்பதாகப்படவில்லை. அப்பிளைப்பற்றிப் புத்தகத்தில் நிறையப் படித்ததுண்டு. ஒருதோட்டத்தைப் போய் நேரில் பார்த்துப் படித்தறியும் ஆவல்வேறு.

வழியில் ஒரு நண்பரையும் இழுத்துக்கொண்டு வண்டியில் ஏறிவிட்டோம். பஸ் இரண்டுமைல் தூரம் ஓடியிருக்கும். நல்ல வெயில் எறித்தது. புறப்படும்போது மழை. இப்பொழுது வெயில். இராகலையில் இறங்கினோமா? மழையுமில்லை, வெயிலுமில்லை. இதமான குளிர்ச்சி கட்டித்தழுவி வரவேற்றது. அப்பிள் பழங்களுக்கு இந்தக் குளிர்ச்சிதான் இதமாம். கனடா, அவுஸ்திரேலியா, தாசுமேனியா ஆகிய நாடுகள்தான் அப்பிள் பழங்களுக்குப் பழங்களுக்குப் பெயர்பெற்றவை. இந்நாடுகளின் அப்பிள்பழங்களுக்கு ஐரோப்பியச்சந்தையில் ஏகப்பட்ட கிராக்கி. எமது நாட்டுக்கும் இந்நாடுகளிலிருந்து அப்பிள் முன்பு பெட்டி பெட்டியாக வந்து குவிந்தன. இப்பொழுது வரத்தில்லை. இராகலை கைகொடுத்து உதவத் தொடங்கியிருக்கிறது. அவுஸ்திரேலியா, ராசுமேனியாப் பகுதிகளிற் காணப்படும் குளிர்ச்சியான இடைவெப்பக் காலநிலை இராகலையிலும் ஓரளவுக்கு நிலவுகின்றது. மழை அடிக்கடி இங்கு பெய்வதில்லை: இரவில்இராகலைக்கே உரித்தான புகாரோடு கூடிய பனிப்பெய்கின்றது.

'என்ன ஒரு மைலுக்கு மேலை வந்திட்டம்போலை கிடக்கு' என்றார் நண்பரின் நண்பர்.

'ஓ! உதிலைதான் உதிலைதான்' என்று குணநாயகம் குடுகுடென்று நடக்கின்றார்,

**— கவிஞர் வி. கந்தவனம் —**

நான் ஒன்றும் பேசவில்லை. மூச்சு மேலும் கீழுமாக இழுக்கின்றபோது பேச்சு என்ன வேண்டியிருக்கென்று பேசாமலே தொடர்ந்தேன்.

இராகலையில் பஸ்ஸிலிருந்திறங்கித் தேயிலைத் தோட்டங்களுக்கூடாக நடந்து கொண்டிருக்கின்றோம். பாதை குத்தாகஇருந்ததால் களைப்பு மூவரையுமே வளைத்துக்கொண்டது.

அழகான தேயிலைத் தோட்டங்கள். மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஊக்கச் சிறப்பையும் உழைப்புத் திறத்தையும் முத்திரை குத்திக் காட்டும் சித்திரத்தோட்டங்கள் நிறம்பச்சைதான்; உற்றுப் பார்த்தால் பச்சைக்குள்ளே பல யச்சைகள், பார்த்துச் சுவைத்து நடக்கின்றோம். ஒருமூலை திரும்பியதும் நண்பர் சுட்டிக்காட்டினார்,

'அதோ! அதுதான் அப்பிள் தோட்டம்'.

'இதென்னப்பா! இன்னும் இரண்டுகட்டை வரும்போல் இருக்கே!' — எனது பெருமூச்சு!

'சீச்சீ! நண்பர் குதித்துக் குதித்து இறங்குகின்றார்.

தோட்டத்துக்கு வந்துவிட்டோம்.

வெளவ்! வெளவ்!

சீவிளிக்கூடு போன்ற நீண்ட பதிந்த நாய்கள் நான்கு. பட்டாளம் நிற்பதுபோன்ற நேரான நிரையில் குறிப்பிட்ட இடைவெளியில் வேலிக்குக் கிட்ட வந்து நிற்கின்றன! அவை நிற்கின்ற உசாரும் எம்மைப் பார்க்கின்ற பார்வையுமே போதும்.

நல்ல காவல் நாய்கள். இந்தக்காலத்திலே மனிதனை நம்புவதைவிட இப்படிப்பட்ட நான்கு நாய்களை நம்பலாம். நம்பித்தானே இந்தத்தோட்டக்காரர் வேலியைக்கூட அடையாமல் விட்டிருக்கின்றார். வேலி சாட்டுக்குத்தான். கொஞ்சம் முயற்சி செய்தால் யாரும் போகலாம். போகலாமா? வெளவ்! வெளவ்!

அவை உள்ளே நாம் வெளியே நிற்கும்வரை வில்லங்கம் ஒன்றும் வராது என்ற நம்பிக்கை எனக்கு. நாம் கிட்டச்செல்கின்றோம் நாய்களும் கிட்ட வருகின்றன... நாய்களும் குரைக்காமல் குறிப்பாக எம்மையே கவனித்தவண்ணம் நிற்கின்றன. நண்பர் படலைக்குக் கிட்டச் செல்கின்றார். படலையிலோ வேலியிலோ கை போடவேண்டாம் என்றேன் நான் கைகிய் போட்டால் காவல்நாய்கள் அவற்றின் கடமையைச் செய்ய நேரிடுமல்லலா? அதன்பின் தவறு செய்தவர் அக்குவேறு ஆணிவேறோ கந்தல் துணி நிலையோ - ஆரறிவார்?

மிஸ்டர் மாட்டின்! மிஸ்டர் மாட்டீன்!' நண்பர் உரக்கக் கூப்பிடுகின்றார்.

எனது கண்கள் தோட்டத்தை மேய்கின்றன.

எல்லைப்புறங்களில் பியேசும் தோட்டத்தின் மத்தியில் அப்பிள் மரங்களும் காணப்படுகின்றன. இரண்டுமே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பழவகைதான். அப்பிள்மரங்கள் நிறுத்திவைத்த விளக்குமாற்றுக்கட்டுகளைப்போன்று நிற்கின்றன. சிலமரங்களில் கிளைகளோடு பழங்கள் போட்டிபோடுகின்றன. தோட்டம் எவ்வளவு விசாலமானது என்று மதிப்பிடமுடியவில்லை. ஏனென்றால் அது இந்தப் பக்கத்தால் ஏறி அந்தப்பக்கத்தாற் சரிகிறது. தோட்டத்தில்எதிர் எல்லைப்புறத்தில் நடுத்தர அளவான கல்வீடு ஒன்று. அங்கிருந்து எந்தத் தலைக் கறுப்பும் தெரிவதாகக் காணோம்.

'மிஸ்டர் மாட்டின்! மிஸ்டர் மாட்டீன்!

நண்பர் மீண்டும் கூப்பிடுகின்றார்,

(வளரும்)

## சிறு கதை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

யுங்கோ!'' என்று உடலைக் குலுக்கும் அவலக்குரல் ஒன்று அங்கு ஒலித்தது. மறுகணம் தரையில் கிடந்த கதிரவேலுவுக்கும் ஒருவனுக்குமிடையில் மின்னலெனப் பாய்ந்தாள் அஞ்சுகம். ஆனால் அந்தப் பாவி முருகேசனின் ஓங்கிய கரம் தன் வேலையை முடித்துவிட்டே நின்றது.

ஹா! என்ற சிறு ஒலிதான் அஞ்சுகத்தின் வாயிலிருந்து வெளியேறியது. இரத்தத்தால் குளிப்பாட்டப்பட்ட தலையுடன் கதிரவேலுவின் உடலின்மேல் சரிந்தாள் அவள். இருவருக்கும் இவ்வுலக நினைவேயில்லை. சற்றுமுன் இவ்வுலக இன்பங்கள் எல்லாம் தமதாகக் கருதிய அவ் இனிய உயிர்கள் இரண்டும் இனி இவ்வுலகைப்பற்றி நினைக்கப்போவதுமில்லை.

மறுநாள் சுடலையில் வெள்ளம்போல் மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. அவ்விரு வட்டாரத்தினர் மட்டுமல்லாமல் அயல் கிராமங்களிலிருந்தும் கதிரவேலு—அஞ்சுகம் ஜோடிக்கு இறுதி மரியாதை செய்வதற்கென வந்திருந்தார்கள்.

இருவேறு ஊர்வலங்களாக வந்த அவர்களுடைய உடல்கள் இரு வட்டாரத்துப் பெரியவர்களின் முயற்சியால் ஒரேசிதையில் வைத்துக் கொள்ளியிடப்பட்டது. மணக்கோலத்தில் காண வேண்டிய அக் காதலிளம் சிட்டுக்களை பிணக்கோலத்திலாவது ஒன்று சேர்த்தார்களே, அந்த மட்டில் அவர்கள் பெரியவர்கள்தாம்!

வான்முட்ட ஜுவாலை விட்டெரிந்து கொண்டிருந்த அத்தீயின் வெம்மையில் வரட்டுக் கௌரவம், பொறாமை போன்ற சக்திகளால் கற்பாறையாக இறுகிவிட்டிருந்த அவ்விரு வட்டாரத்தினரின் இதயங்கள் அப்படியே உருகி அவர்கள் கண்களினூடாக கண்ணீராக ஓடிக்கொண்டிருந்தது.

சமரசம் உலாவும் அந்த இடத்தின் விசேஷமோ என்னவோ இரு வட்டாரத்தினரும் தம்மைமறந்து ஒன்றுபட்டனர். அந்த ஒற்றுமையுணர்வுக்குப் பாலம் அமைத்த அந்த இளம் உடல்கள் தீயில் கருகிக் கொண்டிருந்தன.

இது நடந்து சில தினங்களுக்குப்பின் இரு வட்டாரத்தினரும் விநாயகர் முன்றிலில்கூடி இறந்த அவ்விளம் காதலர்களின் ஞாபகார்த்தமாக அக்கோயிலின் வடக்குவீதியில் ஒரு மடம் கட்டுவதென்றும், இனி இரு வட்டாரத்தினரும் சேர்ந்து ஒரே திருவிழா செய்வதென்றும் முடிவு செய்தார்கள் என்று கேள்வி.

(யாவும் கற்பனை)

## வீர சுதந்திர..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர்படத்தை வெளியிடவும் ஒவ்வொரு தமிழ்சைவ சங்கங்களும் சபைகளும் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். இற்றைவரையிலும் சிறுபான்மை மக்களாகிய தமிழர்களின் தலைவர்களின் படங்களையோ, சின்னங்களையோ, தமிழர் வாழும் பிரதேசக்காட்சிகளையோ தபால் முத்திரையில் வெளியிடாத அரசாங்கம் நாவலரைத் தேசியவீரராக ஏற்றுக்கொண்டு தபால் முத்திரை வெளியிடுமா என்பது ஆராயப்படவேண்டியவிஷயம். அரசாங்கம் நாவலர் விஷயத்தில் தட்டிக்கழிப்பது துர்அதிர்ஷ்டமே. புதுப்புதுத் தமிழ்அமைச்சர்கள் வந்தவுடன் நாவலர், விபுலானந்தர் முதலியோரது படங்கள் பொறித்த முத்திரைகள் வெளியிடுவோமென்பார்கள். பிறகு மறந்துவிடுவார்கள். இந்த அமைச்சர்கள் கவனத்தை ஈர்ப்பது பொதுமக்கள் அபிப்பிராயமே. பாராளுமன்ற அங்கத்தவர்களும் அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும். ஆகவே நாவலர் வாரம் வருடாவருடம் கொண்டாடும்போது நாவலர் சபையாரும் மற்றும் சங்கங்களும்சபைகளும் அரசாங்கத்தை வற்புறுத்திக்கேட்பது தலையாய கடமையாகும். அரசாங்கமும் தட்டிக்கழிக்கமுடியாது.

## இலங்கை

(7-ம் பக்கத்தொடர்ச்சி )

''இந்த நாடகத்தின் டைரக்ஷன்'' பொறுப்பைத் தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் திரு. 'கே. கே. வி.' ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அறியத்தருகிறோம்', என்று ஓர் அறிவித்தல் தரப்பட்டது. இதுபற்றி திரு. 'கே. கே. வி.' யை சந்தித்துக்கேட்டபோது அவர் சொன்னார்.

''நாடகத் தயாரிப்பாளர் 'டைரக்ஷன்' பொறுப்பை என்னை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டபோது தந்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற அவரால் முடியவில்லை. நாடகத்திற்கு ஏற்ற பெண் பாத்திரங்களை ஒப்பந்தம் செய்யவோ நாடகத்திற்குரிய பிற செலவுகளைச் சமாளிக்கவோ அவரிடம் நிதிவசதியில்லை. தன்னிஷ்டம்போலப் பொருத்தமற்ற நடிக நடிகையரை அடிக்கடி மாற்றியமைத்தமையால் ஒழுங்காகஒத்திகை பார்க்கமுடியாமற்போனது. சில நடிகரிடம் போதிய ஒத்துழைப்பில்லை. வசனங்களில் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டபோதுபெரும்பாலான நடிகர்களும் வசனகர்த்தாவும்கூட ஏற்றுக்கொள்ள ஒரு சிலர்மட்டும் தமிதிஷ்டம்போலப் பழைய வசனங்களையே பேசி நடித்ததால் ஏற்பட்ட கருத்துவேற்றுமை. போதிய ஒத்திகையில்லாது நாடகத்தை மேடையேற்ற ஆயத்தம் செய்தது. என் விருப்பத்திற்கு மாறாகத் துண்டுப் பிரசுரங்களில் என் பெயர் சேர்க்கப்பட்டது ஆகிய காரணங்களினால் நான் டைரக்ஷன் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டேன். தயாரிப்பாளர் தன் சொந்த நன்மைகள் கருதிப் பிரபல்யமான பலரின் பெயர்களையும் துண்டுப் பிரசுரத்தில் வெளியிட்டாரானாலும் அவர்களில் சிலரை நாடகத்தில் பங்குகொள்ளச் செய்யவில்லை.

கண்ணியமான பெரும் புள்ளிகளைக்கொண்ட இலங்கை சைவசித்தாந்தக் கழகம் மனம்வைத்தால் இந்த நாடகத்தை மிகவும் உன்னதமாக மேடையேற்றியிருக்கலாம் - பாவம் தயாரிப்பாளர் திரு. தெட்மணமூர்த்தியின் தலையில் சுமையைப் பொறுக்க விட்டுவிட்டார்கள் போலும்',

— கலைஞன்

## பல்லவர் யார்?

பல்லவம் என்பது அம்பு' பல்லவம் என்பது தளிர் இங்கே செயற்கைப் பொருளாக கூறப்படும் பல்லவம் என்னும் போர்க்கருவியும் இயற்கைப் பொருளாகிய தளிர் போன்றமையால், பல்லவம் எனப்பெயர் பெற்றது, இலக்கண இயல்பே. நாம் ஏன்மலைக்கவேண்டும்? பல்லவம் என்றது தமிழ் மொழியாதலால், இக்கருவியும் தமிழ்நாட்டிலேயே உற்பத்தியாகியது என்பதுதேற்றம், சூடாமணி நிகண்டின் ஆசிரியர். சேர, சோழ, பாண்டிய மன்னர்களுடைய விருதுக்கள் யாவும் கூறியிருந்தும் பல்லவரைப்பற்றிய விளக்கம் எள்ளளவும் தரவில்லை. இவர்களைப் பற்றி கூறும் இலக்கியம் ஒன்றேனும்தமிழ்மொழியில்இல்லாததும் ஒரு காரணம் என்று நாம் யூகிக்கவேண்டியிருக்கிறது. இவ்வாசிரியர் தமது காலத்திற்றானே, வழக்கற்றோ அருகியோ கிடந்த. இயவுள் என்ற சொல்லையும் எமக்குத்தந்து உதவியும், பல்லவர் என்ற ஓர் இனத்தையே அமுக்கியது, அவ்வினத்தின் மீட்சியற்ற மறைவு என்றே நாம்விளங்க நேரிடுகிறது

இறுதி விளக்கமாக நாம் எமது வாசகர்களை வற்புறுத்துவது யாதெனில் வெங்கிமலைச் சாரல்களில் வாழ்ந்த இச்சிற்றினம் தளிர் போன்ற இப்போர்க்கருவியை, தனக்குள்தானே பல நூற்றாண்டுகளாக வைத்திருந்து, பிரயோகித்ததால் மற்றையோர் இவ்வினத்தவரைப் பல்லவர் எனச் சுட்டினர். இது எமது இலக்கணமரபிற்கே அமைவதாகின்றது. பல்லவர் ஈட்டிய வெற்றிகளும் அடைந்த தோல்விகளும், தமிழ்மக்கள் சகித்த இன்னல்களும் பெருமளவேனும், எம்மவர்க்கு அளித்தமுதுசம் போதாதெனினும் எமக்குக்கிட்டிய அத்துணைக்கும், நாம் என்ஞ்ஞான்றும் நன்றிசொல்ல வேண்டும்.

தென்கோவை
— சு. க சுப்பிரமணியம்

## தொழில்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாவலரோ அவருடைய குறைபாடுகளை தங்களுக்கு இடையேயாகுதல் கதைத்துக் கொள்வார்கள். பாடசாலையிலிருந்து விலக வேண்டிய கட்டமும் ஏற்படும். பாடசாலையிலிருந்து விலகியதும் வேறுபாடசாலையில் சேரவோ, தொழில் பழகவோ அல்லது அதற்கான முயற்சியிலோ ஈடுபடுவர். முயற்சி கைகூடினாலும் உடனே நல்ல பலன் கிடைப்பதில்லை.

ஆனால் சனிமேடு சாதாரணமானதாகவும் சனிமேட்டில் ரேகையும், அதற்கடுத்த சூரியமேட்டில் ரேகையுமாகவிருந்தால் நன்மையைக் கொடுக்கும். இவ்வாறு அமையப்பெற்றவர்கள் தங்கள் வாழ்வில் ஓரளவு சுகத்தை அனுபவிக்கின்றனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGAL
Jaffna
Daily 10-00 a. m.
4-00 & 8-00 p. m.
Omar Sharif
Julie Christie
in
DOCTOR ZHIVAGO

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p m.
Poya days 4 shows
Barric Ingham
in
A CHALLENGE FOR
ROBBIN HOOD

ராஜா இரண்டு தினங்கள் மட்டும்
(யாழ்ப்பாணம்) ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
தினசரி 3 காட்சிகள் நடித்த
**செல்லப்பெண்**

ராணி எம்.ஜி.ஆர்—லட்சுமி
(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா — அசோகன்
தினசரி 3 காட்சிகள் நடித்த
**மாட்டுக்கார வேலன்**

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, ...
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்த மனிதன்**
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


# சந்திரனில் விந்தை புரியும் ரஷ்ய 'டாக்ஸி'

மாஸ்கோ, நவம்பர் 20
சந்திரத் தரையில் ரஷ்யாவின் எட்டுச் சக்கர தானியங்கும் வண்டி இன்று நாலாம்நாளாகபலசோதனைகளைச் செய்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

விந்தைச் செயல் புரியும் இந்த 'லூ ஞ ஹோ ட்-1' என்ற டாக்ஸி சந்திரத்தரையில் வேகமாகச் செல்வதாகவும் டாஸ் கூறுகிறது.

ரஷ்யா அனுப்பிய லூனா-17 விண்வெளிக்கலம் சந்திரனில் இறங்கி இந்த எட்டுச் சக்கர 'டாக்ஸி' விடுவித்தது தெரிந்ததே.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 21-11-70

(செய்திகள்: காலை 6-35, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 குரல் வகை, 7-45 இவ்வார பிரமுகர், 8-00 நிலைய ஒலிப்பதிவு, 8-15 பேச்சு, 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.
9-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளருடன், 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர்மலர், 12-00 எமது அதிதி, 1-05 பெண்ணுலகம்.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 பாமாலை, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 சுகாதார நிகழ்ச்சி 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நடித்த
**முகராசி**

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
**பெண்ணே வாழ்க!**

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 9-45 மணிக்கு
★ ஜெய்சங்கர் ★ வாணிஸ்ரீ
★ மனோகர் ★ ஆனந்தன் ★ நாகேஷ்
★ விஜயலலிதா ★ சுந்தரராஜன்
மற்றும் பலர் திறம்பட நடித்த
தேவரின்
**நேர்வழி**
டைரக்ஷன்: எம். ஜி. பாலு இசை: [illegible]


## நகரசபை நியமனத் தாக்கல்

வல்வெட்டித்துறை, வெள்ளி
வல்வெட்டித்துறை நகரசபைத்தேர்தல் நியமனப் பத்திரத் தாக்கல் தேர்தல் அதிகாரி திரு. எஸ். நடராசா முன்னிலையில் நகரசபை மண்டபத்தில் வைத்து தாக்கல் செய்யப்பட்டது.

1-ம் வட்டாரம்: இ சிவதாஸ், ச ரகுநாதன், செ இராசதுரை, சீ இரத்தின சிங்கம்.

2-ம் வட்டாரம்: ச அருளம்பலம், த சுந்தரமணி, பொ தனபாலசிங்கம், அ சிவானந்தம்.

3-ம் வட்டாரம்: தி வேலுப்பிள்ளை, இ யோகானந்தராசா.

4-ம் வட்டாரம்: இ கதிராமர், சி புவனேஸ்வரராசா, பொ வேலும்மயிலும்.

5-ம் வட்டாரம்: து நவரத்தினம், சோ சிவராசா-

6-ம் வட்டாரம்: பொ திருஞானசம்பந்தர், வி இரத்தினவடிவேல், எம் யோகச்சந்திரன், ஆ இரத்தினசிங்கம்.

7-ம் வட்டாரம்: சு இராசேந்திரன், எஸ் அருணாசலம், சோ சுந்தரலிங்கம், ச நாராயணசாமி, கோ கருணாந்தராசா

8-ம் வட்டாரம்: சி கந்தையா, நா பாக்கியலிங்கம்.

9-ம் வட்டாரம்: இ மகாலிங்கம், வி இரத்தினர், சி ஈஸ்வரலிங்கப்பெருமாள், பா குகன்.

## அருணகிரிநாதர்விழா

மாவிட்டபுரம், வெள்ளி
யாழ். இசை அபிவிருத்திச் சங்க ஆதரவில் நடைபெறும் அருணகிரிநாதர் விழா 2-ம் நாள்நிகழ்ச்சி யாழ் கில்னர் மண்டபத்தில் இன்று நடைபெறுகிறது. மாவிட்டபுரம் என் எஸ் ருத்திராபதிக்கு கோப்பாய் எம் பி கதிரவேலுப்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## இந்திராவின் 53-வது பிறந்த தினம்

புதுடில்லி, நவ. 20
பிரதமர் இந்திராகாந்தி தமது 53-வது பிறந்த தினத்தை அமைதியாக நேற்றுக் கொண்டாடினார். பல தலைவர்கள் நேரில் சென்று இவருக்கு வாழ்த்துக்கள் கூறினர்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிகள்
7 மாத ஆர். ஐ. ஆர், ஒஸ்டர்லொப், ஒஸ்டர் வைட். வைட்லெக்ஹோன் 50 விற்பனைக்குண்டு. சில முட்டை இடுகின்றன. விலை 775/-. பகுதிகளாகவும் விற்கப்படும். முந்துபவருக்குச் சலுகை செய்யப்படும். M. S. ஐயூப், 6, ஆசாத் வீதி, சோனகதெரு. யாழ்ப்பாணம். 2519

யாழ்ப்பாணம் -நல்லூரில் பெரிய வளவும், புதியவீடும் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு கிடைக்கும். தொழிற்சாலைகள் - பண்ணைகளுக்கு தகுதியானது. எழுதுங்கள். வெஸ்டன்றேட்ஸ். தபால்பெட்டி-54, யாழ்ப்பாணம். 2356

கொழும்புத்துறை யோகர் சுவாமிஜியின் சமாதிக்கு அண்மையில். சுவாமியார் வீதியில் உபதபாற்கந்தோர். புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றிற்குமிக அண்மையில் கொழும்புத்துறை - யாழ்ப்பாணம் பஸ் வீதியில் உள்ள 4 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு பரப்பு 6,500 ரூபாவுக்கு மேலாகக் கோருபவர்கள் விண்ணப்பிக்கவும்- 25A புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 2520

### விற்பனைக்கு

நாவற்குளி புகையிரத நிலையத்திற்கு எதிரில் கட்டடத்துக்கான பத்துப் பரப்பு நிலம். த லான்ட் இன்வெஸ்ற்மென்ற்ஸ், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம் 2522

கொழும்புத்துறை:- ஆரியர் வீதி, 2 1/2 பரப்புக் காணியில் பெரிய கல் வீடு, கிணறு, கராச், மின்சாரம், சுற்றுமதில், நல்ல தண்ணீர் றோட் அருகில். லான்ட் இன்வெஸ்ற்மென்ற்ஸ், 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2514

### கேள்வி விளம்பரம்

நாவலடி இன்பருட்டிப் பிள்ளையார் திக்கம் றோட்டு வேலைக்கு 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ந் திகதி காலை 10 மணி வரையும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 27-11-70 நண்பகல் 12 மணி வரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. மாணிக்கம்
தலைவர்
கட்டைவேலிக் கிராமசபை.
அல்வாய்,
18-11-70. 2562

### சாவகச்சேரி நகரசபை கேள்விப்பத்திர விளம்பரம்

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பொது மலகூடம் நிறுவுவதற்கு இந்நகரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் அழைக்கப்படுகிறது.

கேள்விப் பத்திரம் 3-12-70ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கொடுக்கப்படும். கேள்விப் பத்திரம் காகித உறைக்குள் வைக்கப்பட்டு, உறையின் மேற்பக்கத்தில் இடது புறமாக இவ்வேலைக்குரிய பெயரைஎழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகு போட்டு அடையாளம் வைத்து, 1970-ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 4-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்குமுன் இந்நகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடவேண்டும். அல்லது பதிவு செய்து அனுப்ப வேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறியவேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சு. கனகரத்தினம்
தலைவர்
நகரசபை,
சாவகச்சேரி.
நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 12-11-70.
2561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்

எப்போதும் தோல்வி அடையாதவை அன்பும், உண்மையுமே. இவற்றை வாழ்வில் கடைப்பிடித்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

0 0 0

உண்மை, கண்ணியம், தூய்மை இவற்றை நம்பிக்கையுடனும், பலத்துடனும் உறுதியுடனும் கடைப்பிடித்தால் உலகத்தார் யாவராலும் விரும்பப்படுவதுடன் இறைவனே நேரில் வந்து ஆட்கொள்ளுவார்.

0 0 0

பெரிய வேலைகளைச் செய்ய ஆற்றல்பெற வேண்டுமாயின் முதலில் பொறுமையை ஒழிக்கவேண்டும்.

0 0 0

எம்மிடையே வளர்ந்துவரும் பலவீனம், பகைமை, ஈரமற்ற இதயம் ஆகிய குறைபாடுகளை நீக்கி எல்லாஜீவராசிகளும் இறைவன் படைப்பு என எண்ணி அவைகளை நேசிக்கவேண்டும். அப்போதுதான் இறைவனும் எம்மை நேசிப்பான்.


## முக்கிய அறிவித்தல்

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால மேற்கொண்டு விளம்பரம் எதுகாரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

**ஆர். வி. ஜி. பீடி**

'உற்பத்தியாளர்'

47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.


# மன்னார் தேர்தல் ஆட்சேப மனு 29-ல் கொழும்பில் மேல் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணை நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் முடிவடைந்தது. இவ்வழக்கு விசாரணை இம்மாதம் 29-ம் திகதி தொடர்ந்து கொழும்பு தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நடைபெறும்.

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் ஆரம்பமானபோது 1-வது எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எம். திருச்செல்வம்தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்தினார்.

அட்வகேட் திருச்செல்வத்தின் தொகுப்புரை முடிவடையாததால் இம்மாதம் 29-ம் தேதி கொழும்பில் அவர் தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்துவார். அதன் பின், மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் மொகமட் கியு. ஸி. தொகுப்புரை நிகழ்த்துவார். அதன் பின் தீர்ப்பு வழங்கப்படும்.

எதிர் மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எம். திருச்செல்வம் நேற்றுத் தொகுப்புரை நிகழ்த்திய போது கூறியதாவது:

மனுதார், தனது பெயர் செய்யது அப்துல் ரஹீம் என இங்கு சாட்சியமளித்துள்ள போதுதெரிவித்தார். வாக்காளர் இடாப்பில் அவரது பெயர் மொகமட் கசிம் செய்யது அப்துல் ரஹீம் என இருக்கிறது. பிரஜாவுரிமை பற்றிய வழக்கில் கேள்வி எழுந்துள்ளதாலேயே இப்படிக்கூறியிருக்கிறார். நிலைமைக்கேற்றபடி தம்மைச் சரிக்கட்டிக்கொள்ளக்கூடியவராக இருக்கிறார். தமது தேவைக்கேற்றபடி, நேரத்துக்கு நேரம் நடந்துகொண்டிருக்கிறார்.

மாட்டிறைச்சிக் கடை ரெண்டர் வழங்கப்பட்ட விஷயத்தில், எனது நிலைமை என்னவெனில், ஆரம்பம் முதல், கூடிய கேள்விக்காரருக்கு ரெண்டர் கொடுப்பதில்லையென்பதும், தனக்கு சார்பானவருக்கு கொடுக்க வேண்டும் என்பதும், அவருடைய நோக்கமாக இருந்ததென்பது அவருடைய சாட்சியங்கள் பற்றிய விசாரணையிலிருந்து தெரிகிறது. இந்த சாட்சி, தொல்லைகள் ஏற்படும் போதெல்லாம், நேரத்துக்கு நேரம், தமது நிலைமையை மாற்றியிருக்கிறார். அவர் சபையைத் தவருக வழிநடத்திச் சென்றுள்ளார் என்பதும் தெரிகிறது.

இவ்வழக்கு யாழ்ப்பாணத்தில் 22 தினங்களாக விசாரணைசெய்யப்பட்டது சுமார் 800 தாள்களில் விசாரணை பதிவாகியது.

### மரம் நாட்டுவிழா பின்போடப் பட்டுள்ளது

வேலணை, சனி

வேலணை கலைமகள் விவசாயக்கழகமும் மத்தியஇளைஞர் விவசாயக் கழகமும் இன்று நடாத்தவிருந்த மரம்நாட்டு விழாவை பின்போட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


### திருமண அழைப்பு

மிருசுவில் வடக்கு திரு த. ஐயம்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரன் திரு. ஐ. சுப்பிரமணியம் (உபதபாலதிபர், மிருசுவில்) அவர்கட்கும், சங்கானை - மேற்கு, பண்டத்தரிப்பு திரு. நடராசா - திருமதி மங்கையற்கரசியின் புத்திரி புனிதவதியார் அவர்கட்கும் 26-11-70 வியாழக்கிழமை இரவு 7-9 மணிக்கிடையில் உள்ள சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். உறவினர் நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 2418

### திருமண அழைப்பு

தெய்வசிகாமணிசர்மா


பாலாபரமேஸ்வரி

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம்8-ந் திகதி(23-11-70) திங்கட்கிழமை பகல் 10-00 மணியளவிலுள்ள சுபமுகூர்த்தவேளையில் எமது புத்திரி பாலா பரமேஸ்வரிக்கும் முனீஸ்வரம் தேவஸ்தானம் இரகுநாதக்குருக்கள் தெய்வசிகாமணி சர்மா அவர்களுக்கும், நவாலி முருகமூர்த்தி ஆலயத்தில் திருமங்கலிய தாரணம் நிகழும். உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐ. சோமசுந்தரக் குருக்கள்,
நவாலி. 2524


இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு [illegible] 21ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ரமழான் குரலொலி



அயலவனை தன்கெடுதியினுல் அச்சமின்றி அமைதியோடு வாழவிடாதவன் சுவனம் பிரவேசிக்கமாட்டான்.
— நபிகள் நாயகம்

அண்டை அகத்துறைவான் அச்சமற்று வாழவிடான் விண்டலத்துச் சென்றடையான் வீடு.
— மௌலானா உமர் ஹஸரத்

கெட்ட (ஹறுமான) வழியில் சம்பாதித்த பணத்திலிருந்து முளைத்த மாமிசம் சுவனம் பிரவேசியாது- கெட்டவழிப் பணத்தாலுருவான மாமிச மனைத்திற்கும் நரகமே தகுந்த இடம்.
— நபிகள் நாயகம்

தவறிய வழியிலீட்டும் தனத்தினுல் தழைத்த தசை வீழ்ச்சியே யல்லாதிறை வெகுமதி இடம் சேராது.
— அபுல் ஹசன்

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள்:-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-26 |

## "தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்களப் பொலிஸாரை அனுப்பாதீர்"

### ஆட்சிமன்றத்தில் எஸ். ஜே. வி.

கொழும்பு, வெள்ளி

தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்களப்பொலிசாரை அனுப்புவதுபற்றி தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்இன்று ஆட்சிமன்றத்தில் பலத்த ஆட்சேபம் தெரிவித்தார்

"இவ்விதம் சிங்களப் பொலிசாரை அனுப்புவதால் தமிழ் மக்கள் வாக்குமூலம்கொடுப்பதில்பெருந்த கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். மக்களுக்குப் புரியாத மொழியில் வாக்குமூலங்கள் பதியப்படுவதால் வழக்குகளின்போது அவர்கள் வீண் அவதிக்குள்ளாகிறார்கள். தாம் சொன்னது பதியப்பட்டதா என்று இந்தப் பொதுமக்கள் அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது. இவ்வித காரணத்தால் பொலிஸாரும் தமதுகடமைகளை ஒழுங்காக நிறைவேற்றமுடியாத சூழ்நிலை இருக்கிறது. பொலிஸ் படையில் போதியளவு தமிழர்கள் தெரிவு செய்யப்படவில்லை என திரு. செல்வநாயகம் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பொலிஸ் அதிகாரிகள்மிருகத்தனமாக நடந்துகொள்வதும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனறும் அவர் சொன்னார். (சி. பி. ஏ.


ஈழநாடு

சாதாரண வருடம் கார்த்திகை மாதம்
6-ந் திகதி [21-11-70]


## சிவனுண்டு பயமில்லை

ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் சைவத்தையும் தமிழையும் காத்த மாவீரரான நாவலர் பெருமானின் குருபூசையை இருநாடுகளும் நன்றியுடனும் பக்தியுடனும் இன்று கொண்டாடுகின்றன.

உலகத் தமிழாராய்ச்சி விழாவின்போது சென்னை கடற்கரைத் தெருவில் மற்றவர்களுடன் சேர்ந்து இவரது உருவச்சிலையையும் வைக்கவில்லை என்று அன்று ஈழத்தில் நாம் ஆத்திரப்பட்டோம். நல்லவேளை அவர்கள் வைக்கவில்லை, வைத்திருந்தால் நல்லூரில் அவருக்காக ஓர் அழகிய நிலையம் கட்டி அவரைக் கோவில் செய்திருப்போமா? நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற வாக்கு உண்மையாவதைப் பார்க்கிறோம். இனி அங்கே கோவில் கட்டி வைத்தால் வைக்கட்டும். இன்றேல் காக்கை எச்சமிடும்படியாக அங்கு நாவலர் சிலையை வைப்பது அவரை அவமதிப்பதாகும்.

கொழும்பிலே இம்முறை நடைபெற்ற நாவலர் விழாவில் சிங்கள பௌத்த, கம்யூனிஸ்ட் அமைச்சர்களும கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகையில் நாவலர் பெருமான் ஒரு தேசிய வீரரென்றும் அவரது நூல்களை சிங்களத்திலும் மொழிபெயர்க்க ஆவன செய்வதாகவும் கூறினர்கள். அப்பெருமானின் பெருமை பலரும் அறியும்படி வளர்ந்தோங்கி வருகின்றது. அவரது உண்மைத் தொண்டின் தியாகத்தின் பயனே இது. இனி வர வர அதிகம் வளரும் என்பதில் ஐயமில்லை

பேசிப் பாராட்டி கைதட்டி விட்டுச் செல்வதில் பயனில்லை. 'சிவனுண்டு பயமில்லை' என்ற குறிக்கோளுடன் அவர் தியாகவாழ்வு வாழ்ந்ததுபோல் நாமும் தெய்வத்தை (அன்பை) மறக்காமல் வளர்ப்பதின் மூலமே யாருக்கும் எதற்கும் அஞ்சாதவர்களாக வீரவாழ்வு வாழ முடியும். அப்படி வாழ்வதே அவருக்கு உண்மையான வழிபாடுமாகும்.


### திருமண அழைப்பு

ஜெகதீசன் புஷ்பராணி

எமது புதல்வன் திருநிறைசெல்வன் ஜெகதீசன் அவர்களுக்கும், யாழ். நாவலர் வீதி ஏ. பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வி திருநிறைசெல்வி புஷ்பராணி அவர்களுக்கும் (23-11-70) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கும் 11-00 மணிக்குமிடையில் நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் நிகழும். மாலை 5 மணியளவில் மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும். வைபவங்களில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

—எஸ். முத்துக்குமாரு தம்பதிகள்,
5/1 ஹாதிஅபூபக்கர் வீதி
யாழ்ப்பாணம்.

2153


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org